# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

சுடர் 32 கதிர் 284 ஆவணி 21ஆம் நாள் புதன்கிழமை 06 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


# ஒரு வருடத்துள் மாகாணத் தேர்தல்

## மாற்றத்துடன் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற அரசு முடிவு

கொழும்பு, செப்ரெம்பர் 6

ஒரு வருட காலத்துக்குள் 9 மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்தும்வகையில், அரசமைப்பின் 20ஆவதுதிருத்தத்தைவடிவமைப்பதற்கு கொழும்பு அரசு இணங்கியுள்ளது. அரசின் இந்த முடிவை சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய உயர் நீதிமன்றத்தில் இன்று அறிவிப்பார்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்துதலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்க நேற்று இரண்டாவது நாளாகவும் அலரி மாளிகையில் ஆலோசனை நடத்தினார். அந்தக்கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

20ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியதினத்திலிருந்து ஒருவருடத்துக்குள் 9 மாகாண சபைகளையும் கலைத்துத் தேர்தல்களை நடத்துவது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தேர்தல்திகதியைத்தீர்மானிக்கும்அதிகாரத்தைதேர்தல்ஆணைக்குழுவுக்குவழங்கவும் இணக்கம் எட்டப்பட்டது. முன்னர் அந்த அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே வழங்கப்படும்எனத்தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மாகாணசபையின் 5ஆண்டுஆயுள்காலம்முடிவடைவதற்கு முன்னர்சபைகலைக்கப்பட்டால், எஞ்சிய காலத்துக்கான ஆட்சியாளரரைத்தெரிவு செய்ய இடைக்காலத் தேர்தல் நடத்தப்படும். இவற்றுக்கு ஏற்றவகையில்உத்தேச 20ஆவதுதிருத்தத்தில்மாற்றங்கள்செய்யப்படவுள்ளன.

அரசின் இந்தப் புதிய முடிவை, சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய உயர்நீதிமன்றத்துக்கு அறிவிப்பார். 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலைஒரேநாளில்நடத்துவதற்குஏற்பாடு செய்யும் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவும்எதிர்ப்புமாககலப்புவெளிப்படுத்தல்களே இருந்தன. சில மாகாணசபைகளில் இந்தத்திருத்தத்துக்குஎதிராகத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்ப்புக்களை அடுத்து >> 25

## ரி.ஐ.டியின் நடவடிக்கையில் அரசியல் கைதிகள் சந்தேகம்

### தமது வழக்கை இடமாற்ற நாடகமாடுவதாகவும் விசனம்

யாழ்ப்பாணம், செப். 6

"சாட்சிகளில் ஒருவர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். அப்படியிருக்கும்போது சாட்சிகள் அச்சுறுத்தப்படுவதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் எப்படிக் கூற முடியும்? 4 மாதங்களுக்கு முன்னர், சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் என்று கூறுமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவர்களிடம் கேட் >> 25

## இடைக்கால அறிக்கை செப்ரெம்பர் இறுதியில் நாடாளுமன்றம் வருகிறது

கொழும்பு, செப். 6

பல தரப்புக்களாலும் எதிர்பார்க்கப்படும், புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இந்த மாதத்தின் மூன்றாவது வாரத்தில் அரசியல் நிர்ணய சபைக்கு (நாடாளுமன்றுக்கு) சமர்ப்பிக்கப்படவுள்ளது. வழிநடத்தல் >> 25

## மகிந்த ஆதரவுக்கட்சியில் ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள்

### 40பேர் நேற்றைய தினம் இணைவு

கொழும்பு, செப். 6

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 40 பேர் நேற்று உறுப்பினர்களாக இணைந்தனர். அவர்களில் பலர் ஈ.பி.டி. >> 25

## அன்னதானக் கந்தன் தேரில் பவனி



வரலாற்று சிறப்புமிக்கசெல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. சந்நிதி வேலவன் தேரில் ஆரோகணித்து ஆயிரக்கணக்கான அடியவர்களுக்குக் காட்சியளித்தார். (வ-37) (மேலும் படங்கள் பக். 3)

## "நான் கூடவே இருப்பேன்" ஜெகத்துக்கு கோத்தா ஆறுதல்

கொழும்பு, செப். 6

"எதற்கும் அஞ்சவேண்டாம். போர்க்குற்ற விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டிவரின் உங்களுடன் நான் இருப்பேன்" என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு ஆறுதல் கூறியுள்ளார் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச.

பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவராக செயற்பட்ட ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு >> 25



யாரு எதிரி, யாரு நண்பன் என்கிறதையே கண்டுபிடிக்க முடியலை போங்க...!

## வடக்கில் பொன்சேகாவுக்கு மாலை அணிவிக்கவேண்டும்

### முதலமைச்சர் விக்கி யாழ்ப்பாணத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 6

"தெற்கில் சரத் பொன்சேகாவின் கொடும்பாவி எரிக்கின்றார்கள் என்றால் வடக்கில் அவரின் படத்துக்கு மாலை போட வேண்டும்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், புதிய அரசமைப்புத் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

"தமிழ் மக்களின் பேரியக்கமாக இயங்க வேண்டிய தமிழ் மக்கள் பேரவை இரண்டு பிரமாண்டமான எழுக தமிழ் கூட் >> 25

## பொன்சேகா மீது சம்பிக்க ரணவக்க வெடுவெடுப்பு

கொழும்பு, செப். 6

"போர்க்குற்றங்கள் தொடர்பில் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய மீது ஒரு விரலை நீட்டினால் மீதி நான்கு விரல்களும் தன் பக்கம்தான் திரும்பியுள்ளன என்பதை சரத் பொன்சேகா மறந்துவிடக் கூடாது"

இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க.

இது தொடர்பில் அவர் 'உதயன்' பத்திரிகைக்கு மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினர் மட்டுமா போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர்? விடுதலைப்புலிகள் அமைப்பின் >> 25

## சரத் பொன்சேகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### மகிந்த தலைமையில் இன்று அவசர கூட்டம்

கொழும்பு, செப். 6

முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு மகிந்த அணி தயாராகி வருகின்றது. ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் பங்காளிக்கட்சித் தலைவர்கள் கொழும்பில் இன்று புதன்கிழமை கூடி ஆராயவுள்ளனர். >> 25

பொன்சேகா - ஜெகத் விவகாரத்தை ஆராய

## மைத்திரி தலைமையில் இன்று சிறப்பு அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, செப். 6

கூட்டு அரசின் பயணம், சரத் பொன்சேகாவின் ஜெகத் மீதான குற்றச்சாட்டு உள்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கட்டாயம் பங்கேற்குமாறு அமைச்சர்கள் அனைவருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று பௌர்ணமி விடுமுறை என்பதால் எதிர்வரும் 12 ஆம் திகதியே நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அரசியல் களத்தில் நெருக்கடியான சூழ்நிலை உருவாகி >> 25




# உறவுகளைத் தொலைத்த இடத்தில் நினைவு கூர அனுமதியுங்கள்

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

மட்டக்களப்பு,செப்.6

போர்க்காலத்தில் எமது உறவுகள் பலரை பல இடங்களில் தொலைத்துள்ளோம். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். சிலர் கொல்லப்பட்டுள்ளனனர். அவர்களைத் தொலைத்த இடங்களில் நினைவு கூருவதற்கு அனுமதி தாருங்கள்.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.டினேஸ்காந் வேண்டுகோள் விடுத்தார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சமடைந்தவர்களில் இராணுவத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 27ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களில் பலர் பல்வேறு இடங்களில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அந்தப் படுகொலைகளை வருடாவருடம் அந்தந்த இடங்களில் கடைப்பிடித்து வருகின்றோம். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்குப் பல்கலைக்கழகத்திடம் அனுமதி கோரினோம். ஆனால் பதில் கிடைக்கவில்லை. இது வேதனைக்குரிய விடயம். எமது உறவுகளை இழந்துள்ளோம். இதுவரை காணாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வாழ்வாதாரத்தைக்கூட கொண்டு செல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பாகக் கூட்டரசு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்த நிலையில் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட இடங்களில் நினைவு கூரலை நடத்துவதற்கு பலர் மறுப்புத் தெரிவிக்கின்றனர். கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் அதே நிலமையே. இனிவரும் காலங்களில் இந்த நிகழ்வைப் பல்கலைக் கழக வளாகத்தில் நடத்துவதற்கு நிர்வாகம் அனுமதி வழங்க வேண்டும் - என்றார். (ஐ)



## காணாமல் ஆக்கப்பட்ட

# உறவினர்களுக்காக ஆலயத்தில் வழிபாடு

மட்டக்களப்பு,செப்.6

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 27 ஆவது நினைவு தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. உறவினர்கள் ஒன்றுகூடி ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டு தமது உறவினர்களுக்காக சுடரேற்றிப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலின் போது, அங்கு தஞ்சமடைந்திருந்தோரில் 158 ஆண்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் எவரும் இதுவரை வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர். (ஐ-47)

# பஸ் - ஜீப் மோதி 17 சிப்பாய்கள் காயம்

கொழும்பு,செப்.6

பேருந்தும் இராணுவ வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. அதில் படைச்சிப்பாய்கள் 17 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து ஹோமாகம கெந்தலந்தப் பகுதியில் நேற்று அதிகாலை நடந்தது.

ஆடைத்தொழிற்சாலையின் பணியாளர்களை ஏற்றிக்கொண்டு பிட்டிபனவிலிருந்து ஹோமாகம நோக்கிப் பயணித்த பேருந்தை, பின்னால் வந்த இராணுவ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.

இராணுவ வாகனத்தில் 19 பேர் பயணித்துள்ளனர். அவர்களில் 17 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பேருந்தில் பயணித்தவர்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி2)



# பெண்போன்று ஆடையணிந்து நடமாடிய ஆண் அடித்துக் கொலை!

கொழும்பு, செப். 6

தம்புள்ள நகர பிரதேசத்தில் பெண்களைப் போல் ஆடை அணிகலன்கள் அணிந்து இரவு வேளையில் நடமாடிய இளைஞர் அடித்து கொல்லப்பட்டார். 34 வயதான சனத்குமார என்ற இளைஞரது சடலம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை மீட்கப் பட்டது.

இந்த நபர் இரவு வேளையில் பெண்களை போன்று ஆடை மற்றும் அணிகலன்கள் அணிந்து நடமாடுபவர் என கூறப்படுகின்றது. அதற்காக ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் இவர் விடுவிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சடலமாக மீட்கப்பட்டபோது இவர் பெண்களை போன்றே ஆடைகளை அணிந்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவரைத் தாக்கிக் கொலை செய்தவர்கள் இனங்காணப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் தடி ஒன்றும் அந்தப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# கதிர்காமத்துக்குப் புனித வேல் நடைபவனி நேற்று ஆரம்பம்



திருமலை,செப்.6

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் இருந்து கதிர்காமத்துக்குப் புனித வேலை எடுத்துச் செல்லும் சம்பிரதாய நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயப் பரிபாலன சபையின் செயலாளர் ப.பரமேஸ்வரன் நடை பவனியை ஆரம்பித்தார். இந்த நடைபவனி தொடர்ந்து 5 நாள்கள் இடம்பெற்று கதிர்காமத்தைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

வெருகலம்பதி சிறி சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, திருக்கோணேஸ்வரத்திலிருந்து கதிர்காமம் ஆலயத்துக்குப் புனித வேல் வருடாந்தம் எடுத்துச் செல்லப்படும்.

அதற்கான சம்பிரதாய நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டது. புனித வேல் கதிகாமம் சென்றடைந்த பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (ஐ-40)

# வவுனியாவில் விபத்து: பொலிஸ் அதிகாரி காயம்

வவுனியா,செப்.6

முச்சக்கர வண்டியுடன் பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பொலிஸ் அதிகாரி காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து வவுனியா நகர்ப்பகுதியில் நேற்றுக் காலை நடந்தது.

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவழியாக ஏ9 வீதியை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டி, மூன்றுமுறிப்பு நோக்கிச் சென்ற பொலிஸாரின் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ)

# மின்கம்பத்துடன் மோதியது ஓட்டோ

## மூவர் படுகாயம்

மட்டக்களப்பு,செப்.6

வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் மூவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து மட்டக்களப்பு கல்லடிப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடந்தது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஆலயத்துக்குச் சென்றுவிட்டு முச்சக்கர வண்டியில் வீடு திரும்பியவர்கள் விபத்தில் சிக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்புப் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் முச்சக்கரவண்டி முற்றாகச் சேதமடைந்துள்ளது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ,47)





மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. (ஐ-46)

# இந்தியாவுடனான உறவுக்கு மலையகமே எடுத்துக்காட்டு

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு,செப்.6
இலங்கை இந்தியாவுக்கான தொப்புள் கொடி உறவை எடுத்துக்காட்டுவதற்கு மலையகமே சிறந்த உதாரணம். இங்குள்ள இந்திய வம்சாவளி மக்களால் இந்தியாவுக்கான நல்லுறவை நாங்கள் பேணி வருகிறோம். இவ்வாறு தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

ஈடோஸ் அமைப்பின்(இலங்கை பொருளாதார அபிவிருத்தி) 12 ஆவது ஆண்டு விழா மஸ்கெலியாவில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
மலையகத்தில் வாழ்கின்றவர்களுக்கு அவர்களின் வரலாறு தெரியவில்லை என்றால் ஏனையவர்களுக்கு எவ்வாறு தெரியும். மலையகம் என்றால் தேயிலைத் தோட்டங்களும் இறப்பர் தோட்டங்களும் நிறைந்தது என்று தான் எண்ணுகின்றார்கள். ஆனால் மலையகத்துக்கு வருகின்றவர்கள் பல்வேறு இடங்களைப் பார்வையிட செல்வதற்கும் அதன் அழகை இரசிப்பதற்கும் வித்திட்டவர்கள் நமது மூதாதையர்கள்.

கிளிநொச்சியில் ஒரு இலட்சம் இந்திய வம்சாவளி மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் எவ்வாறு தொப்புள் கொடி உறவு இருக்கின்றதோ, அதேபோன்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தொப்புள் கொடி உறவு நீண்டுள்ளது.

மலையகத்திலிருந்து கிளிநொச்சிப் பகுதியில் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளி மக்கள் வைத்தியர்கள், பொறியியலாளர்கள் என பல்வேறு உயர் தொழில்களில் உள்ளனர்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றில் மக்களுக்காகப் போராடிய தலைவர்கள் நாடாளுமன்றுக்குள்ளேயே சத்தியாகிரகங்கள் போராட்டங்கள் என பல்வேறு போராட்டங்களை மக்களின் உரிமைக்காக நடத்தினார்கள். அவர்களை நாடாளுமன்றத்தில் இருந்து தூக்கி வெளியில் எறிந்த காலமும் உள்ளது.

ஆனால் இன்று அவ்வாறான நிலை இல்லை. உரிமைகளை மக்கள் வெளியிலிருந்து கேட்கும் நிலையே உருவாகியுள்ளது.

மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வு நிலையை நினைத்தால் வேதனைக்குரிய விடயமாகவே உள்ளது. இவர்களுடைய உட்கட்டமைப்பு வசதிகள் கல்வி மற்றும் தொழில் உரிமைகள் என பலதரப்பட்ட உரிமைகளைப் பெறவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்திய வம்சாவளி மக்களாகிய மலையக மக்கள் அவர்களின் வாழ்வியலில் சகல விடுதலையும் பெற்று வாழக்கூடிய நிலை இன்றும் இல்லை. என்றார்.

இந்த நிகழ்வில் லண்டனில் இருந்து வந்த சட்டத்தரணி பரமசிவம் ஸ்ரீதரன், அம்பகமுவப் பிரதேச சபையின் முன்னால் தலைவர் வெள்ளையன் தினேஸ், சிறு பராய கல்வி அபிவிருத்தி நிலைய சிறார்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ஐ)

# வெலிக்கடைச் சிறையில் மோதல்: முதன்மைச் சாட்சி வீடு மீது சூடு

கொழும்பு,செப்.6
வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் முதன்மைச் சாட்சியின் வீட்டின்மீது இனந்தெரியாதோர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

மொறட்டுவ லுனாவைப் பகுதியைச் சேர்ந்த சுதேஸ் நந்திமல் என்பவரது வீட்டின்மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உந்துருளியில் வந்த இரண்டு பேர் இந்தத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். தாக்குதல் இடம்பெற்ற சமயம் சுதேஷ் நந்திமல் வீட்டில் இருந்துள்ளார். அவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அவரது வீட்டு வாசலில் சில துப்பாக்கிச் சன்னங்கள் பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக மொறட்டுவப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்தச் சம்பவத்துக்கு இலங்கை மனித உரிமைகள் கேந்திர நிலையம் கண்டனம் தெரிவித்துள்ளது. "வெலிக்கடைச் சிறைச்சாலைக் கொலைகளின் முதன்மைச் சாட்சிமீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளமையைக் கண்டிக்கிறோம். வெலிக்கடைச் சம்பவத்தை மூடி மறைப்பதற்கு கடந்த அரசைப் போன்றே தற்போதைய அரசு முயற்சித்து வருகின்றது என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர். 40 பேர் வரையில் காயமடைந்தனர். இந்த சம்பவம் இடம்பெறும் வேளை வெலிக்கடைச் சிறையில் இருந்த சுதேஷ் நந்திமல் முதன்மைச் சாட்சியாக உள்ளார். படுகொலை தொடர்பான வழக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் பிரிவில் வைத்து சுதேஷ் நந்திமல் நேற்று முன்தினம் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கி இருந்தார். அதன்போது, தன்னைக் கொலை செய்வதற்கான சூழ்ச்சி இடம்பெறுவதாக அவர் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது.

(ஐ)

# விபத்தில் ஐவர் காயம்

கொழும்பு,செப்.6
மின்கம்பத்துடன் மோதிய வான், தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது. அதில் சிறுவர்கள் உட்பட ஐவர் காயமடைந்தனர். இந்த விபத்து ஊங்கம, லுனம பகுதியில் நேற்று நண்பகல் நடந்தது.

பத்தேகமவிலிருந்து எம்பிலிபிடி நோக்கிப் பயணித்த வானே விபத்துக்குள்ளா னது. சிறுவர்கள் உட்பட 13 பேர் வானில் பயணித்துள்ளனர். விபத்தில் சிறுவர்கள் இருவர் காயமடைந்தனர்.

விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)



தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் வருடாந்தத் தேர்த்திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா ஒலியுடன் நேற்றுச் சிறப்புற இடம்பெற்றது. குடா நாட்டின் பல பிரதேசங்களிலும் இருந்தும் பெருமளவு காவடிகள் ஆலயத்தை நோக்கி வந்தன. பக்தர்கள் தமது நேர்த்திக்கடனை பல வழிகளில் நிறைவேற்றினர். (ஐ-9,173)



# புதிய அரசமைப்பை உருவாக்க கடும் தர்க்கம் புரிபவர் சம்பந்தன்

## பேரவைக் கூட்டத்தில் சித்தார்த்தன் தெளிவுரை

யாழ்ப்பாணம், செப்.5
அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான கலந்துரையாடல்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடும் தர்க்கம் புரிவதையும், வாதிடுவதையும் கண்டுள்ளேன் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.
தமிழ்மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கையின் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் கூற்றுக்கள் முரண்பட்டவையாகவும், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புறம்தள்ளி வைப்பனவாகவும் இருக்கின்றன. அரசமைப்புத் தொடர்பில் அரசு ஆர்வமாக உள்ளபோதும் கூட்டு எதிரணி அதற்கு எதிரான மனப்பான்மையில் உள்ளது. புதிதாகக் கொண்டுவர எத்தனிக்கப்படும் தொகுதிவாரித் தேர்தல் முறை பெரும்பான்மைக் கட்சிகள் சிறுபான்மைக் கட்சிகளில் தங்கி நிற்கும் நிலைமையை இல்லாது செய்யும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.
நாம் சமஷ்டிக் கோரிக்கையுடன் 40 ஆண்டுகளாகக் காத்திருக்கின்றோம். சிங்கள மக்கள் 40 ஆண்டுகள் ஒற்றையாட்சிக்குள்ளேயே வாழ்கின்றனர். அதற்கே வாக்களிக்கின்றனர். இப்படியான நிலைமையில் ஒரு முடிவை எட்டுவது என்பது சவாலான விடயமாகவே உள்ளது.
இன்னும் 10 தினங்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைக் குழுவின் அறிக்கையுடன், சுதந்திரக் கட்சியின் இணைப்பும் வரும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைப்பும் வெளிவரும். அவை ஆராயப்பட்டு அரசமைப்புச் சபையில் வரைந்து நிறைவேற்றப்படும். பின்னர் நாடாளுமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கும் நிறைவேற்றப்பட்டால் மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும்.
சிங்கள மக்களின் சம்மதத்துடனான தீர்வே நிலைக்கும் என்று இரா.சம்பந்தன் நம்புகின்றார். அது வருமா? அல்லது வராதா? என்பது எனக்குத் தெரியாது. எனினும் அதற்காகச் சம்பந்தன் கடுமையாக முயற்சிக்கின்றார். பன்னாடுகளின் அழுத்தம் மூலம் அரசமைப்பு வரைவை உருவாக்க முடியும் என்று நான் நம்பவில்லை. அவற்றின் முழுக் கவனமும் தமது நன்மையைக் கொண்டதாகவே இருக்கும். தற்போதுள்ள அரசு கவிழக் கூடாது என்பதில் கவனமாக இருப்பர். இவற்றை எல்லாம் தாண்டி அரசமைப்பு உருவாக மூன்றாண்டு காலம் கூட ஆகலாம். அதுவரை இந்த அரசு நிலைக்குமா என்பதும் தெரியாது. - என்றார். (ற-101)

# பிரகடனம் வெளியிட்டபோது முதலமைச்சரும் வெளியே

யாழ்ப்பாணம், செப்.6
தமிழ் மக்கள் பேரவையால் நேற்று நடத்தப்பட்ட கூட்டத்தின் ஆரம்பத்தில் சுமார் 350 பேர் வரையானோர் கலந்து கொண்டபோதும் கூட்டத்தில் பிரகடனம் வெளியிடப்பட்டபோது சுமார் 50 வரையானோரே காணப்பட்டனர்.
பெருமளவிலானோர் மண்டபத்தை விட்டு வெளியேறியிருந்த நிலையில் பேரவையின் இணைத்தலைவர்களின் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் அந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டத்தை விட்டு வெளியேறியிருந்தார்.
அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்று கூறப்பட்டிருந்த போதும் அவர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. (ற)

# தாமரைக் கோபுரப் பணிகளை பார்வையிட்டார் அரச தலைவர்

கொழும்பு,செப்.6
அக்குரேகொட பாதுகாப்புத் படை தலைமையக மற்றும் தாமரைக் கோபுர நிர்மாணப் பணிகளை அரச தலைவர் நேற்றுப் பார்வையிட்டார் என்று அரச தலைவரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.
நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்ட அரச தலைவர், திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்ந்தார். குறைபாடுகள் இருப்பின் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி, பிரச்சினைகளை தீர்த்து, விரைவாகத் திட்டத்தை நிறைவு செய்யுமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.
இலங்கையின் மிக உயரமான கட்டடமாகக் கருதப்படும் தாமரைக் கோபுரத்தின் நிர்மாண நடவடிக்கைகள் நிறைவடையும் போது, கோபுரத்தின் உயரம் இடிதாங்கியுடன் 350 மீற்றர் ஆக இருக்கும். ஆடம்பரக் கடை தொகுதிகள், உணவகங்கள், விழா மண்டபங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக தாமரைக் கோபுரம் நிர்மாணிக்கப்படுகிறது. அனைத்து நிர்மாண வேலைகளும் அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இதன் போது இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா உள்ளிட்ட முப்படை உயரதிகாரிகள், அரச தலைவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர் என ஊடகப் பிரிவு தெரிவித்தது.
(ஜ)

# நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்

## பேரவைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.6
தமிழ் மக்கள் பேரவையின் சிறப்புக் கலந்துரையாடலில், நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் உள்ளிட்ட ஏழு தீர்மானங்கள் நேற்று நிறைவேற்றப்பட்டன.
பேரவையின் கலந்துரையாடல் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:
நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வானது, அடிப்படைக்காரணிகளை இனம்கண்டு நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும்.
வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தேசத்தில், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான, மதச்சார்பற்ற சமஷ்டித் தீர்வே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். இலங்கையின் கௌரவமும், சமாதானமும் மதிக்கப்பட்டு சகல இனங்களும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் வல்லது. இது தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாசை. பல தசாப்தங்களாகத் தேர்தல்களில் வழங்கிய ஆணைகள், திம்பு பிரகடனம் போன்ற பன்னாட்டு பிரகடனங்கள், பொங்குதமிழ், எழுக தமிழ் போன்ற மக்கள் எழுச்சி நிகழ்வுகள் மூலமும் மிகத் தெளிவாகப் பல தடவைகள் வெளிப்படுத்தப்பட்ட ஜனநாயக விருப்பும் ஆகும்.
வடக்கு கிழக்கில் தமிழ்தேசத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு அதன் தனித்துவமான இறைமையின் அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு விட்டுக்கொடுக்க முடியாத அடிப்படை அரசியல் கோரிக்கை. இலங்கையின் இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் அதன் அடிப்படையிலேயே அணுகப்படுவதே நேர்மையானதும், நீடித்து நிலைக்கக்கூடியதும் ஆகும்.
வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் (திட்டமிட்ட அரச குடியேற்றங்களால் குடியேற்றப்பட்டவர்கள் நீங்கலாக) இயற்கையாகவே வாழும் முஸ்லிம், சிங்கள மக்களும் இந்த சமஷ்டி அலகின் சகல உரிமைகளுக்கும் உரித்தானவர்கள். வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்கள் தமக்கான அரசியல் அதிகார அலகை கோருவதற்கான உரிமைக்கு உரித்துடையவர்கள்.
இலங்கையின் உத்தேச அரசமைப்பானது, மலையகத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகள், அடிப்படைத்தேவைகள் என்பவற்றைத் திருப்திப்படுத்துவதாக இருக்க வேண்டும். அதற்கான குரலையும் தோழமை உறுதிப்பாட்டையும் நாம் என்றும் வழங்குவோம்.
கடந்த எழுபது ஆண்டுகளாக தமிழர்கள் மீது திட்டமிட்டவகையில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலையில் இருந்து, எமது இனத்தின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ளவும் மேற்சொன்ன அரசியல் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
அத்தோடு, பன்னாட்டு நீதிமன்றம் அல்லது ஐ.நா. மேற்பார்வையிலான பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் போன்ற சுயாதீன பன்னாட்டு குற்றவியல் நீதி விசாரணைப்பொறிமுறை மூலம் இந்த இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.
எமது அரசியல் தீர்வுக்கான கோரிக்கையும் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலும் விட்டுகொடுப்புக்கோ தம்மிடையே பதிலீட்டுக்கோ உரியவை அல்ல. அவை இரண்டும் பூர்த்தி செய்யப்படுவதன் மூலமே இயற்கை நீதியின் அடிப்படையில் தமிழர்களுக்கான நியாயம் கிடைக்கும்.
அரசியல் தீர்வு குறித்தும் பொறுப்புக்கூறல் குறித்தும் பன்னாட்டு அரங்குகளில் வாக்குறுதிகளை வழங்கி விட்டு, அவற்றைப் பூர்த்தி செய்யாது, காலத்தை இழுத்தடித்து ஏமாற்றுவதே, இலங்கை அரசு காலம் காலமாக மேற்கொண்டுவரும் நடைமுறையாகும்.
பன்னாட்டு நெருக்குவாரங்களில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான ஒரு யுக்தியாகவே இந்த பொய் வாக்குறுதிகளை வழங்குவதையே இலங்கை அரசுகள் தம் வழக்கமாகக் கொண்டுள்ளன. அந்த வகையில் இந்த அரசும் முன்னைய அரசிலிருந்து எதுவிதத்திலும் தம்மை வேறுபடுத்தவில்லை. இந்த அரசு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் எதனையும், நேர்மையான முறையில், ஐ.நா. சபையில் வலியுறுத்தப்பட்டது போன்று, பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை உள்ளீர்த்து பூர்த்தி செய்யவில்லை. மாறாக, பன்னாட்டை ஏமாற்றும் பெயரளவிலான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையே முற்கொண்டு செல்கிறது.
உலகின் உயர் சபையாகிய ஐ.நாவின் மனித உரிமை சபையினதும் மற்றும் ஜனநாயக செயன்முறைகளில் நம்பிக்கை கொண்டுள்ள நாடுகளினதும் கௌரவத்தை மதிப்பிழக்கச்செய்யும் வகையிலும் அவற்றுக்குச் சவால் விடும் வகையிலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் குறிப்பிடப்பட்ட பன்னாட்டு நீதிபதிகள், பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் போன்றவற்றை அப்பட்டமாகவே மறுதலித்து தற்போதைய அரசின் அதிகார உயர் பீடத்தினரான அரச தலைவர் உள்ளிட்டவர்கள் கரிசனையைச் செலுத்த வேண்டும்.
பொறுப்புக்கூறலில் மட்டுமல்லாது, தமிழ்மக்களின் அரசியல் விருப்பை, புதிய அரசமைப்புக்காக மக்கள் கலந்தாய்வுக்குழுவுக்கான சமர்ப்பணம் உட்பட பலதடவைகளில் மக்கள் வெளிப்படுத்தியிருந்த போதிலும், அவற்றையெல்லாம் ஒரேயடியாகப் புறந்தள்ளுவதாகவே பிரமுகர்களின் கருத்துகள் இருக்கின்றன.
அரச உயர்பீடத்தின் உத்தியோகபூர்வ மறுதலிப்புகள், இந்த அரசுக்கும் தமிழர்களின் அரசியற் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்தோ அல்லது நேர்மையான பொறுப்புக்கூறல் குறித்தோ உண்மையான அரசியல் விருப்பு இல்லை என்பதை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துகின்றன.
இந்த விடயத்தில் பன்னாடுகள் தமது நேரடித்தலையீட்டைத் தாமதமின்றி மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை, மேலே பிரகடனப்படுத்தப்பட்ட மக்களது விருப்புகளின் அடிப்படையில் வழங்க வழிவகை செய்யவேண்டும். (ஜ-101)

# மியன்மார் இனப் படுகொலையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்




மன்னார்.செப்.6
மியன்மாரில் ரோஹிங்கிய முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலையைக் கண்டித்து மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மியன்மாரில் ரோஹிங்கிய முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்தனர். ஐ.நா. மனித உரிமைகள் சபை, மனித உரிமைகள் அமைப்புகள் இந்த விடயத்தில் தலையிட்டு மியன்மார் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர். மியன்மாரில் நடத்தப்பட்ட இனப்படுகொலையை நினைவுபடுத்தி ஒளிப்படங்கள், பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.
மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. மன்னார் மாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் கலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனி மார்க், பெண்கள் அமைப்பின் பிரதி நிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட சுமார் நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.
(ஜ-56)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நேற்று முன்தினம் டெங்குக் கட்டுப்பாட்டு தொண்டுப் பணி நிகழ்வுகள் இடம்பெற்றன. குறித்த வலயத்துக்குட்பட்ட போக்கட்டி அ.த.க பாடசாலையில் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டிருந்தனர். (9)

# ஆறுமுகம் ஆற்றுத் திட்டத்தை செயற்படுத்த அறிக்கை தயாராகிறது

## அதிகாரிகள் குழு இடங்களைப் பார்வையிட்டது

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் ஆறுமுகம் ஆற்றுத்திட்டத்துக்கு உயிர்ப்பளிக்கும் வகையில் அதனை ஆராய்ந்து சாத்திய அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. அதற்காக கொழும்பு நீர்ப்பாசன அமைச்சின் ஓய்வு பெற்ற செயலாளர் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் உரிய இடங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலத்தடிநீர் மாசடைதல் மற்றும் உவராதல் காரணங்களால் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரித்துச் செல்கிறது. அதற்கு மாற்றீடாகப் பல ஆயிரம் மில்லியன் ரூபாவில் செயற்படுத்தவென இரணைமடு குடிதண்ணீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டது.

இரணைமடுக் குளத்தின் தண்ணீர் கிளிநொச்சி மாவட்டத்தின் பாவனைக்கே போதாத நிலையில் அதனை வெளியில் எடுத்துச்செல்ல மாவட்ட விவசாயிகள் உடன்படவில்லை. தமது தேவையைப் நிறைவு செய்த பின்னர் தண்ணீர் எஞ்சியிருக்குமாயின், அதனை எடுத்துச்செல்லலாம் என்று கூறியிருந்தார். அதனால் திட்டம் நிறைவேற்றப்படுமா என்ற கேள்வி எழுந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான குடிதண்ணீருக்கு மாற்றுத் திட்டம் என்ன? என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. மருதங்கேணி கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அதேநேரம் நீண்ட காலத்துக்கு முன்னர் ஆறுமுகம் என்ற பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட திட்டமும் தூசு தட்டப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்த உதவுமாறு அதிகாரிகளாலும் சில அரசியல்வாதிகளாலும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தலைமை அமைச்சர் அலுவலகங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி தலைமை அமைச்சர் அலுவலகத்தில் வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் தலைமை அமைச்சரின் செயலாளர்களான சரித்தரத்வத்த மற்றும் பாஸ்கரலிங்கம் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. அதில் வடக்கிலிருந்து தலைமைச் செயலர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டிருந்தனர்.

அதில் கருத்துத் தெரிவித்த அமைச்சரின் செயலாளர்கள், குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் திட்டத்துக்காக ஆறுமுகம் ஆற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மைய அரசின் இணக்கமும் நிதி வழங்குநர்களின் ஒப்புதலும் கிடைத்துள்ளது. இதனால் இந்தத் திட்டத்தின் மூலமாக குடாநாட்டுக்குத் தண்ணீர் விநியோகிக்க முடியும்.

இந்தத் திட்டத்துக்கு வடக்கு மாகாண சபை ஒப்புதல் வழங்கினால் அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையை முன்கொண்டுசெல்ல முடியும் என்று தெரிவித்திருந்தனர்.

வடக்கு மாகாண தலைமைச் செயலாளர், முதலமைச்சர் உள்ளிட்டோர் அது தொடர்பில் ஆராய்ந்து அதற்கான ஒப்புதலை கடந்த ஜூன் மாத இறுதியில் வழங்கினர். இதனையடுத்து குறித்த திட்டத்தின் தேவை, அதற்கான சாத்தியக்கூறுகள், திட்ட ஆலோசனை உள்ளடக்கிய சாத்தியக் கூற்று அறிக்கை தயாரிக்கவென நீர்ப்பாசன அமைச்சின் ஓய்வு பெற்ற செயலாளர் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவினர் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துத் திட்டம் தொடர்பில் முதற்கட்டக் கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். உரிய இடங்களை நேரில் பார்வையிட்டுள்ளனர். அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டது. (4-101)

# மந்துவில் ஆலயத்தில் சங்குமுழுக்கு விழா

தென்மராட்சி, செப். 6

மந்துவில் வடக்கு புளியந்திடல் ஸ்ரீகந்தசாமி ஆலய குடமுழுக்கின் இறுதிநாளான சங்குமுழுக்கு நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மு.ப. 9 மணிக்கு வாஸ்துசாந்தியுடன் கிரியைகள் ஆரம்பமாகி யாகபூஜையுடன் பகல் 12 மணிக்கு சங்குமுழுக்கு இடம்பெறும்.

வேதாகமவித்தகர் சிவஸ்ரீ இராம ஸ்ரீதரக் குருக்கள், சிவஸ்ரீ கமல்ராஜ் குருக்கள், சிவத்திரு ச.சிவநேசக் குருக்கள் ஆகியோரின் உதவியுடன் சிவத்திரு சோம.சந்திரசிகாமணிக் குருக்கள் முதன்மைக்குருவாக இருந்து சங்குமுழுக்கை நடத்தி வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# சாவகச்சேரி மருத்துவமனையில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தினுள் கோம்பையுடனான இளநீர் மற்றும் பொலித்தீன் பைகளை பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களுக்கு உணவுப் பொதிகள் மற்றும் பொருள்கள் கொண்டு வருவோர் பொலித்தீன் பைகளில் அவற்றைக் கொண்டு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வணிக நிலையங்களில் அவ்வாறான பைகளில் பொருள்கள் வழங்கினால் அவற்றை விடுதிகளுக்குக் கொண்டுசெல்லாமல் மருத்துவமனை பாதுகாப்பு அலுவலருக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள தொட்டியில் இட்டுச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு கோம்பையுடன் இளநீர் கொண்டு வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. நோயாளர்களுக்கு இளநீர் கொடுக்க விரும்பும் உறவினர்கள் கண்ணாடிப் போத்தலில் அதனை விட்டு ஊற்றிக் கொண்டு வர வேண்டும்.

விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களால் மருத்துவமனை வளாகத்தில் வீசப்படும் இளநீர் கோம்பைகளால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏதுநிலை காணப்படுகிறது. இதனால் ஏற்கனவே இளநீர் கோம்பையுடன் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனையும் கருத்திற் கொண்டு செயற்படுமாறு மருத்துவமனை செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# “நல்ல அம்மா” நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 6

சுவிற்சர்லாந்தில் வாழ்ந்துவரும் புலம்பெயர் தமிழரான த. நமசிவாயம் எழுதிய 'நல்ல அம்மா' நூல் வெளியீடு கடந்த 30ஆம் திகதி புதன்கிழமை மாலை செல்வச்சந்நிதி ஆலய செல்லையா ஐயர் திருமண கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசியுரையை கலாநிதி பிரம்ம ஸ்ரீ. கு ஜெகதீஸ்வரக் குருக்கள் (நுணாவில்), செல்வச்சந்நிதி ஆலய பூசகர்கள் சிவஸ்ரீ ஆ. சிவ சண்முக ஐயர், ஸ்ரீ த. பாலசுப்ரமணிய ஐயர் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலாசிரியர் யாழ்ப்பாணம் கதிரிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். (ய-ரி)

# சிறப்புக் காணி நடுவர் சபைக்கு ஆவணங்கள் இன்னும் வந்துசேரவில்லை

யாழ்ப்பாணம், செப். 6

காணி சம்பந்தமான சிறப்பு நடுவர் சபை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கும் என நடுவர் சபை ஆணைக்குழு ஆலோசகர் அறிவித்தார்.

எனினும் கொழும்பில் இருந்து காணி சம்பந்தமான இந்தச் சிறப்பு நடுவர் சபைக்கான ஆவணங்கள் முழுமையாக வந்து சேரவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

2015இல் நடுவர் சபைக்கான சிறப்பு ஆள் சேர்ப்புக்கு விண்ணப்பம் கோரப்பட்டது. நிபுணத்துவம் பெற்ற 27 சிறப்பு நடுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களில் கொழும்பு நடுவர் சபை ஆணைக்குழுவால் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் குறித்த திகதியில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான காணிப் பிரச்சினைகளுக்கு இணக்கத் தீர்வு மூலம் முடிவுகள் எட்டப்படலாம் என நடுவர் சபை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார். (ய-50)

# இலவச திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணம் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இலவச திரைப்படக் காட்சி எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நூலக குவிமாடச் சிறிய கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதன்போது 'எல்டர் ரியஸனோவ் நெறியாக்கம் செய்த 'ஏ குருயல் ரொமான்ஸ்' திரைப்படக்காட்சியும், கருத்தாடலும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

# மோ.சைக்கிள் மோதியதில் சிறுமி காயம்

சாவகச்சேரி, செப். 6

மோட்டார்சைக்கிள் மோதியதில் 12 வயது மாணவி ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பி.ப. 4.30 மணியளவில் கைதடி நுணாவில் முதன்மைச் சாலையில் இடம்பெற்றது.

நுணாவிலில் உள்ள அறவழி நிலையத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இங்கு சென்ற சிறுமி தனது தாத்தாவுடன் பேருந்துக்குக் காத்திருந்த வேளையில் மோட்டார்சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் கெற்பேலியைச் சேர்ந்த சிறிகாந் கிரிசா (வயது -12) என்ற மாணவியே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ய-21,-9)

# இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழா மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 6

யர்ழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட பவள விழா மண்டபத்தின் திறப்பு விழா இன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. இந்த மண்டபம் கல்லூரியின் பழைய மாணவிகளின் நிதியில் கட்டப்பட்டது.

இந்த விழா மு.ப 10.50 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி விமலாதேவி விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது. (21)



அனலைதீவு புளியந்தீவு ஸ்ரீநாகேஸ்வரசுவாமி சிவன் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (9)

இடமாற்றத்தை ஏற்க மறுத்து பணிக்குச் செல்லாத

# சுகாதாரப் பரிசோதகர்கள் ஐவருக்கும் தாமாகவே பதவி விலகினர் எனக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாண மாநகர சபையில் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் 5 பேர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் இடமாற்றத்தை ஆட்சேபித்து பணிக்குச் செல்ல மறுத்து வந்த நிலையில், அவர்கள்தாமாகவே பதவி விலகியதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் திணைக்களங் களில் பணிக்கமர்த்தப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்க ளில் ஒரே சபையில் 7 ஆண்டு கள் பணிபுரிந்தவர்களுக்குக் கடந்த ஜனவரி மாதம் தொடக் கம்நடைமுறைக்குவரும்வகை யில் இடமாற்றம் வழங்கப் பட்டது.

ஆனால் அவர்கள் புதிதாக வழங்கப்பட்ட இடங்களுக்குப் பணிக்குச்செல்லவில்லை.

உள்ளூராட்சித் திணைக்க ளத் தின் கீழ் பணியாற்றும் சுகாதார பரிசோதகர்களை சுகாதார அமைச்சு இடமாற்றம் செய்ய முடியாதுஎன்றுபொதுசுகாதாரப் பரிசோதகர்களின் வாதமாக உள்ளது. ஆனால்அவர்களுக்கு நியமனம் வழங்கியதே தாமே என்று மாகாண சுகாதார அமைச்சின்கருத்தாகஉள்ளது. இருதரப்புக்கும் இடையில் நீண்ட சர்ச்சை நிலவியதோடு குறித்தவிடயம்நீதிமன்றம்வரை சென்றது.

கடந்த மாதம் இறுதிப் பகுதியில் பொது சுகாதார பரிசோதகர்க ளைச்சந்தித்தவடக்கு மாகாண முதலமைச்சர் "முதலில் இட மாற்றம் செய்யப்பட்ட இடத்தில் கடமையை பொறுப்பேற்று அதன் பின்னர் உங்கள் பிரச்சி னையை எழுத்தில் தெரிவியுங் கள்". அது தொடர்பில் ஆராயப்ப டும் என்று கூறியிருந்தார். அது நடக்கவில்லை.

இந்தநிலையில், கடந்த4மாதங் களாகஇடமாற்றம்செய்யப்பட்ட இடத்தில் பணியைப் பொறுப் பேற்காத காரணத்தால் சுயமா கப்பணியில்இருந்துவிலகியதா கக் கருதப்படுகின்றீர்கள் என்று பொதுச்சுகாதாரப்பரிசோதகர்க ளுக்கு அனுப்பிய கடிதத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப் பிட்டுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டது.

(4-101)

# கைதடிப் பிரதேசத்தில் வயற்காணிகள் பதிவு

கைதடி, செப்.6

கைதடி கமநலசேவ்வக்குட்பட்ட கமக்கார அமைப்பு கள் ரீதியாக பின்வரும் திகதிகளில் வயற்காணி பதி வேடுகள் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெறவுள்ளன. நாவற்குழியில் இன்றும், நாளை யும், நாளை மறுதினமும் நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிவரை கோயிலாக்கண்டியிலும், 14ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை நாவற் குழி கிழக்கிலும், 20ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை நுணாவிலிலும், 25ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை மட்டு வில் நுணாவில், மட்டுவில் மத்தியிலும், 28ஆம் திகதியும் 29ஆம் திகதியும் சந்திரபு ரத்திலும், 2ஆம்திகதி தொடக்கம் 6ஆம் திக திவரை மறவன்புலோவிலும் பதிவுகள் நடைபெறும்.

விவசாயிகள் குறித்த வயற்காணியின் உறுதி போட்டோ பிரதியை அல்லது குத்த கைச் சீட்டைக் கொண்டுவருமாறும் அத்து டன் ஏக்கர்வரியும் அறவிடப்படும் என்றும் நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பின் செயலாளர் தெரிவித்தார். (ய)

மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 60 | 70 |
| கத்தரி | 150 | 120 | 140 | 140 | 100 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 120 | 90 | 100 | 100 | 120 |
| பாகல் | 180 | 120 | 220 | 160 | 160 |
| க.கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 130 | 130 | 120 |
| சி.வெங்காயம் | 150 | 200 | 180 | 220 | 140 |
| பூசணி | 60 | 40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 150 | 140 | 160 | 80 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 70 | 80 |
| கீரை | 25 | 30 | 40 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 300 | 200 | 300 | 300 | 180 |
| புடோல் | 120 | 80 | 80 | 80 | 60 |
| கோவா | 120 | 80 | 100 | 100 | 80 |
| வெண்டி | 70 | 50 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 140 | 140 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 80 | 80 |
| உ.கிழங்கு | 100 | 110 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 80 | 200 | 320 | 200 | 140 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 160 | 120 |
| கரட் | 160 | 140 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 70 | 30 | 80 |

கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 600 | 200 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | – |
| கும்பிளா | 300 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஒரா | 350 | 300 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 150 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 300 | 200 | 500 | – |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 80 | – |
| பாலை | 200 | 200 | 500 | – |
| வாளை | 200 | 200 | 400 | – |

# 'வாழ்வு தந்த வாஸ்' நாடகம் மீண்டும் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப். 6

புனித ஜோசப் வாஸ் ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங் குகின்ற 'வாழ்வு தந்த வாஸ்' என்னும் வரலாற்று நாடகம் அநேகரின் வேண்டு கோளுக்கு இணங்க எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் மீண்டும் அரங்கேற்றப்படுவதாக அறிவிக் கப்பட்டது.

மாலை 6.45மணிக்கு இல.238 முதன்மை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திரு மறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற் றப்படுகிறது.

இந்த நாடகம் இதற்கு முன்பாக கடந்த ஜூன் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது டன், கடந்த மாதம் 20ஆம் திகதி புதுக்குடியி ருப்பிலும் மேடையேற்றப்பட்டமை குறிப்பி டத்தக்கது. (வ)

# தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளருக்குப் பாராட்டு விழா

சேவையிலிருந்து ஓய்வுபெறும் தென்ம ராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு. கிருஷ் ணகுமாருக்கு தென்மராட்சிப் பிரதேச மக் கள் நடத்தும் மணிவிழா நிகழ்வு எதிர்வ ரும் சனிக்கிழமை மு.ப.9 மணிக்கு இடம் பெறும்.

சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை சாவ கச்சேரி இந்துக்கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை வழங்குவார்.

ஆசியுரைகளை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள், சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி ம.றெக்ஸ் சௌந்தரா அடிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகி யோர் நிகழ்த்துவர். (ய-9)

# யாழ். நீதிமன்றில் சான்றுப்பொருள்கள்

யாழ்ப்பாணம், செப்.6


யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட் டுள்ளபின்வரும்சான்றுப்பொருள் கள் இதுவரை உரிமை கோரப்ப டாத நிலையில் காணப்படுகின் றன.

எனவே, குறித்தசான்றுப்பொருள் களை உரிமை கோருப வர்கள் இருப்பின் 02 மாத காலப்பகுதிக் குள் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அலுவலகநேரங்களில்ஆவணங் களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையைநிலைநாட்டும்படி குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 431 (2)இன் பிரகா ரம் பகிரங்கப்படுத்தப்படுகின்றது என்று நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார். சான்றுப்பொருள் கள் வருமாறு:

69597256 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கரவண்டி 01, 69217788 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி 01, 69867348 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி 01, 69884233 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி 01, டுரு 80117 இலக்கலுமாலா வர்க்க துவிச்சக்கரவண்டி 01, 6929443 இலக்கலுமாலாவர்க்கதுவிச்சக்கர வண்டி 01, 55793831 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி 01, மறுதவணை 13.11.2017

4எக்ஸ் 18428 இலக்க பெண்கள் துவிச்சக்கர வண்டி, இலக்கமற்ற லுமாலாவர்க்கதுவிச்சக்கரவண்டி என்பனவாகும். (ய)



சங்கரை மாவடி ஞான வைரவர் ஆலய வருடாந்த வைரவர் பொங்கல் நேற்று முன்தினம் நடைபெற்றது.




இது புதுசு

ஆண்களுக்கான சேட் வகைகள் பல நவீன வடிவில் சந்தைக்கு வந்துள் ளன. ஆயிரத்து 500ரூபாவில் இருந்து இவை விற்பனை செய்யப் படுகின்றன.

கடல்நீரை நன்னீராக்கும் திட்டம்:

## ஆடுமாடு தருவதாக பேரம் பேசினார் தொழில் அதிபர்

*ஐங்கரநேசன் சாட்டை*

வடக்கு மாகாணத்தில் கடல்நீரை நன்னீராக மாற்றும்திட்டத்துக்கு ஆதரவு தந்தால் ஆடு.மாடு போன்ற உதவித் திட்டங்களைத் தருகின்றோம் என தனியார் தொழில் அதிபர் என்னுடன் வந்து பேரம் பேசினார். நான் அதற்கு ஒத்துப்போகவில்லை என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாணசபை அமர்வின்போதே அவர் இதனை தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கடல்நீரை நன்னீராக மாற்றும் திட்டத்தை தனியார் ஒருவராக தாம் பொறுப்பெடுப்பதாக என்னிடம் தொழில் அதிபர் ஒருவர் வந்து கதைத்தார். அவர் என்னுடன் கதைக்கும்போது மருதங்கேணி தண்ணீர்த்திட்டத்தைக் கூட எனக்கு எடுத்துத்தாருங்கள், நான் உங்களுக்கு பல உதவிகளை செய்கின்றேன் என எனக்கு கூறினார்.

இதற்கு நான் ஒத்துப்போனால் எனக்கு ஆடுகள், மாடுகள், நிதியுதவிகள் போன்றவற்றை தான் செய்வேன் என்றும், எனவே குடிதண்ணீர்த் திட்டங்களை எனக்கு எடுத்து தாருங்கள் என்றும் கேட்டிருந்தார். நான் அதை மறுத்திருந்தேன்- என்றார். (ய-8)

# நெல்சிப் திட்டத்தில் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்டடங்களும் திறப்பு

யாழ்ப்பாணம். ஓக.6

வடக்கு மாகாணத்தில் நெல்சிப திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு, திறக்கப்படாதநிலையில் இருந்த கட்டடங்கள் அனைத்தும் திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

மக்களின் தேவைகருதி அமைக்கப்பட்ட பலகட்டடங்கள் திறக்கப்படாதிருந்தன.

கேள்வி கோரலில் உள்ள இழுபறிநிலை மற்றும் பொதுக்கட்டடங்களில் மக்களுக்கு உள்ள ஈடுபாடற்ற தன்மையின் காரணமாகவே அவை திறக்கப்படாதிருந்தன. எனினும் தற்போது அவை திறக்கப்பட்டுள்ளன என உள்ளூராட்சித்திணைக்கள ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர்பூங்கா, மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட மறிச்சுக்கட்டி மற்றும் சிலாபத்துறை கடைத்தொகுதிகள், நகர சபையால் நிர்மாணிக்கப் பட்ட நகரசபைப் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள கடைத்தொகுதிகள். மன்னார் பிரதேசசபை யால் நிர்மாணிக்கப்பட்ட எருக்கலம்பிட்டிகொல்களம். வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பெரிய உளுக்குளம் சந்தை, ஈரப்பெரிய குளம் கலாசார மண்டபம் மற்றும் தோணிக்கல் விளையாட்டரங்கு ஆகியன புதிதாக நிர்மாணிக்கப்பட்டும் திறக்கப்படாத நிலையில் காணப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் மக்களின் தேவைகருதி பல கட்டடங்கள் கடந்த ஆண்டுகளில் அமைக்கப்பட்டன. இவை சிறப்புச் செயற்றிட்டங்கள் மூலம் அமைக்கப்பட்டன. அமைக்கப்பட்டகாலம்முதல் சில கட்டடங்கள் திறக்கப்படவில்லை என்று பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு மாகாணசபை அமர்விலும் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு அமைவாக கட்டடங்கள் திறக்கப்படாமைக்குரிய காரணங்களை நாம் சபைகளைக் கேட்டிருந்தோம். அதனை உடனடியாகத் திறப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடும்படியும் பணித்திருந்தோம். இதற்கு அமைவாக நெல்சிப் திட்டத்தின் ஊடாக மொத்தம் 100 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடங்களைத் திறக்கும் பணிகள் கடந்த 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவுக்கு வந்துள்ளது. கட்டடங்கள் திறக்கப்படாமைக்குரிய காரணங்கள் ஆராயப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்பட்டு தற்பொழுது மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட மகாகச்சக்கொடிய சந்தை, ஈரப்பெரியகுளம் சந்தை ஆகியன ஆரம்பத்தில் வாடகைக்குக்கொடுப்பதற்காக கேள்விக் கோரல் விடுக்கப்பட்டது. எவரும் கடையை வாடகைக்கு பெற்று நடத்த முன்வராமையினால் மீளவும் கேள்வி கோரல்விடுக்கப்படவுள்ளது. அதன் பின்னர் அந்த இரண்டு கடைத் தொகுதிகளும் பயன்பாட்டுக்குவரும் என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார் (ய-21-ரி)



வடக்கு மகாண உறுப்பினர்கள் அடங்கிய ஒளிப்படம் நேற்று முன்தினம் அனைத்து உறுப்பினர்களுக்கும் மாகாண சபையில் வைத்து வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் கடந்தவருட ஒன்றுகூடலின்போது எடுக்கப்பட்ட ஒளிப்படம் ஞாபகச் சின்னமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (21-8)

# வவுனியாவில் மந்த நிலை

## வறட்சிக்கான உதவிப்பொருள் வழங்கலில்

யாழ்ப்பாணம், செப்.5

வடக்கு மாகாணத்தில் வழங்கப்படும் வறட்சிக்கான உதவிப்பொருள் விநியோகத்தில் வவுனியா மாவட்டத்துக்கான உதவிப்பொருள் விநியோகம் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுகிறது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உதவிப்பொருள் விநியோக அனுமதி கடந்த வாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் முதல்கட்ட உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டு நிறைவு பெறும் நிலையில் இரண்டாம் கட்ட உதவிப்பொருள் விநியோகத்துக்கும் சில மாவட்டங்கள் தயாராகின்றன. இந்த நிலையில் வவுனியா மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 25 ஆயிரத்து 983 குடும்பங்களில் பலருக்கு உதவிப்பொருள் விநியோகம் இதுவரை இடம்பெற்றுள்ள நிலையில் ஏனையவர்களுக்கு இதுவரை வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது என மக்கள் தெரிவித்தனர்.

"மாவட்டத்தின் மொத்த பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கும் இரு கட்டத்துக்குமாக ரூபா 123 மில்லியன் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒரு கட்டத்துக்கு சுமார் 63 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட வேண்டும். இருப்பினும் இதுவரை 20 மில்லியன் ரூபாவுக்கான பொருள்களே விநியோகிக்கப்பட்டுள்ளன. இது கூட்டுறவுச்சங்கங்களின் தவறுகிடையாது கொள்வனவு சதொசவிடம் மட்டுமே உள்ளது என மாவட்ட செயலகத்தினர் தெரிவித்தனர். (21-101)

# அயல்வீட்டு நாய்கள் 50 கோழிகளை தின்றுவிட்டன

## பளை பொலிஸில் முறைப்பாடு

கிளிநொச்சி, செப். 6

அயல்வீட்டு வளர்ப்பு நாய்கள் 50 கோழிகளைக் கொன்று தின்றுவிட்டதாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. குடும்பப் பெண் ஒருவர் கோழி வளர்ப்பை வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் அவரின் கோழிக் கூட்டின் கேற்றைப் பிரித்து உள்நுளைந்த அயல் வீட்டு வளர்ப்பு நாய்கள் இரண்டு, சுமார் 50 கோழிகளைக் கொன்றுதின்றுள்ளன. பொருளாதார ரீதியாகப் பின்னடைந்துள்ள நிலையில் வாழ்வாதார தொழிலாக கோழி வளர்ப்பில் ஈடுபட்டேன். அவ்வாறிருக்கையில் கோழிகளை ஒரே தடவையில் இழந்துள்ளேன். இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து இழப்பீடு பெற்றுத்தாருங்கள் என்று முறைப்பாட்டில் அவர் கோரியுள்ளார் (4-6)

# கிடைத்த அற்பசொற்பத்தையும் சிலர் போட்டு உடைக்கின்றனர்

## மாகாண எதிர்க்கட்சித் தலைவர் விமர்சிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

இராஜதந்திரமும் கனகச்சிதமும் இன்றிச் செயல்படும் எம்மவர்களால் கிடைத்த அற்ப சொற்பத்தையும் சிலர் போட்டுடைக்கின்றனர். இராஜதந்திர நகர்வுகளோ அல்லது சாணக்கியமோ இன்றியே செயல்படுகின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

உடுவில் தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கத்தின் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 32 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் உரையாற்றும் போது இவ்வாறுதெரிவித்தார்.

இதில் தலைமையுரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ் மக்களின் போராட்டத்தில் பல இழப்புக்கள் ஏற்பட்டன. ஆயுதப் போராட்டத்தில் பலஉயிர்களை இழந்தோம்.

போர்க் காலத்தில் மேலதிக இறப்புக்கள் என்பது தவறுதலாக இடம்பெறும் இறப்புக்கள் மட்டுமே. போராட்ட வரலாற்றில் கணிக்க வேண்டியது எதைப் பெற்றோம் என்பதே. இந்த உலகத்திலேயே மிகத் திறமான ஆயுதப் போராட்டத்தை நடத்தியும் இறுதிப் பெறுபேறு என்ன? படை முகாம்கள், காணாமல்போனோர், விதவைக் குடும்பங்கள், அங்கவீனர்களே மிச்சம். அதேநேரம் அரசியலில் இந்திய அரசின் அழுத்தம் காரணமாக வந்த 13 ஆம் திருத்தச் சட்ட மாகாண சபையும் இன்று பதவிப் பங்கீட்டினால் போட்டு உடைத்து அதுவும் தோல்வியிலேயே உள்ளது. இதற்கு காரணம் என்ன என்று தேடினால் கிடைத்த அற்ப சொற்பத்தையும் இராஜதந்திர நகர்வுகளோ அல்லது சாணக்கியமோ இன்றிச் செயல்பட்டதே. இன்று இங்கு நினைவு கூரப்படும் தர்மலிங்கம் இதே இடத்தில் கொலை செய்யப்பட்டபோது தந்தையாருடன் மறைந்திருந்து பார்வையிட்ட சிறுவன் இன்று பெரியவனாக இதே கூட்டத்தில் நிற்கின்றார். இந்த இடத்தில் சுட்டவர்கள் இங்கிருந்து தாவடிச் சந்திக்குச் சென்று சிறிது நேரத்தில் மீண்டும் வந்து எதையோ தேடி ஓர் கடிதத்தை அதில் வைத்துவிட்டுச் சிறிது நேரத்தில் சென்றனராம் என்று அறிகின்றோம் என்றார்.

இதேவேளை, இலங்கையில் முதலாவது எதிர்கட்சித் தலைவரான அமிர்தலிங்கத்தின் 90 ஆவது .ஜனனதினம் பொது நூலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் தலைமையுரை ஆற்றிய தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயர் ஜெபநேசன் தெரிவித்ததாவது:

இன்றைய உலகில் நான்காம் உலக நாடுகள் என்று வர்ணிக்கப்படும் அரசால் புறக்கணிக்கப்பட்ட உலகில் கண்ணீர் வடிக்கும் கூட்டமாகவே நாம் வாழ்கிறோம். தந்தை செல்வா, அமிர்தலிங்கம் காலம் வரை மட்டுமன்றி இன்றும் நாங்கள் போராடும் நிலமையே உள்ளது.

தந்தை செல்வா கண்டெடுத்த முத்துக்களில் ஒன்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிடுமாறு தந்தை செல்வா அழைப்பு விடுத்தபோது மறுத்திருந்த நிலையில் பின்னர் 1977 ஆம் ஆண்டில் போட்டியிட்டார். இதுதவிர, தமிழ்நாட்டில் அண்ணாவுக்கு உள்ள காப்பகம் போன்று தந்தை செல்வாவின் சதுக்கம் அருகே செல்வா காப்பகம் அமைக்கப்பட வேண்டும். இதனை நாம் விரைவில் நிறைவேற்று வோம். அதில் நாகநாதி, அமிர்தலிங்கம், வன்னியசிங்கம் போன்ற மூத்த தலைவர்களையும் நினைவூட்டியே காப்பகம் அமையும். அதனை விரைவில் நிறுவ அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (4-101)

## மாவட்ட ரீதியில் பண்ணையாளர்களை கௌரவிப்பதற்கு ஏற்பாடு

வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில், மாவட்ட ரீதியாக சிறந்த பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர் என்று கால்நடை சுகாதார உற்பத்திப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணத்தில் பாற்பசு, ஆடு, கோழி ஆகிய கால்நடைகளை வளர்ப்பில் ஈடுபடும் சிறந்தபண்ணையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்படிவங்களை, கால்நடைவைத்திய அலுவலகங்களில் 15ஆம் திகதிக்கு முன்னர் பெற்று, அதனை 30ஆம் திகதி சனிக்கிழமைக்குமுன்னர் பிரதேச கால்நடை வைத்திய அலுவலங்களில் ஒப்படைக்கவேண்டும். கடந்த மூன்றுவருடங்களாக இந்தப் போட்டியில் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்டவர்கள் இதில் கலந்துகொள்ள முடியாது - என்றார். (ய -ரி)





## விடுவிக்கப்பட்ட 80 மீனவர்கள் இந்தியாவிடம் திங்களன்று - கையளிப்பு

### கடலில் நடந்தது பரிமாற்றம்

யாழ்ப்பாணம், செப்.06

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 80 இந்திய மீனவர்களும் நேற்றுமுன்தினம் பன்னாட்டுக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டனர். இந்தியக் கடலோரப் படையின் 'சராங்' என்ற கப்பலில் மீனவர்கள் இந்தியா கொண்டு செல்லப்பட்டனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட 76 இந்திய மீனவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி யாழ்ப்பாணச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களை விடுவிக்குமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படி நேற்றுமுன்தினம் அவர்கள் இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்தோடு இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து இரண்டு படகுகளில் வந்த 8 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் இலங்கைக்கு கொண்டுவரப்படும் போது ஒரு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் வந்த 4 இந்திய மீனவர்கள் கடலில் மூழ்கினர்.

எனினும், அவர்கள் நீந்தி இலங்கைக்கு வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் நால்வரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட 76 மீனவர்களுடன் சேர்த்து மனதாபிமான அடிப்படையில் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (ய-21-8)

# ரூ. 2 மில்லியன் நிதியில் நிலாவரைப் பகுதியில் கட்டாக்காலிகள் சொகுசாகப் படுத்துறங்க பெரிய மண்டபம்

## வடக்கு மாகாண சபை சாதித்தது இதுவே என உறுப்பினர் பரஞ்சோதி சீற்றம்

யாழ்ப்பாணம் செப் 6

மக்கள் பணத்தைச் செலவழித்து நிலாவரைப் பகுதியில் ஆடு,மாடுகள் சொகுசாக உறங்குவதற்கு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சு 2 மில்லியன் ரூபாய் நிதியில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார். வடக்கு மாகாண சபை இத்தனை வருடங்களில் சாதித்தது என்ன என்பதை ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் சபையின் சிறப்பு அமர்வு கூடியது.

அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் அமர்வு நடைபெற்றது. இதன்போதே உறுப்பினர் அ.பரஞ்சோதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை சில அபிவிருத்திகளைச் செய்திருந்தாலும் சில அமைச்சுக்கள் பல விடயங்களை வேண்டா வெறுப்புக்கே செய்கின்றன.

அதில் வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை இங்கு என்ன வேலைகளைச் செய்கின்றது என ஒன்றுமே புரியவில்லை. அவர்களுக்கென ஏதாவது நேர்த்தியான திட்டங்களை வைத்திருக்கின்றனரா? அவர்கள் வடக்கு மாகாணத்தில் எந்தெந்த இடங்களை சுற்றுலா இடங்களாக பிரகடனப்படுத்தி இருக்கின்றார்கள் என எந்த விளக்கமுமே இல்லை.

இந்த நிலையில் நிலாவரைக் கிணற்றுப் பகுதியை பார்க்க வருபவர்களுக்கென அங்கு 2 மில்லியன் ரூபா மக்கள் பணத்தைச் செலவழித்து மண்டபம் ஒன்றைக் கட்டியிருக்கின்றார்கள். ஆனால் அங்கே ஆடு,மாடுகள் சொகுசாக படுத்துறங்குவதை அவதானிக்க முடிகிறது. இதுதான் அமைச்சின் இலட்சணம். மக்கள் பணத்தை இப்படியே விரயமாக்கிக் கொண்டிருந்தால் மாகாண சபை மீது மக்கள் அதிருப்தி கொள்வார்கள் தானே.

வடக்கு மாகாணத்தில் ஏராளமான நிதியை விரயமாக்கியதால் தான் அமைச்சுக்கள் மீதான விசாரணையின்போது அமைச்சர்கள் இருவர் நீக்கப்பட்டனர். அதன் பின்னரும் இவ்வாறான நிலை தொடரக்கூடாது. இதேபோல வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மாகாணத்தில் என்னத்தை செய்கின்றது. யாழ்ப்பாணம் மாநகர சபையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று அந்த அறிக்கையில் பல சிபாரிசுகள் உள்ளன. ஆனால் வடக்கு மாகாண முதலமைச்சர் அந்தச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வருடக்கணக்காக இழுத்தடித்து வருகின்றார்.

யாழ்ப்பாண நகரில் அண்மையில் சட்டவிரோத வர்த்தக நிலையங்கள் சில அப்புறப்படுத்தப்பட்டன. ஆனால் யாழ்ப்பாண நகரில் ஏராளனமான கடைகள் சட்டவிரோதமான முறையில் உள்ளன. அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்காது இருப்பது அவர்களுக்குச் சார்பாக உள்ளுராட்சி அமைச்சும் யாழ்ப்பாண மாநகர சபையும் செயற்படுகிறது போலவே இருக்கின்றது-என்றார். (21-8)

# அராலி கிழக்கு கடற்கரையை சுற்றுலா தளமாக்க திட்டம்

யாழ்ப்பாணம், செப். 5

அராலிகிழக்குக்கடற்கரைப்பிரதேசத்தைச் சுற்றுலா மையமாக மாற்றுவதற்குக் கருத்திட்டம் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்தக் கருத்திட்டத்தை முன்வைத்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேசசபை மற்றும் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் என்பன இணைந்த வகையில் புதிய கருத்திட்ட முன்மொழிவைத் தயாரித்து வழங்குமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளில் 100 மில்லியன் ரூபா செலவில் அராலி கிழக்கு கடற்கரையோரத்தை அண்டியதாக இருக்கை வசதிகள், சோழர் மின்விளக்குகள், படகு ஓட்டும் வசதி, சிறுவர் பூங்கா, நடைப்பயிற்சி கூடம், குடிதண்ணீர் வசதி, கடற்கரையை ஒட்டிய தாவரங்கள், உள்ளகச்சாலை, சுற்றுமதில் மற்றும் விருந்தகங்கள் உள்ளிட்ட நவீன சுற்றுலா மையத்தைக் கொண்ட கருத்திட்டத்தை முன்மொழிந்து சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் விரைவில் வலி.மேற்குப் பிரதேசசபை செயலாளரினால் முன்வைக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-21-50)

# 4 கிலோ கிராம் கேரள கஞ்சா சங்கானையில் சிக்கியது

யாழ்ப்பாணம், செப்.6

வலிகாமம் மேற்கு சங்கானைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இந்தக் கைது நடவடிக்கையைத் தொடர்ந்து வட்டுக்கோட்டைப் பகுதியில் அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சங்கானைப் பகுதியில் அவர்கள் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்லப்பட்ட 4 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றைக் கடத்திச் சென்ற இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் ஏழாலை மற்றும் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இருவரும் மானிப்பாய்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். இந்தக் கடத்தல் சம்பவத்தை அடுத்து சிறப்பு அதிரடிப்படையினர் வட்டுக் கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சாலையால் பயணிப்போரை இடை மறித்து சோதனையிட்டனர்.

சோதனையின் பின்னர் சாலையால் பயணித்தவர்களுடைய பெயர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு கையொப்பமும் பெறப்பட்டது. நேற்றுக்காலையும் அதிரடிப்படையினர் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (ய-21-8)

# 20ஆவது திருத்தச் சட்டம் கொழும்பின் காய்நகர்த்தல்

## ஆராய்ந்தே நிராகரிக்க வேண்டும் மாகாணசபை உறுப்பினர் அஸ்மின்

யாழ்ப்பாணம், செப்.6

20ஆவது திருத்தச் சட்டமூலமானது கொழும்பு அரசின் காய் நகர்த்தலாகும். நாம் இந்த சட்டமூலத்தை நன்கு ஆராய்ந்த பின்னரே நிராகரிக்க வேண்டும் என வடக்கு மகாணசபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் 104ஆவது அமர்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

20ஆவது திருத்தச் சட்டமூலத்தை இரண்டு அடிப்படைகளில் நோக்க முடியும். ஒன்று இலங்கை அரசமைப்புச் சட்டரீதியாக நோக்கலாம். அடுத்து அரசியல்ரீதியாக நோக்கலாம். எங்களுடைய முதலமைச்சர் இந்த விடயத்தில் ஒரு முழுமையான விளக்கத்தை வழங்குவார் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் அவர் மேலோட்டமான விளக்கம் ஒன்றையே வழங்கியுள்ளார். இது போதாது.

இந்தச் சபையிலே 20ஆவது திருத்தச்சட்டமூலம் குறித்த உறுப்பினர்களின் முழுமையான கருத்துகளும் கேட்டறிந்தே இறுதி முடிவு எடுக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் சார்ந்தும், தனிப்பட்ட ரீதியிலும் இதனை நிராகரிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். இந்தச் சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படின் அதனை நாம் மீண்டும் பரிசீலிக்க முடியும். திருத்தங்களை நாம் முன்மொழியவேண்டிய அவசியம் கிடையாது.

ஏனெனில் இந்தவிடயம் குறித்து நாடாளுமன்றத்திலே கட்சித்தலைவர்கள் மாநாட்டில் கூட்டமைப்பு ஒரு சில விடயங்களை முன்வைத்திருக்கின்றது. அதாவது தேர்தல் தொகுதி மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் முறைமை மறுசீரமைப்பு ஆகியன இந்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்படவேண்டும் என்பதே அந்தக் கோரிக்கையாகும். இதனை நாம் கருத்தில் எடுத்தல் அவசியமாகும்.

முதலமைச்சர் குறிப்பிட்டதுபோல மக்களின் தேர்தல் உரித்தை இச்சட்டமூலம் பாதிக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனெனில் இச்சட்டமூலம் தேர்தல் உரித்தைப் பாதிக்காது. அத்தோடு ஒரேதினத்தில் தேர்தல்கள் என்ற விடயத்தையும் மக்களே எதிர்பார்க்கின்றார்கள்.

அரசு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை வைத்து பூச்சாண்டி காட்டி வருகின்றது. அரசமைப்பு உருவாக்க விடயத்திலும் அரசு இதே பூச்சாண்டியைத்தான் காட்டி வருகின்றது. இது உடனடியாக நிறுத்தப்படல் அவசியமாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்த ஒரு தேர்தல் அவசியப்படுகின்றது. ஆனால் அரசு தேர்தல்களுக்கு அஞ்சுகின்றது. எனவேதான் தேர்தல்களை ஒத்திவைக்கின்ற சட்டமூலங்களை அது அறிமுகம் செய்கின்றது. தேர்தல்களைப் பிற்போடுகின்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. 20ஆவது திருத்தச் சட்டமூலம் ஒரு அரசியல் சதுரங்கத்தின் முக்கிய காய், அதனை முழுமையாக நிராகரிக்க வேண்டும்-என்றார். (ய-8)

**Accounting - Home Visit Classes**
*1 ON 1/ Group - Eng/Tamil Medium*
**Teacher - Foreign Experienced**
O/L, A/L
**London, Cambridge Syll - 077 331 6402**

**விற்பனைக்கு**
**டயோஸ் ஒன் நாய்கள்**
மற்றும்
**கூடுகளும்** விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 076 697 1110**

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை, கடற்கரை வீதி
சென் தோமஸ் ஆலய அருகில்
4¼ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
**077 773 6534**

**தவறிவிட்டது**
சிவானந்தன் டுஷ்யந்தன் 902072535V
அடையாள அட்டை வங்கி அட்டைகள்
Licence, Tax,Insurance (NP GQ -2345, NPBFK - 3178) என்பன - வவுனியா விலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)
**077 175 2717**

**காணி விற்பனைக்கு**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி யிலிருந்து ஊரெழுப்பக்கமாக 500 மீற்றர் தொலைவில் 25 பரப்புத் தோட்டக்காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
**077 612 5314**

**சேவை**
**SB TRAVELS AND TOURS**
இங்கு இந்திய வீசா விண்ணப்பப்படிவங்கள் 100/ நிரப்பித்தரப்படும்
விமானப் பயணச் சீட்டுக்களுக்கான விசேட விலைக்கழிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சென்னை | - 28000 | பாங்கொக் | - 33500/= |
| சிங்கப்பூர் | - 32500/ | மலேசியா | - 32500/= |
| மதுரை | - 23000/- | கனடா (o/w) | - 76000/= |

No 212. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**021 222 9555 , 222 8555**

**வேலையாள்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கும் பிரபல உணவகத் திற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)
01. காசாளர்
02. உணவு பரிமாறுபவர்கள்
03. பார்சல் கட்டுபவர்
04. சமையல் உதவியாளர்
05. ரொட்டி/றைஸ்/கொத்து போடுபவர்கள்
**தொடர்புகளுக்கு - 077 907 9888**

**விஷேட பல் வைத்திய சேவை**
- பல் முக சிராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**கண்ணீர் அஞ்சலி**
எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி அ. கலைவாணி** அவர்களின் பாசமிகு கணவர்
**சி. அண்ணாமலை**
இயற்கை எய்தியுள்ளார் இத் துயரச் செய்திகேட்டு நாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். இத் துயரத்தில் நாங்களும் பங்குகொள்வ-தோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் நலன்புரி சங்கம்**
**யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் நாவற்குழி.**

**கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்**

கடந்த 20 ஆண்டுகளாக விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றி பற்றுறுதியுடன் எமது கல்லூரியை நேசித்த
**சின்னத்தம்பி முத்துலிங்கம்**
அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி கல்விச் சமூகம்**

**வேலைவாய்ப்பு தொடர்பானது**
பிரதேசங்கள் :- கிளிநொச்சி, பரந்தன், பளை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பிரிவுகளில் Field Officer ஆகப் பணிபுரிவதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
வயதெல்லை :- 18 - 35 வரை
மாத சம்பளம் :- 15,000 - 30,000 வரை
தொடர்புகளுக்கு :- 076 348 5315, 076 348 5325
நேர்முகத் தேர்வு :- 06.09.2017 - 12.09.2017 வரை.
இடம் :- 10ஆம் யூனிட், தர்மபுரம், கிளிநொச்சி.

**சிங்கள வகுப்புகள் ஆரம்பம்**
**சாவகச்சேரி**
அரச அலுவலர்கள் மற்றும்
க.பொ.த.உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் பதிவு செய்யவும்.
இடம் : மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பின் ஒழுங்கை
காலம் : 09.09.2017 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி
ஆசிரியர் : N. திருக்குமரன் (M.A)
சிங்கள மொழி வளவாளர் நீதிமன்ற பேச்சு மொழி பெயர்ப்பாளர் சத்தியப் பிரமாணம் செய்த சிங்கள மொழி பெயர்ப்பாளர்.
**தொ.பே.: 077 417 1382**

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்**
**துன்னாலை வடக்கு, புலோலி.**
**மஹோற்சவகால தற்காலிக கடை அமைத்தல் - 2017**
இவ் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ்வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் (09.09.2017) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் முற்பகல் 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப் பணத்தினை அன்றைய தினமே முழுமையாக செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
☆ ஐஸ்கிறீம் கடை ☆ இனிப்புக் கடை
☆ கச்சான் கடை ☆ புடவைக் கடை
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்,
துன்னாலை வடக்கு, புலோலி.
**021 226 3074, 021 205 6644** அறங்காவலர் சபை

**Unveiling the statue of Late Mr. V.Sivasubramanium**
(Former principal, Skandavarodaya College)


| | |
|---|---|
| Venue | : Skandavarodaya College |
| Date | : 07.09.2017 (Thursday) |
| Time | : 9.10 A.M |
| President | : *Skandavarodayan* Mr.M.Selvasthan *(Principal)* |
| Chief Guest | : Hon.Reginold Cooray *Governor, Nothern Province* |
| Word of Appreciation | : Hon.Dharmalingam Sitharthan *Member of parliament, Jaffna District.* |
| Word of blessing | : Dr.Aru Thirumurugan (Former principal, President, Thurga Thevasthanam, Tellipalai.) |
| Oral tribute | : Mr.K.Sivaji *Former principal* |
| Memorial Address | : *Professor* R.Vigneswaran *Vice-Chancellor, University of Jaffna.* " Higher Educational System in Sri Lanka " |
| Vote of thanks | : Dr.S. Sivanandarajah |

*You are cordially invited.* -Skanda Community-


பாரம்பரிய ஒடியற் கூழில் பிரசித்தி
பெற்றவர்களான
**யாழ்பாடியின்**

வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கு இணங்க பிரதி புதன்கிழமை தோறும்
இரவு 6.30 - 9 மணிவரை
ஒரே கைப்பக்குவமான வல்லுனர்களால் குழல் புட்டு, உரலில் இடித்த சம்பல், சொதி மற்றும் றால் பிரட்டல், கணவாய் மற்றும் நண்டுக்கறி என்பவற்றை பெற்றுக்கொள்ள முந்திக்கொள்ளுங்கள்
தொடர்பு: **யாழ்பாடி**
**தொ.பே.:075 987 5800/021 222 6868**
**49,51 - அம்மன் வீதி, நல்லூர்.**
**Colombo - T.P.:075 653 0348**

# பொன்சேகாவைச் சாடிய தளபதிக்கு மகிந்த பாராட்டு

கொழும்பு, செப். 6

இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கவை நாட்டு மக்கள் பாராட்ட வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக, முன்னாள் இராணுவத் தளபதிகள், இராணுவத்தின் பெயரைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க கூறியிருந்தார். முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவை குற்றவாளி என்று முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டமை தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்த கருத்துத் தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாவது:

'முன்னாள் இராணுவத் தளபதி



ஜெனரல் ஜயசூரிய மீது, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ள வேளையில், பாதுகாப்புப் படைகளின் மதிப்பைப் பாதுகாக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க கேட்டுக் கொண்டுள்ளார். இதற்காக இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கவை நாட்டு மக்கள் பாராட்ட வேண்டும். சரத் பொன்சேகாவின் அவதூறான கருத்துக்கள் படையினரை வெறுப்படையச் செய்துள்ளது' என்றும் மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். (5)

# மைத்திரிக்கு முதல் வாழ்த்து மகிந்தவே கூறினாராம்

*அரச தலைவர் அலுவலகத்திலிருந்து தகவல் கசிவு*

கொழும்பு, செப். 6

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 66ஆவது பிறந்த நாளை கடந்த ஞாயிற்றுக் கிழமை கொண்டாடினார். அவருக்கு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி உள்ளிட்ட பலர் வாழ்த்துத் தெரிவித்திருந்தனர். முதலாவது வாழ்த்து, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடமிருந்தே கிடைக்கப் பெற்றதாக, அரச தலைவர் அலுவலக வட்டார்ரங்கள் தெரிவித்தன.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் மைத்திரியின் பிறந்த நாளுக்கு மகிந்த ராஜபக்ச வாழ்த்துத் தெரிவிப்பதில்லை. ஆனால் திடீரென இந்த முறை அலைபேசி அழைப்பை ஏற்படுத்தி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வர் நாமல் ராஜபக்ச, மைத்திரியின் பிறந்த நாளுக்கு கீச்சகத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (5)

# கப்ராலின் கணக்குகளை ஆய்வு செய்ய அனுமதி

கொழும்பு, செப். 6

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்வதற்கு கோட்டை நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளின் வங்கிக் கணக்கு விவரங்களை ஆய்வு செய்யவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு வங்கிகளில் அவர்களுக்குக் காணப்படும் 12 கணக்குகள் குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளது.

அம்பாந்தோட்டையில் பொதுநலவாய நாடுகள் போட்டியை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 650 மில்லியன் ரூபா செலவிடப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன் மகேந்திரன் 2015ஆம் ஆண்டில மேற்கொண்ட முறைப்பாடுக்கு அமைய இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

**கடை வாடகைக்கு**
**றக்கா வீதி பொஸ்கோ**
பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள கடை வாடகைக்கு கொடுக்கப்படும். பாடாசலை உபகரணங்கள் Fancy பொருள்கள். Tea Maker, Photocopy Machine தளபாடம் என்பன விற்பனைக்குண்டு.
**077 684 5598/ 077 997 8332**

**மணமகள் தேவை**
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகவும் கொழும்பில் சொந்த தொழில் புரியும் 77 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு நல்ல குணமுடைய பெண் தேவை.
மிதுனராசி, திருவாதிரை நட்சத்திரம்
0014 3799 53958 (தாயார்)
077 711 1130 (மகன்)

**மணமகன் தேவை**
1988 யாழ். இந்து கௌரவ குடும்பத்-தினைச் சேர்ந்த உத்தராடம் 62 கிரகபாவம் கொண்ட பட்டதாரி மணமகளிற்கு பொருத்தமான மணமகன் தேவை. (சைவ போசனம்)
**தொடர்பு: 077 239 5894**

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி புவேந்தன் பாலர்
பகல் பராமரிப்பு நிலைய
நிறுவுநர்
சின்னத்தம்பி மகாலிங்கம்
அவர்களின் அன்புச் சகோதரரும்,
மானிப்பாயைச் சேர்ந்த
ஓய்வுநிலை ஆசிரியருமான

### சின்னத்தம்பி முத்துலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் வேதனையடைகின்றோம். அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**நிலைய நிர்வாகத்தினரும் ஆசிரியர்களும்,
புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்,
கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.**

## பதினைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி கந்தவனம் தர்சிகா

(மாணவி, கொக்குவில் இந்துக்கல்லூரி )

| சிந்தாமணி விநாயகர் அருளியது | சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது |
|---|---|
| 25.05.1990 | 23.08.2002 |

திதி : 06.09.2017

கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ
சிந்தாமணி ஐஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

கவி போட்டோ,
நவாலி தெற்கு.

அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்கா,
அத்தான், பெறாமகள், அண்ணி,
உற்றார், உறவினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.12.1939 | 06.09.2012 |

ஆண்டுகள் ஐந்து நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் - அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி - வாழ்வை
அர்ப்பணித்த எம் பாசத்தின் தீபமே
உங்கள் நிமிர்ந்த கம்பீர நடையும்
நேர்கொண்ட பார்வையும் - என்றும்
எம் நெஞ்சத்தை விட்டகலாது அப்பா!
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நிலைத்து வாழும்.

## மரண அறிவித்தல்கள்

"நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் இறைவா
முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக"

### ஆசீர்வாதம் மடுத்தீனுப்பிள்ளை



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22.12.1933 | 04.09.2017 |

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் மடுத்தீனுப்பிள்ளை 04.09.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் பரனார்ந்துப்பிள்ளையின் பாசமிகு சகோதரரும், அந்தோனிப்பிள்ளையின் அன்புக் கணவரும், அமலஉற்பவநாயகி (ராணி), அன்ரனி பெனான்டோ (யோர்ச்), மரியீரெலா (சின்ராணி), கெலன் மேரி அஞ்சலா (யோகம்), ஜெறாட் ராசகுமார் (குமார்), கறிரியூலியஸ் (செல்லக்குமார் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (07.09.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆன்ம இளைப்பாற்றுக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5ஆம் வட்டாரம்,
எழுவைதீவு.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**077 639 2487**

### சின்னத்தம்பி நடராசா
(ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்)



தோற்றம்: 05.08.1939
மறைவு : 04.09.2017

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நெல்லியோடை அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா (ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்) 04.09.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலன் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கல்யாணி, கமலகுமார், கலாறஞ்சன், கஜந்தினி (ஆசிரியை- யா /அத்தியார் இந்துக் கல்லூரி), கஜனிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரிமளம், பொற்கொடி, பரமேஸ்வரன், யோகம்மா, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புனிதவதி, ஜெயரமணன் (ஆசிரியர்- யா/ யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமனும், பிரியங்கன், கீர்த்தனா, கௌதமன், அக் ஷவி ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2017) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நெல்லியடி,
அச்சுவேலி தெற்கு.**

**தகவல்
குடும்பத்தினர்.**

077 296 2903



### கிருஸ்ணசாமி தங்கவேலாயுதம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி தங்கவேலாயுதம் கடந்த (22.08.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், சாந்தாதேவியின் அன்புக் கணவரும், தர்சனன், சுதன், லதன், நிறோஜா, லதியா ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2017) வியாழக்கிழமை ஜேர்மனியில் இறுதிச்சடங்குகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.**

**தகவல்:
சகோதர, சகோதரிகள்.**

**கணேசலிங்கம் - 077 713 1745,
பாலேந்திரன் - 077 556 9598, ரவீந்திரன் - 078 561 5016,
ஜெயலட்சுமி - 076 940 9660**

# போரில் குற்றங்கள் இழைக்கவில்லை எனில் ஜெகத் மீதான வழக்கில் நிரூபித்துக் காட்டுங்கள்

*அரசுக்கு சவால் விடுக்கிறார் கிழக்கு விவசாய அமைச்சர்*



இறுதிப்போரில் போர்க்குற்றம் நடைபெற்றுள்ளது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவருகிறது. அரசு போர்க்குற்றம் நடைபெறவில்லை என்று கூறுகின்றது. அவ்வாறாயின் போர்க்குற்றம் நடைபெறவில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவின் வழக்கில் நிரூபித்துக் காட்ட வேண்டும். உங்கள் தரப்பிலிருந்து எங்களுக்காக சாட்சி சொல்ல பொன்சேகா முன்வருகிறார். உண்மை நிச்சயம் வெளிவரும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இதுதான் எங்களுடைய நிலைப்பாடு. இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார். மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப்போர் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிய அனைத்துக் கருத்துக்களுக்கும் அரசு கடந்த காலங்களில் மாற்றுக் கருத்துக்களையே கூறிவந்தது. நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அனைத்துக் கூற்றுக்களுக்கும் ஆம் என்ற பதில் தற்பொது வந்துகொண்டிருக்கிறது.

போர்க்குற்றம் நடைபெற்றுள்ளது. அதற்குரிய விசாரணை, பன்னாட்டு நீதிமன்றம் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கூறியபோது அனைத்தையும் மறுத்தார்கள். சகல விடயங்களும் பன்னாட்டுச் சமூகத்தின் முன்னிலையிலேயே நடைபெறுகிறது.

போர்க்குற்றம் நடைபெறவில்லை என்பதை அரசு திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தநிலையில், முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் போர்க் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கருத்து கூறுவதற்கு முன்னரே அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, ஜெகத் ஜயசூரிய போர்க்குற்றமிழைத்துள்ளார் என்றும் அவருக்கு எதிராக தான் சாட்சியமளிக்க தயாராகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

உண்மைகள் வெளிவரவிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்படி விடயங்களை அரசியலாக்க நினைப்பது உண்மையை மூடிமறைக்கின்ற முயற்சியாக இருக்கும். உண்மையை மூடி மறைக்க நினைப்பது வெற்றிபெறக்கூடிய செயற்பாடு அல்ல.

மகிந்த அணியும் ஏனையவர்களும் இதனை நாட்டுக்கு எதிரானதாகவும் படை வீரர்களுக்கு எதிரானதாகவும் கூறிக்கொள்ள முற்படுவதற்கு காலம் பதில் சொல்லும். தங்களுடைய படை மிகவும் கண்ணியமாகச் செயற்பட்டது என்றால் அதனை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. எந்தவித பயமும் இல்லாமல் அதனை நிரூபிக்க வேண்டும். தங்களுடைய படை பன்னாட்டு நியமங்களைக் கடைப்பிடித்து போரைச் செய்தது என்பதை நிரூபிப்பதற்கு அரசுக்கு நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. இதற்கு முதன்முதலான சான்றாக அமையப்போவது முன்னாள் இராணுவத்த தளபதி ஜெகத் ஜயசூரியவின் வழக்கு - என்றார். (5)

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 11 . 05 . 1940

இறப்பு 03 . 09 . 2017

## வில்பிறட் யேசுதாஸன் சூசைரட்ணம்

**(சிரேஸ்ட விரிவுரையாளர், தலைவர்,வணிக முகாமைத்துவபீடம், வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்)**

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், இறம்பைக்குளம் வவுனியா, வெள்ளவத்தை, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வில்பிறட் யேசுதாஸன் சூசைரட்ணம் (சிரேஸ்ட விரிவுரையாளர், தலைவர்,வணிக முகாமைத்துவபீடம், வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்) 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வில்பிறட் - அஞ்சலீனாப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை - மேரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கிறேசின் அன்புக் கணவரும், யூட்டொறிஸ், பற்றிக்ஜெராட் (விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி),லுக்னறீசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன் (ஆசிரியர் - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), நிர்மலா, ஜெசீந்திரன் (கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோடினி, கிரிசாட், ஷபோன்,அற்றினா, தியோட்றா ஆகியோரின் பாசமிகு பேரனும், அருட் சகோதரர் மைக்கல் (அன்புப்பணி சகோதரர்கள் சபை - மட்டக்களப்பு), சூசைநாதர் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - நிறுத்தலளவை திணைக்களம்)ஆகியோரின் அன்பு சகோதரரும், பயஸ்,சிறில், ரதி, நீற்றா, பேனாட் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.09.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா, இறம்பைக்குளம் தூய அந்தோனியார் ஆலயத்தில் முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியின் பின் இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.57, சங்கரப்பிள்ளை வீதி,**
**இறம்பைக்குளம், வவுனியா**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 520 4404, 077 138 4248**



பிறப்பு 18 . 11 . 1950

இறப்பு 05 . 09 . 2017

## விஜயரெத்தினம் சத்தியபாமா (பாமா)

மூளாய், காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, பணிக்கர்வளவை வதிவிடமாகவும் கொண்ட விஜயரெத்தினம் சத்தியபாமா (பாமா) நேற்று (05.09.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு கனிஷ்ட புதல்வியும், வடிவாம்பிகை (வடிவு), ஜெயக்குமாரன் (ஜெயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்தியின் அன்பு மைத்துனியும், பிறேமாலதி, கலாவதி, கிரிதரன், உதயா ஆகியோரின் பாசமிகு சிறிய அன்னையும், கண்ணதாஸ், அருட்கரன், லதா, சந்திரசேகரம் ஆகியோரின் பாசமிகு மாமியும், கனிமொழி, கேதாயினி ஆகியோரின் அன்பு அத்தையும், மதுரிகா, லிபோசன், திர்பசன், டிரோஷன், சரோன், கோஷரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09. 2017) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இல.91/B லக்ஷபானாவீதி, தோணிக்கல், வவுனியாவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.91/B லக்ஷபானாவீதி,**
**தோணிக்கல், வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# நினைவலைகள்

16ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு

பிறப்பு 08.03.1928
இறப்பு 02.03.2001

பிறப்பு 31.12.1938
இறப்பு 07.09.2016



**சாமிநாதர் சபாநாயகம்** | **சிசிலிஅம்மா சபாநாயகம்**

அன்பின் இறைவா மனுக்குலத்தின் மீட்பரே, எமது அன்புக்குரியவளாய் உம்மில் நம்பிக்கை வைத்து வாழ்ந்து, இவ்வுலகினின்று உம்மிடம் நீர் அழைத்துக் கொண்ட அமரர் சிசிலிஅம்மா சபாநாயகத்தின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உம்மை இரந்து மன்றாடுகின்றோம். உம் புனிதர்களோடு எக்காலமும் உம்மை துதிக்க அவருக்கு கட்டளையிட்டருள்வீராக. ஆமென்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (07.09.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஏழாலை இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஏழாலை கிழக்கு.** **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கௌரியம்மா கனகரெட்ணம்



தோற்றம் 09.01.1936 | மறைவு 05.09.2017

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரியம்மா கனகரெட்ணம் நேற்று (05.09.2017) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ம.வீ. கனகசபை (மானா வீயன்னா), தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வைத்தியர் கனகரெட்ணத்தின் அன்பு மனைவியும், குமுதினி, நந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தெய்வேந்திரம், சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கிசான், நிலானி, சாரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21/3, 3 ஆம் ஒழுங்கை (அன்னசத்திர ஒழுங்கை), கந்தர்மடத்திலுள்ள அவரின் இல்லத்தில் நாளை (07.09.2017) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: திருமதி தெ.குமுதினி, திருமதி ச.நந்தினி**

**021 222 9105**

## திருமதி கமலேஸ்வரி (ராதிகா) லோகானந்தன்



புங்குடுதீவு, கேரதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி (ராதிகா) லோகானந்தன் 04.09.2017 திங்கட்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இராசரெத்தினம் - கமலாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கிருபானந்தன் மற்றும் இராஜேஸ்வரி (கனடா) தம்பதிகளின் அன்பு மருமகளும், லோகானந்தத்தின் அன்பு மனைவியும், வினேஷ் (மாணவன் - செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலை), விஷாலி ஆகியோரின் அருமைத் தாயாரும், கமலதாசன், விமல்ராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,துஷாந்தன், சுஹாசினி (சுவிஸ்), பிரதீபன் (கனடா), யாழினி (கனடா), சுகந்தினி (கனடா), கஜேந்தினி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், திஷகுமார், ஹம்சிதா, பவித்ரா, யசோதரன் ஆகியோரின் சகலியும், நவீன், நிலா, தயாளன், டிஷான், மதுஷாந், சஸ்மிதா, கவிஷன், பேபிசாளினி, சுகானா ஆகியோரின் பாசமிகு அத்தையும், அநிகாவின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2017) வியாழக்கிழமை புங்குடுதீவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**7ஆம் வட்டாரம், கேரதீவு,**
**புங்குடுதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**கணவர் 076 845 3878,**
**துஷாந்தன் (மைத்துனர்) -1416 904 3719**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தமிழ்க் கூட்டமைப்பு சொல்ல வேண்டியதை பொன்சேகா சொல்கிறார்

இராணுவச் சீருடை அணிந்த காரணத்துக்காக எவருடைய குற்றங்களையும் மறைக்க முடியாது என்று நெற்றிப்பொட்டில்ஓங்கிஅடித்தமாதிரிபளிச்செனச் சொல்லியிருக்கிறார் பீல்ட் மார்ஷலும், அமைச்சருமான சரத் பொன்சேகா.

போர்க்குற்றங்களுக்காக இராணுவத் தளபதி மீதோ, தளபதிகள் மீதோ, எந்தவொரு படையினரின் மீதோ கைவைக்க வெளிநாட்டு அமைப்புகளை அனுமதிக்கப்போவதில்லை என்று அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனகூறியிருந்தார். சிறிலங்காசுதந்திரக்கட்சியின்66ஆவது ஆண்டு மாநாட்டில் அவர் இதனை உரத்துச் சொன்னார். மைத்திரியின் கருத்துக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே சரத்பொன்சேகாவும் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

சீருடைஅணிந்தார்கள்என்றகாரணத்துக்காககுற்றவாளிகள் தப்பிச்செல்வதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை அரசியல் தலைவர்களும், அரச தலைவரும்கூட தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார் சரத் பொன்சேகா.

பொன்சேகா ஓர் இராணுவவாதி. 2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும், கொழும்பில் அதிகாரத்தில் இருந்த ரணில் தலைமையிலான ஆட்சிக்கும் இடையே பன்னாட்டுக்கண்காணிப்புடனான அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தகாலத்தில்,யாழ்ப்பாணத்தின்இராணுவத்தளபதியாக இருந்தவர். அமைதிப் பேச்சின் ஓர் அங்கமாக அமைக்கப்பட்ட உபகுழுக்களில் வடக்கு முனையில் இராணுவத்தின் சார்பில் தலைமை அதிகாரியாகக் கலந்துகொண்டவர். இராணுவவிடயங்களில்வடக்குமுனையில்எந்தவிட்டுக்கொடுப்புக்கும் மறுப்புத் தெரிவித்து வந்தவர். அந்த உபகுழுக்களால் பயனேதுமில்லை என்று விரக்தியடைந்து அதிலிருந்து புலிகள்வெளியேறும் அளவுக்குப்பிடிவாதத்துடன் இருந்தவர்.

ஒருவகையில்அந்தஅமைதிநடவடிக்கைகளின்மீதுபுலிகள் நம்பிக்கையிழக்கவும், மீண்டும் போர்ஒன்றை நோக்கி அவர்கள்நகர்வதற்கும் ஆணிவேராக இருந்தவர்களில் முதன்மையானவராகசரத்பொன்சேகாவையும் குறிப்பிடலாம். அதன் மூலம் இறுதிப் போரில் நிகழ்ந்த மனிதப் பேரவலத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டவரும் அவர்தான். பின்னர் கோடுகளின் மூலம் முழுப்படத்தையும் வரைந்து பேரவலத்தை உருவாக்கியவரும் அவர்தான்.

இறுதிப் போரில் நடந்த மனிதப் பேரவலங்களுக்கும் மனித குலத்திற்கு எதிரானகுற்றங்களுக்கும் அப்போதைய இராணுவத் தளபதி என்கிற வகையில் அவரும் பொறுப்பாளிதான். பன்னாட்டுப் போர்க்குற்றச் சட்டங்களின் அடிப்படையில் அனைத்துக் குற்றங்களுக்கும் கட்டளைப் பொறுப்பை ஏற்க வேண்டிய முதன்மை நபர்களில் அவரும் ஒருவர். அதை அவர்நிராகரிக்க முடியாது. நீதியான போர்க்குற்ற விசாரணை என்ற ஒன்று வந்தால், குற்றவாளிகள் பெயர்ப்பட்டியலில் பொன்சேகாவின் பெயர் வராமலிருக்க முடியாது.

தனிப்பட்ட முரண்பாடு, மோதல் காரணமாக இராணுவத்தின் முன்னாள் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பொன்சேகா இப்போது போர்க்குற்றச்சாட்டுக்களைச்சுமத்தக்கூடும். அதற்காக, அதன்பின்னால் உள்ளபாராதூரமானவிளைவை அவர் அறியாமல் இருப்பார் என்று சொல்வதற்கில்லை. அதையும் தாண்டி அவர் சொல்கிறார் என்றால், அதன் உள்ளே நிறைய பொருள் பொதிந்த செய்திகள்இருக்கின்றன. தன்னைவிட போர்க்குற்றங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று அவர் எண்ணுவதாலும் இப்படிக் கூறக்கூடும்.

அந்த உண்மைகள் வெளியே வரவேண்டும். அதுதான் தமிழர்களின் தேவை. அதை மறைக்க தெற்கின் அரசியல் தலைவர்கள் முயற்சிக்கும்போது, அதற்கெதிரான அறச்சீற்றத்தைக் காட்டியிருக்கவேண்டியது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் அதன் தலைவர்களுமேயாவர். ஆனால் அது நடக்கவில்லை. அரச தலைவரின் கருத்துக்குக் கூட்டமைப்புச் சொல்லியிருக்கவேண்டிய பதிலை பொன்சேகா சொல்லியிருக்கிறார்.

# மோசமானதொரு கட்டத்தில் இந்து சமுத்திரத்தின் முத்து



இந்துமதி

தென்னிலங்கையின் அரசியல் நிலவரங்களைப் பார்க்கும் போது நாடு மோசமானதொரு கட்டத்தை எட்டியுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. மகிந்ததரப்பினர்மீதானகுற்ற விசாரணைகள் ஒருபுறம் ஆமை வேகத்தில் இடம்பெறுகின்றன. அதேவேளை அமைச்சர்களின் பதவி விலகல்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தி வருகின்றன.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மகிந்தவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளமை அரச தலைவருக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் இவர் தமது கட்சியிலுள்ள அதிருப்தியாளர்களைக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவரால் அது முடியவில்லை.

### ராஜிதவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

தற்போது மகிந்த அணியைச் சேர்ந்த 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளித்துள்ளனர். அதில்என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. இதை ஏற்றுக்கொள்வதா? இல்லையா என்பதை சபாநாயகரே தீர்மானிக்க வேண்டும்.

மகிந்த தரப்பினரின் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ராஜித அடிக்கடி கருத்துத்தெரிவித்து வருகின்றமை அவர்களுக்கு எரிச்சலூட்டியதால், அவருக்கு எதிராகக் கிளம்பியுள்ளதாகவும் கருத வேண்டியுள்ளது. இதைவிட சைட்டம் விவகாரமும் அவருக்கு எதிரான எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஏற்கனவே ரவி கருணநாயக்கா, விஜயதாஸ ராஜபக்ச ஆகியோர் பதவி விலகிய நிலையில், தற்போது ராஜித விவகாரமும் வெளிக் கிளம்பியுள்ளது. மத்திய வங்கியின் பிணைமுறி ஊழலுடன் தொடர்புடைய நிறுவனமொன்று சொகுசு வீடொன்றைக்கொள்வனவு செய்வதற்கு ரவிகருணாநாயக்க குடும்பத்துக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் தமது பதவியை விட்டு விலக நேர்ந்தது. தம்மையொரு நேர்மையானவரென நிரூபிப்பதற்கும் அவரால் முடியவில்லை. அந்த வீட்டின் கொள்வனவு தொடர்பாக அவர் கூறிய விளக்கமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமைந்திருக்கவில்லை.

### விஜேதாச ராஜபக்ச மகிந்த விசுவாசியே

விஜயதாச ராஜபக்சவைப் பொறுத்தவரையில், அவர் கூட்டு அரசில் இணைந்திருந்தாலும், மகிந்த ராஜபக்ச மீதான விசுவாசத்தை ஒருபோதும் கைவிடவில்லை. நீதி அமைச்சர் என்ற வகையில் மகிந்த தரப்பினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் கிடப்பில் போடப்படுவதற்கு இவரே காரணமாக இருந்துள்ளார். சட்டமா அதிபரையும் இவர் கட்டப்படுத்தியிருந்தமையால், அவரும் மகிந்த தரப்பினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் கையாள்வதில் ஆமை வேகத்தைக் கடைப்பிடித்தார். அது மட்டுமல்லாது மகிந்த அணியினரின் பகிரங்க ஆதரவு விஜேதாசவுக்குத் தாராளமாகவே கிடைத்து வந்தது. இந்தநிலையில்தான் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம், விஜேதாசவை அமைச்சர் பதவியில் இருந்து அரச தலைவர் அகற்றினார். இதையொரு அவமானகரமான வெளியேற்றம் என்றே குறிப்பிட வேண்டும். இனவாதத் தரப்பினரும், பௌத்த பீடங்களும் விஜயதாஸவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியபோதிலும், அரச தலைவர் தமது முடிவில் உறுதியாக இருந்தமை பாராட்டுதற்குரியது.

போர் காரணமாகத் தமது வீடுகளை இழந்து நிர்க்கதியான நிலையில் வாழ்கின்ற வடபகுதியைச்சேர்ந்தமக்களுக்குரிய வீட்டுத் திட்டங்களை வழங்குவதில் மீள்குடியேற்ற அமைச்சு தாமதமான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது.

முதலில் பொருத்துவீடுகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. பொருத்து வீடுகள் வடபகுதியின் காலநிலைக்கு ஏற்றதல்ல எனக் கூறி அவற்றுக்கு எதிராக எதிர்ப்புக்களும் கிளம்பின. தற்போதுபொருத்து வீடுகள் தொடர்பான கதைகளைக் கேட்க முடியவில்லை. கல்வீடுகள் வழங்கப்படவிருப்பதாகத் தற்போது கூறப்படுகின்றது. இதிலும் தாமதம் தான் காணப்படுகின்றது. மீள்குடியேற்ற அமைச்சர் ஒரு தமிழராக இருக்கின்ற போதிலும் அவர் தமிழர்களின் வேதனைகளை உணர்ந்தவராகத் தெரியவில்லை. இவர் தொடர்பாக அரச தலைவரோ அல்லது தலைமை அமைச்சரோ நடவடிக்கை எதுவும் எடுப்பதாகவும்தெரியவில்லை.'

### போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகளாகியும் மாற்றம் எதுவும் இல்லை

போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. நாட்டில் ஆட்சி மாற்றமும் ஏற்பட்டுவிட்டது. வடக்கில் மாகாணசபை ஒன்றும் இயங்கிவருகின்றது.

ஆனால் போர் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் எந்தவிதமான மாற்றத்தையும்காணமுடியவில்லை. தமது இடங்களைவிட்டு இடம் பெயர்ந்தவர்களில் கணிசமானவர்கள் இன்னமும் அகதி முகாம்களிலும், வேறு இடங்களிலும்அவலவாழ்வுவாழ்ந்து வருகின்றனர்.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதிலும் இழுபறிநிலை காணப்படுகின்றது. இதைவிட போரில் கணவன்மாரை இழந்த பெண்களின் நிலை மோசமாகிக் கொண்டே போகின்றது. பொருளாதார ரீதியில் அவர்கள் பெரும்இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் இதுவரையில் இவர்களுக்கு உதவும் விதத்திலானதிட்டங்கள்எவையும் முன்னெடுக்கப்படவில்லை. அரசின் மெத்தனப் போக்கையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

இதைவிட இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள். மனிதஉரிமைமீறல்கள்தொடர்பாக அரசு அக்கறை காட்டுவதாகவும்தெரியவில்லை.

சிறுபான்மையின மக்கள் இந்த அரசு அமைக்கப்படும் போது மிகுந்த நம்பிக்கையுடன் காணப்பட்டனர். தமது பிரச்சினைகளுக்கெல்லாம் புதிய அரசு தீர்வை வழங்குமெனவும் அவர்கள் நம்பினர்.

ஆனால் இன்று ஏமாந்த நிலையிலேயே அவர்கள் காணப்படுகின்றனர். அதே வேளை இந்த அரசு கவிழுமானால் தங்களின் கதி என்னவாகுமெனவும் அவர்கள் அச்சமடைய ஆரம்பித்துவிட்டனர்.

கூட்டு அரசு சவால்களை முறியடித்து முன்னேற்றப் பாதையில் செல்லுமா? அல்லது எதிர்ப்புக்களைக் கண்டு துவண்டுவிடுமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


சேரலாதன்

# வட மாகாண சபையை மக்கள் இனியும் நம்புவார்களா?

நாட்டில் உள்ள ஒன்பது மாகாண சபைகளில் வடக்கு மாகாண சபை மக்களின் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனின் அதிரடியான நடவடிக்கைகளே காரணமாகும்.

ஏனைய மாகாணசபைகளைவிட வடக்கு மாகாணசபைக்குப் பொறுப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. போர் இடம்பெற்று, அழிவுகளைச் சந்தித்த பகுதி என்பதால், வடபகுதியில் அபிவிருத்திச் செயற்பாடுகளை அதிக அளவில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களும் இங்கு அதிகமாக வசிப்பதால் அவர்களது தேவைகளும் கவனிக்கப்பட வேண்டியுள்ளன. இதற்கு அதிகளவான நிதி தேவைப்படுகின்றது. இந்த நிதியைப் பயன்படுத்தி வேலைத்திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு மாகாணசபையில் ஊழல் செயற்பாடுகளற்ற, திறமைவாய்ந்த நிர்வாகம் இடம்பெறவேண்டியது கட்டாயம்.

ஆனால் இன்று வடக்கு மாகாணசபையில் இவற்றைக் காண முடியவில்லை. மிகப்பெரும்பான்மைப் பலத்துடன் மாகாண அரசு அமைக்கப்பட்டபோதிலும், ஆளும் தரப்புக்குள் எழுந்துள்ள குத்துவெட்டுக்கள், அதன் செயற்பாடுகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன. அமைச்சர்கள் மீதான விசாரணைகள் இடம்பெற்று அதன் முடிவுகள் வெளிவந்த பின்னர் மாகாணசபையில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையல்ல. முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனே குழப்பங்கள் யாவற்றுக்கும் பிள்ளையார் சுழி இட்டார். அவரது தன்னிச்சையான செயற்பாடுகள் மாகாண சபையின் சுமுகமான இயக்கத்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிட்டன.



### முதலமைச்சரது தன்னிச்சையான முடிவுகளால் குழப்பம்

தமக்கு விருப்பமானவரைப் பதவியில் அமர்த்துவதற்கும் வேண்டாதவர்களைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கும் அவர் மேற்கொண்ட தீர்மானங்கள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டன. மாகாணசபை உருவாகிக் கடந்த நான்கு ஆண்டுகளில் அமைச்சரவையில் ஆறு தடவைகள் மாற்றங்கள் இடம்பெறும் அளவுக்கு நிலைமை மோசமாகக் காணப்படுகின்றது. அமைச்சர்களை அடிக்கடி நீக்குவதும், புதிதாக நியமிப்பதும் நிர்வாக ரீதியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். வடக்கு மாகாணசபையில் உறுப்பினர்களாக உள்ளவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் நிர்வாக ரீதியாக அனுபவம் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இத்தகையவர்கள் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கும்போது ஆரம்பத்தில் சிறிது தடுமாறவே செய்வர். சிறிது காலத்துக்குப் பிறகு நிர்வாக ரீதியான அனுபவத்தைப் பெற்றுவிடுவார்கள். இந்த நிலையில் இவர்களைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு முதலமைச் சர் மேற்கொண்ட தீர்மானங்கள் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டன.

### அளவுக்கு அதிகமான அமைச்சுப் பொறுப்பால் முதல்வர் திண்டாட்டம்

முதலமைச்சர் ஏராளமான அமைச்சுப் பொறுப்புக்களைத் தம்வசம் வைத்துக் கொண்டுள்ளதால், அவற்றின் செயற்பாடுகளும் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றன.

ஏற்கனவே இருந்த அமைச்சுக்களுடன் பதவி விலக்கப்பட்ட பா.டெனீஸ்வரனின் பொறுப்பிலிருந்த போக்குவரத்து அமைச்சையும் முதலமைச்சர் தம்வசம் எடுத்துள்ளார். போக்குவரத்துச் சேவையில் ஏற்கனவே பிரச்சினைகள் உள்ள நிலையில் அதைப் புதிதாகக் கையாளப்போகும் முதலமைச்சர் என்ன செய்யப்போகின்றார்? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

### முதலமைச்சருக்கு எதிராக நீதிமன்றம் செல்லவுள்ள முன்னாள் அமைச்சர்

இதேவேளை தாம் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளேன் என்று முன்னாள் மாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். இதை எதிர்கொள்வதற்குத் தாம் தயாராகவே இருப்பதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இனிமேல் முதலமைச்சர் தமது நேரத்தில் பெருமளவை நீதிமன்றத்திலேயே கழிக்கவேண்டி வரும். இதனால் அவரது அன்றாடப் பணிகளுக்குப் பாதிப்பு ஏற்படப் போகின்றது. முன்னாள் நீதியரசரான முதலமைச்சரும், சட்டத்தரணியான பா.டெனீஸ்வரனும் மோதிக் கொள்வ தால் மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

இதேவேளை ரெலோ கட்சியால் முன்மொழியப்பட்ட ஒருவரை அமைச்சராக நியமிக்காது, தாம் விரும்பிய அதே கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவரை முதலமைச்சர் நியமித்தமை ரெலோ கட்சித் தலைமைக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்க ளில் ஒருவரான என். சிறிகாந்தா தமது அதிருப்தியை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

ஆனால் இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் விக்னேஸ்வரன், கட்சிகள் எடுக்கும் தீர்மானம் முதலமைச்சரைக் கட்டுப்படுத்தாது எனக் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையில் கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் ஆட்சியே இடம்பெற்று வருகின்றது. உறுப்பினர்கள் நினைத்தால் முதலமைச்சரைப் பதவியில் இருந்து நீக்கிவிடவும் முடியும்.

தமிழ் அரசுக் கட்சி, முதலமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது ரெலோவைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் அதை ஆதரிக்கவில்லை. அவர்கள் ஆதரவு வழங்கியிருந்தால் முதலமைச்சர் இன்று பதவியில் அமர்ந்திருக்க முடியாது.

இதை முதலமைச்சர் ஏனோ மறந்துவிட்டார். தம்மைப் பதவியில் அமர்த்திய கட்சிகளுடன் பகைத்துக் கொண்டு அவரால் ஒருபோதுமே தமது பதவியில் நிலைத்தி ருக்க முடியாது. ஏற்கனவே தமிழ் அரசுக் கட்சியுடன் முரண்பட்ட அவர் தற்போது ரெலோவுடனும் பகைத்துக் கொண்டு நிற்கின்றார்.

வடக்கு மாகாணசபை எந்தவிதமான இடையூறுமின்றி இயங்குவதே முதன்மையானதாகும். இதை முதலமைச்சரே உறுதி செய்து கொள்ள வேண்டும். மாகாணசபை செயற்பட ஆரம்பித்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. இந்த நான்கு வருடங்களில் சாதித்தவை எவை எனப் பார்த்தல் அவசியம். ஒருகணம் நினைத்துப் பார்த்தால் எதையாவது சாதித்தால் தானே அது குறித்துப் பொதுவெளியில் பேசப்படும். இந்த நிலையில் அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுமாயின் இவர்கள் எதைக் கூறி வாக்குக் கேட்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. மக்கள் மாகாணசபை மீதான வெறுப்பின் உச்சத்தில் இருப்பதால் அவர்கள் மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

தற்போது வடக்கு மாகாணசபை மக்களுக்கு உதவாததொரு நிறுவனம் போன்றே தோற்றமளிக்கின்றது. மக்களின் வரிப்பணத்தை விரயமாக்கிக் கொண்டு பொறுப்பற்ற விதத்தில் மாகாணசபை நிர்வாகத்தை மேற்கொள்வதை மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்கள். இதை முதலமைச்சரும், மாகாணசபை உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.




## அழுவதா? சிரிப்பதா?

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழக விவசாயிகள், அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் புதுப்புது வேடங்கள் புனைந்து தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்து தற்போது இரண்டு மாதங்கள் நிறைவடையும் நிலையிலும், இந்திய மைய அரசு அவர்களது போராட்டம் குறித்து எந்தவொரு அக்கறையும் செலுத்த முன்வரவில்லை என்பது பரிதாபத்துக்கு உரியது.

அச்சு ஊடகங்களால் தொடர்ச்சியாக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வரும் இந்த விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசு அக்கறை காட்டாதது இலங்கைத் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் ஆச்சரியம் ஏற்படுத்தப் போவதில்லை.

ஏனெனில், பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தையே தமது சாத்வீகவழிப் போராட்டத்தால் நிலைகுலைய வைத்ததன் மூலம் இந்திய நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த காந்தியின் வழியில் எம் ஈழத் தமிழர் நலன் தொடர்பில் குறிப்பிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை இந்திய அரசு நிறைவேற்றக் கோரி உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தவர் தியாகி திலீபன். அந்தத் தியாகி திலீபனது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்து தனது அதிகாரச் செருக்கால் அவனை அணுஅணுவாகச் சாக வைத்த காந்தி தேசம், தமிழக விவசாயிகளது போராட்டத்துக்கு மசிந்து கொடுத்துவிடவா போகிறது?

தனது பிராந்திய நலன்சார் கொள்கையை நிலை நிறுத்த ஈழத் தமிழர்கள் மீது இன அழிப்பை மேற்கொண்ட இலங்கை அரசுக்கு முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் துணை நின்று தனது அதிகாரச் செருக்கை வெளிப்படுத்திய அரசல்லவா இந்திய மத்திய அரசு.

இத்தனைக்கும் சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படும் வரை இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் எனக் கூறியதைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்று தோன்றவில்லை.

*ரீ.ராஜா, யாழ்ப்பாணம்.*

# அனித்தாவுக்கான போராட்டம் காட்டுத் தீ போல் பரவும் நிலை

சென்னை, செப். 6

தமிழக மாணவி அனித்தாவின் மறைவுக்கு நீதி கேட்டு தமிழக மாணவர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். சென்னை, திருச்சி, நெல்லை, புதுவை உள்ளிட்ட இடங்களில் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. சுமார் 25ஆயிரம் மாணவர்கள் இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர் என்று இந்திய ஊடகங்கள் குறிப் பிட்டன.

இந்திய மைய அரசு அறிமுகப் படுத்திய நீட் தேர்வுப் பரீட்சையால், மருத்துவராக வேண்டும் என்ற தனது கனவு பொய்த்துப்போன விரக்தியில் தமிழக மாணவி அனித்தா கடந்த வெள்ளிக்கிழமை தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துக் கொண்டார். அனித்தாவின் இறப்புக்கு இந்திய மைய அரசு கொண்டு வந்த நீட் தேர்வே காரணம். அதை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்து தமிழகத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.



நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆளுநர் மாளிகை முற்றுகையிடப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்றும் பல இடங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. சென்னை, திருச்சி, நெல்லை, புதுவை உள்ளிட்ட இடங்களில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன. ஒட்டு மொத்தமாக சுமார் 25ஆயிரம் மாணவர்கள் இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டனர்.

**தம்பித்துரை மன்னிப்புக்கேட்டார்**

"அரியலூர் மாவட்டம் செந்துறையில் மாணவி அனித்தா தற்கொலை செய்த சம்பவம் எங்களுக்கும் மனவருத்தத்தை ஏற்படுத்தியது.

மருத்துவப் படிப்பில் சேர முடியாததால் அவர் இந்த முடிவை எடுத்திருக்கக்கூடாது. ஒரு ஆண்டு காத்திருந்து அடுத்த ஆண்டு சேர்ந்திருக்கலாம். அனித்தாவின் தற்கொலைக்கு நாங்கள் வருத்தமடைகிறோம். அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்" என்று நாடாளுமன்ற துணை சபாநாயகர் தம்பித்துரை தெரிவித்தார். (ம)



## மலாலா மீது தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் சுட்டுக் கொலை

கராச்சி, செப். 6

பாகிஸ்தானில் கடந்த 2012ஆம் ஆண்டு மலாலா மீது தாக்குதல் நடத்திய நான்கு ஆயுததாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தின் ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் தெக்ரீக்-இ-



தலிபான் ஆயுததாரிகள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் பெண்களின் கல்விக்கு தடை விதித்திருந்தனர். அப்போது அங்கு வசித்து வந்த மலாலா என்ற சிறுமி ஆயுததாரிகளின் மனித உரிமை மீறலுக்கு எதிராகவும், பெண் கல்விக்கு ஆதரவாகவும் போராடி வந்தார்.

இதனால் கோபமடைந்த தலிபான் ஆயுததாரிகள் சிறுமி மலாலா மீது 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தினர். மலாலாவின் அமைதி சார்பு நடவடிக்கைகள், மதசார்பற்ற தன்மை மற்றும் தலிபான் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக இந்தத் தாக்குதலை நடத்தியதாக தலிபான் அமைப்பு அறிவித்தது. எனினும் அதிர்ஷ்டவசமாக படுகாயங்களுடன் உயிர் பிழைத்த மலாலா பின்னர் பிரிட்டன் சென்று சிகிச்சை பெற்றார்.

தற்போது பிரிட்டனிலேயே வசித்து வருகிறார். இந்த நிலையில் மலாலா மீது தாக்குதல் நடத்திய ஆயுததாரிகளை நேற்றுமுன்தினம் சுட்டுக்கொன்றதாக பாகிஸ்தான் அறிவித்தது. (ம)

## வடகொரியாவுக்கு சீனா கண்டனம்

வடகொரியா தனது தவறான அணுகுமுறைகளை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது சீனா.

வடகொரியா அண்மையில் அணுகுண்டைவிட சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டைச் சோதித்தது. இந்தச் சோதனையின் போது 6.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்று தென்கொரியா தெரிவித்தது. இதையடுத்து ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் ஒன்றுகூடி வடகொரியாவுக்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. இதில் வைத்து வடகொரியாவுக்கு தனது எச்சரிக்கையை விடுத்தார் ஐக்கிய நாடுகள் சபைக்கான சீன தூதர் லியூ ஜி.

"நிலைமையை மோசமாக்கும் தவறான நடவடிக்கைகள் மேற்கொள்வதை நிறுத்திக்கொள்ளுமாறு வடகொரியாவை நாங்கள் உறுதியாக வலியுறுத்துகிறோம். சொந்த நலன்களை காப்பதற்கு பேச்சின் மூலம் தீர்வு காணும் வழியில் இறங்குங்கள். வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் போது அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா மேற்கொண்டுவரும் அணுஆயுதச் சோதனைகள் மற்றும் இராணுவ நடவக்கைகளை நிறுத்துவது குறித்தும் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## 2 வாரங்களில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ரொஹிங்யர்கள் அகதிகளாக ஓட்டம்

*ஐ.நா. சபை கவலை*

மியன்மாரில் இருந்து கடந்த இரண்டு வாரங்களில் சுமார் ஒரு லட்சம் ரொஹிங்யர்கள் அகதிகளாக பங்களாதேஷுக்குச் சென்றுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

கடந்த 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்பு செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. இதனால் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் அயல்நாடான பங்களாதேஷுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் சுமார் ஒரு லட்சம் ரொஹிங்யர்கள் அவ்வாறு அகதிகளாகச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

> பௌத்த நாடான மியன் மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது.





## ரொஹிங்யர்களுக்கு சூகியின் பதிலென்ன

*மலாலா கேள்வி*

லண்டன், செப். 6

"மியன்மாரின் ரோஹிங்ய முஸ்லிம்கள் சந்தித்து வரும் இன்னல்களைப் போக்க உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறது" என்று தெரிவித்தார் அமைதிக்கான நோபல் பரிசு வென்ற பாகிஸ்தான் சிறுமி மலாலா.

"ரோஹிங்ய முஸ்லிம்கள் மீது இராணுவத்தினர் நடத்தும் தாக்குதல் துயரகரமானது மற்றும் வெட்கக் கேடானது. எனவே ரோஹிங்ய முஸ்லிம்கள் விவகாரம் தொடர்பாக ஆங் சாங் சூகி உரிய தீர்வு காண வேண்டும். உங்கள் நடவடிக்கையை உலகமே எதிர்பார்த்துக் காத்திருக்கிறது" என மேலும் மலாலா தெரிவித்தார். (ம)

புதன் பொய்கை



# மலைத்தென்றல் 2017

## கலை கலாசார பேணுகையின் பணிவிடை

குபேதினி

பல்கலைக்கழகங்கள் கல்வி ஊட்டங்களோடு கலை, கலாசார பெறுதிகளின் உள்வாங்குதலையும் மாணவர்களுக்கு கற்றுத் தருகின்றன. அந்தவகையிலே மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற காலத்திலே பல நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. மாணவர்களின் ஆளுமை விருத்தி ஆற்றுகைகளின் ஊடே முதன்மை பெறுகிறது.

**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**

இயற்கை வளத்தால் எழில் மேவும் மலையகம் படைப்பிலக்கியங்களின் கலையகமாக விளங்குகிறது. ஊவா மாகாணத்தின் கல்விச் சாளரமாக பதுளை மாவட்டத்தில் அமைவு கொண்டு கம்பீரமாய் ஒளிவீசி இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் அறிவூட்டம் தருகிறது. இலங்கைப் பல் கலைக்கழக வரலாற்றில் இறுதியாக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் என்றவகையில் ஒரு தசாப்த காலத்தைக் கடந்து இன்று ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு ஈடு இணையாக வளர்ச்சி கண்டுள்ளது. புராதனச் சான்றுகள் நிறைந்த பதுளை மாவட்டத்தின் மத்தியில் அறிவின் சான்றாதாரமாக அமைந்துள்ளது. இங்கு கல்வி பயில்கின்ற மாணவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் தமிழ் மாணவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையிலே அங்கு 'மலைத்தென்றல்' எனும் நிகழ்வு வருடாந்தம் நிகழப்பெறுகிறது. கலை கலாசாரத்தை பேணிப் பாதுகாக்கவும், மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் இந்த நிகழ்வுகள் வாய்ப்பளிக்கின்றன. தமிழர் பண்பாட்டியலோடு ஒன்றித்த கிராமியக் கலை வடிவங்களான கரகம், கும்மி, காவடியாட்டம், கோலாட்டம், கூத்து, பரதம், நாடகம் மற்றும் நாட்டிய நாடகம் என்பன மேடையேற்றப்பட்டு வருகின்றன. 'மலைத்தென்றல்' நிகழ்வின் சிறப்பம்சமாக இவை அமைந்துள்ளன.

**...த்தென்றல்'**

...ாவது ஆண்டாகவும் 'மலைத் தென்... ...ழ்வினை எதிர்வரும் 17 ஆம் திகதி ...வா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் ...த்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இயல், இசை, நாடக மாண்பியமாக அமையவுள்ள 'மலைத்தென்றல் 2017' நிகழ்வுகளில் வழமை போன்று மலைத்தென்றல் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் மலைத்தென்றல் நூல் இவ்வாண்டு ஏனைய பல்கலைக்கழக மாணவர்களையும் உள்வாங்கி அவர்களுடைய ஆக்கங்களையும் உள்ளடக்கம் செய்து வெளிவரவுள்ளது. மேலும் பல்கலைக்கழக சமூகம் நாடு முழுமையுமாக உள்ள தமிழ் மக்களை ஒருங்கமைவு பெறச் செய்யும் விதமாக 'கலைத்திரள்', 'கண்வழியே' போன்ற நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்துள்ளது.

**'கலைத்திரள்'**

நாடு முழுமையுமாகவுள்ள தமிழ்மொழி பேசும் மாணவர்களின் மொழியாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் 'கலைத்திரள்' எனும் புதிய நிகழ்வு அம்சத்தினை அறிமுகம் செய்துள்ளனர். அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

*தொன்மையை மட்டும் பேசி இராது புதுமையைக் கையாண்டு மொழியை வளர்ப்பதற்கும், கலை கலாசார மற்றும் நிகழ்த்துக் கலைகளை ஆவணப்படுத்தவும் இந்த நிகழ்வுகள் ஆரம்பம் தந்துள்ளன.*

**'கண்வழியே'**

'கண்வழியே' என்ற நிகழ்வின் ஊடாக நாடு முழுமையுமாக உள்ள ஒளிப்படக்கலைஞர்கள் தங்களது திறமைகளை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

தங்கள் பிரதேசம் சார்ந்துள்ள அழகியல் மற்றும் பண்பாட்டு மரபியல் சார்ந்த அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கு இந்த நிகழ்வின் மூலம் களம் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. 'கண் வழியே' புகைப்படப் போட்டி நிகழ்வின் நோக்கம் இதுவாகவே அமைந்துள்ளது. திறந்த போட்டியாக இடம்பெறவுள்ள போட்டியில் எவரும் பங்குபற்ற முடிவதுடன் வெற்றியாளர்கள், சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொன்மையை மட்டும் பேசி இராது புதுமையினை கையாண்டு மொழியினை வளர்ப்பதற்கும், கலை கலாசார மற்றும் நிகழ்த்துக் கலைகளை ஆவணப்படுத்தவும் இந்த நிகழ்வுகள் ஆரம்பம் தந்துள்ளன.

ஆக, காலங்கள் மாறினாலும் எமது கலைகளும், கலாசாரமும், பண்பாட்டு விழுமியங்களும் என்றும் மாறாதிருக்க வேண்டும். அதற்கான பணிகளையும், பணிவிடைகளையும் சமூகத்தின் கண்ணான கல்விச்சாலைகள் மேற்கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்களிடையே மொழிப்பற்றையும், வாழ்வியல் செழுமையையும் மேனிலைப்படுத்துவதிலும், இலை மறை காயாக உள்ள திறமைகளை சமூகத்தின் பால் வெளிப்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்துவதும் ஏற்கனவே உள்ள கலைஞர்களை முன்னிலை பெறச் செய்வதும் சிறப்பான கைங்கரியம். அதுவிதமே ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சமூகம் கடந்த நான்கு வருட காலமாக முன்னெடுத்து வருகின்ற 'மலைத்தென்றல்' நிகழ்வு நோக்குதற்குரியது. பாராட்டுதலுக்குரியது.





மலையகமும் கலை வளரும் பக். 20







சிறப்பான நூல்கள் பக். 21



தமிழ்முனைப் பேனாவினால் உருவாக்கிய ஓவியங்கள் பக். 21

# இரசனை இன்பம் பொதிந்த கலை நிகழ்வு

தமிழர்களின்வாழ்வியலில் உணர்வோடும் உதிரத்தோடும் கலந்திருக்கும் கலை வடிவங்கள் ஆத்மார்த்தமானவை. எம் முன்னோர் வழிவழியாகக் கைக்கொண்டு பேணிப் பாதுகாத்து வந்த கலை வடிவங்களையே இன்று நாம் காண்கிறோம். அவற்றை இரசனையின் மிகுதி கொண்டு அனுபவித்து இரசித்து மகிழ்கிறோம். அதேபோன்று நவீனமயப்பட்டுள்ள உலக வெளியில் எமக்கான அடையாளங்களை இதுவரையான காலங்கள் சிறப்பாக வெளிப்படுத்தி வருவதில் எமது கலை வடிவங்களின் பங்கு அளப்பரியதாக காணப்படுகிறது.

அந்தவகையிலே கலைவடிவங்களை அழியவிடாது அவற்றை மெருகூட்டிப் பாதுகாத்து வருகின்ற கைங்கரியத்தை சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டு வருகிறது. வருடாந்தம் அவர்கள் மேற்கொண்டு வருகின்ற கலை நிகழ்வுகளின் தொடர்ச்சியாக இவ்வாண்டுக்குரிய கலைவிழா நிகழ்வுகள் கடந்த மாதம் 13 ஆம் திகதி சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றக் கலையரங்கில் மிகச் சிறப்பாக இடம்பெற்றிருந்தன.

சங்கானை மாவடி இந்து இனைஞர் மன்றத்தின் தலைவர் ச. சிவசஜீவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினராக ஈ. சரவணபவனும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வின் மகுடமாக அமைந்திருந்த 'வாத்திய சங்கமம்' எனும் நிகழ்வு செவி களுக்கு இசைவிருந்தாக அமைந்திருந்தது.

தொடர்ந்து முன்பள்ளி மாணவர்களின் பாலர் அபிநயப்பாடல், உழவர் நடனம், தனிநடனம், சிறுவர் நாடகம் (நல்ல நண்பன்), ஆங்கிலப்பாடல் நிகழ்வு, இயற்கை எழில் கோலங்கள் குழு நடனம், நாட்டிய நாடகம் போன்ற கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதி நிகழ்வாக சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வழங்கிய கும்பகர்ணன் என்னும் நாட்டுக் கூத்து நிகழ்வு இடம்பெற்றது.


















50 திருமணப் பொன் விழா

திரு திருமதி
ஜெயபாலன் றஞ்சிதமலர்



ஐ பத்து ஆண்டுகள்
இல்லறம் காத்து
நல்லறம் பேணி
ஊர் போற்ற வாழ்கின்றீர்

ஆன்மீக தாகமும்
லௌகீக ஞானமும்
ஒருங்கே சேர
வாழ்வாங்கு வாழ்கின்றீர்.

உழைப்பால் உயர்ந்தீர்
பண்பால் மிளிர்ந்தீர்
அன்பால் வென்றீர்
பொன் விழாக் காண்கின்றீர்.

உறவுகள் உய்திட
கரம் நீட்டினீர்
உற்றார் மற்றார்
நலம் நாடி வாழ்கின்றீர்.

வாழ்வீர்! வாழ்வீர்!
மேலும் பல்லாண்டுகள்
பாலகன் யேசுவின்
வரங்கள் நலங்கள் பெற்றே.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

71, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துக்களுடன்
பிள்ளைகள்

# ‘மஹாளய பக்ஷம்’

## ஆனந்த வாழ்வு தரும் பித்ரு காரியம்



மஹாளய சிரார்த்தம் என்பது பித்ருக்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடப்பாடாக உள்ளது. அதனை புரட்டாதி மாதத்தில் செய்ய வேண்டும். மஹாளய பக் ஷத்தில் ஸமஷ்டி சக்தியாக மாயா விசிஷ்ட ஹிரண்டிகர்ப்பனுடைய பிரதிகிதியான கன்னியை சூரிய பகவான் சேருகிறான். இந்த சமயத்தில் எல்லோரும் தங்கள் சக்தியை சூரியனிடம் கொடுக்கின்றனர். சூரிய பகவான் பூரண திருப்தியடைகிறார். இந்த சந்தர்ப்பத்திலே சிரார்த்தம் செய்யும் போது பித்ருக்கள் அனைவரும் பூரண திருப்தியை அடைவர்.

சூரியன் சிம்ம கன்னி ராசிகளில் பிரவேசித்தவுடன் பித்ருக்கள் யமதருமனிடம் விடை பெற்று அவர்களுடைய இல்லத்துக்கு வருகை தருவர். இதனால் மஹாளயத்தில் செய்யப்படும் சிரார்த்தம் முக்கியத்துவம் பெறுகிறது.

### பித்ருக்களை திருப்திப்படுத்தல்

எந்த வம்சத்தில் பிறந்தோமோ அந்த வம்சத்தில் உள்ள பித்ருக்களை திருப்திப்படுத்துவதே சிரார்த்தம். மஹாளயம் என்றால் சுப காரியங்களின் இருப்பிடம் என்றும் அர்த்தம் உண்டு. இந்த மஹாளய காலத்தில் பித்ருக்கள் பதினாறு நாள்கள் பூமிக்கு வந்து தங்கள் சந்ததிகளுக்கு நல்லதை செய்வதாக அர்த்தம் கொள்கின்றனர். ஆதலால் இந்த புரட்டாதி மாதம் செய்யும் சிரார்த்தம் விசேடத்துவம் வாய்ந்தது.

தீபாவளி வரையுள்ள அமாவாசை தினங்களில் பித்ருக்கள் இந்த சிரார்த்தத்தை ஏற்க பூலோகத்துக்கு வருகை தருகின்றனர். இந்த நேரத்திலே சிரார்த்தம் செய்வதால் எமது முன்னோர், சின்ன வயதில் இறந்தவர்கள். பிறந்தவுடன் இறந்த குழந்தைகள் போன்றோர்க்கு நற்கதி கிடைக்கிறது. இதனை மிகுந்த பக்தி சிரத்தையுடன் செய்ய வேண்டும். மஹாளய பக்ஷம் தனை மேற்படி 15 நாள்களில் செய்ய முடியாதவர்கள் அடுத்த பக்ஷத்திலும் செய்யலாம். ஏனெனில் பித்ருக்கள் தீபாவளி வரையுள்ள அமாவாசை தினம் வரை பூலோகத்தில் காத்திருப்பர். சிரார்த்தம் செய்வதற்கான வசதியற்றவர்கள் ஹிரண்யமாக செய்து அன்னம் இடவேண்டும். அன்னம் இடுவது என்பது முதன்மையானது.

### மஹாளய சிரார்த்தம்

‘காலாமிருதம்’ என்ற சோதிட கிரந்தம் மஹாளய சிரார்த்தம் பற்றி விரிவாகக் கூறியுள்ளது.

- பிரதமை - தனலாபம் கிடைக்கும்.
- துதியை - நல்ல சந்ததியைத் தரும்.
- த்ருதியை - நல்ல வரன் கிடைக்கும்.
- சதுர்த்தி - விரோதிகள் கூட நண்பர்கள் ஆவர்.
- பஞ்சமி - ஸம்பத்தை உண்டாக்கும்.
- ஷஷ்டி - நம்மை எல்லோரும் புகழ்வார்கள்.
- ஸப்தமி -பரலோகத்தில் இவன் ஒரு தேவதையைப் போல போற்றப்படுவான்.
- அஷ்டமி - எப்போதும் நல்ல எண்ணமே தோன்றும்.
- நவமீ - நல்ல மனைவி அமைவாள்.
- தஸமீ - விரும்பிய பொருள்கள் கிடைக்கும்.
- ஏகாதசீ - எல்லா கலைகளும் இவர்களுக்குக் கிடைக்கும்.
- துவாதசீ - தங்கம் கிடைக்கும். சந்நியாசம் பெற்று முத்தி அடைந்தவர்களுக்கு இத்தினம் சிறந்தது.
- திரயோதசி - நீண்ட ஆயுள், குலவிருத்தி முதலியன கிட்டும்.
- சதுர்த்தசி - துர்மரணம் அடைந்தவர்களுக்கு செய்வது.
- அமாவாசை தர்ப்பணம் - எல்லா இன்பமும் கிடைக்கும்.
- ஒரு வருடத்தில் 12 அமவாசைகளிலும் தர்ப்பணம் எள்ளும் தண்ணியும் இறைப்பது மிகவும் சிறப்பு.

### சிரார்த்த சமையல்

சிரார்த்த சமையலுக்கு மூன்று இருந்தால் ஆயிரம் காய்கறிகள் நிவேதிப்பதற்கு சமம் என்பர். அதாவது பாகற்காய் நூறு காய்கறி வகைகளைச் சமைப்பதற்கும், பலாக்காய் ஆறுநூறு காய்கறி வகைகளைச் சமைப்பதற்கும், பிரண்டை முன்னூறு காய்கறி வகைகளைச் சமைப்பதற்கும் சமமான இயல்பிருப்பினை கொண்டுள்ளன. பாவற்காய், பலாக்காய், பிரண்டை மூன்றுமே ஆயிரம் கறிகள் சமைப்பதற்குச் சமம் என்பதை கதை மூலம் அறியலாம்.

### வசிட்டர் தந்தைக்கு ஆற்றிய சிரார்த்தம்

வசிட்டர் தந்தைக்கு சிரார்த்தம் செய்யும் போது எவரை அழைக்கலாம் என யோசித்தார். அப்போது அருந்ததி இடையிட்டு விசுவாமித்திரரை அழைக்குமாறு கூறினாள். இதற்கு சம்மதம் தெரிவித்த விசுவாமித்திரர் தனக்கு இலையில் ஆயிரத்து எட்டு காய்கறிகள் பரிமாற வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். நிபந்தனை அறிந்து வசிட்டர் அதிர்ச்சியடைந்தார். கவலை கொண்டார். அருந்ததி வசிட்டரை ஆறுதல் கூறி ஆசுவாசப்படுத்தினாள். தான் ஆயிரத்து எட்டு கறிகளுடன் பரிமாறுவதாக தைரியம் கூறினாள்.

சிரார்த்த தினமும் வந்தது. விசுவாமித்திரர் இலையின் முன்பாக உட்கார்ந்தார். இலையில் வாழைக்காய், சேம்பு, வாழைத்தண்டு, அவரைக்காய், கொத்தவரக்காய், புடலங்காய், அகத்திக்கீரை, கீரைத்தண்டு, பாகற்காய், பிரண்டைத்து வையல், பலாக்காய் முதலியவற்றைப்பரிமாறினாள் அருந்ததி. இதைக்கண்ணுற்ற விசுவாமித்திரர் எங்கே ஆயிரத்து எட்டு என்று கேட்டார். அருந்ததி அமைதியானாள். பின்பு,

“காரவல்லி சதம் ப்ரோக்தம் ஹரவல்லி சதக்ரயம்
பஜஸ் ஷட்சதம் ப்ரோக்தம் ஸ்ரர்த்த காலே விதியதே”

என்ற சுலோகத்தைக் கூறினாள். அதன் பொருள் பாகற்காய் நூறு காய்களுக்கும், பிரண்டை முந்நூறு காய்களுக்கும், பலாக்காய் அறுகறு காய்களுக்கும் சமம். ஆக ஆயிரம் கறிக்காய்கள். அது கூட எட்டும் சேர்ந்து ஆயிரத்து எட்டு என்றாள். முனிவரும் ரசித்து அவர்களை வாழ்த்தி விட்டுச் சென்றார். ஆகவே, நாம்பாகற்காய், பிரண்டை, பலாக்காய்களை சிரார்த்த சமையலுக்கு கண்டிப்பாகச் சேர்க்க வேண்டும்.

பித்ரு காரியங்களை சிரத்தையுடன் செய்ய வேண்டும். சிரத்தை எப்படி உள்ளதோ அப்படியே மனிதன் உருவம் எடுக்கிறான் என்பர். பீஷ்மர் தருமருக்கு உபதேசம் செய்த போது “சமபுத்தியைக் கொண்டு சிரத்தையுடன் எந்தக் காரியம் செய்தாலும் அது வேள்விதான். அதுதான் தர்மம்” என்றார்.

விஷ்ணுவின் உடலில் இருந்து ஏற்பட்டதே எள்ளும், தர்ப்பையும். நாம் விஷ்ணுவைச் சிரார்த்த வேளையில் கூப்பிடுவதால் அரக்கர்கள் விரட்டப்படுவர். எள்ளும் தர்ப்பையும் விஷ்ணுவின் உடலில் இருந்து ஏற்பட்டதால் அரக்கர்கள் அருகே வருகை தரர். மனதை ஒருமைப்படுத்தும் சக்தி எள்ளுக்கு இருப்பதால் எள்ளை சிரார்த்த நேரத்தில் உபயோகிக்கிறோம்.

### பிதிர்களுக்கு உரிய காலம்

பிதிர்களுக்கு உகந்த நேரம் “குதப காலம்” அதாவது பன்னிரண்டு மணிக்குமேலான காலம். முன்னோர்களுக்காக ஒரு நாளையாவது ஒதுக்க இடம் தர வேண்டும். வேலைகளை ஒதுக்கிவிட்டு சிரார்த்தத்தைச் செய்வது நல்லது.

‘மஹா’ என்றால் இருட்டு. ‘பக்ஷம்’ என்றால் பதினைந்து நாள்கள். புரட்டாதி மாதத்தில் வரும் இந்த பதினைந்து நாள்களும் வருடத்தில் வருகின்ற மிகப்பெரிய இருள் சூழ்ந்த காலமாக அமையும்.

சிரத்தையுடன் இந்த பித்ரு காரியத்தை ஒவ்வொருவரும் செய்வோம். சந்ததி தழைக்க, பூரணத்துவமான ஆனந்த வாழ்வைப் பெற்று வாழ முயற்சிப்போம்.

தியாகராஜக்குருக்கள்

## உறங்கு நிலையில் இருக்கும் உடற்கல்வி கற்கைநெறியினை மீளவும் ஆரம்பியுங்கள்

**போற்றுதற்கும் பெருமதிப்பிற்கு முரிய**

- யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர், துறைசார் பீடாதிபதிகள், துறைசார் தலைவர்கள், விரிவுரை யாளர்கள், மூதவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், அனைவருக்கும் சிரம் தாழ்த்திய வணக்கங்கள்.
- எம் இனத்தின் கல்விக்காக தாங்கள் ஆற்றிவரும் பணி போற்றுதற்குரியது. தாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாணவர் சமூகத்தை நெறிப்படுத்தி ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்குவதற்காக தாங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் மகத்தானவை.
- மாணவர்கள் வேகமாக முன்னேறிவரும் இன்றைய ஆரோக்கியமான நிலைக்கு வித்திட்டவர்களும் தாங்களே. எமது தேசிய அடையாளத்திற்கு அடித்தளமான மொழி, கலை, கலாச்சார, விளையாட்டு விழுமியங்களை அழியவி டாது பாதுகாக்கும் உன்னத செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பும் தங்களிடமே உள்ளது.
- இந்நிலையில் கடந்த நான்கு வருடத்திற்கு மேலாக யாழ் பல்கலைக்கழகத்தில் தீர்க்கப்படாமல் இருக்கின்ற விடயம் ஒன்றினை தங்கள் அனைவரினதும் கவனத்திற்கு முன்வைக்க விரும்புகின்றேன். சமூகத்தில் மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வியாளர்களாக இருக்கின்ற நீங்கள் இவ் விடயத்திற்கு உரிய தீர்வினை பெற்றுத்தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தொடர்கின்றேன்.
- இடையறாத கல்வியும் தவறவிடப்படக்கூடாத பரீட்சைச்சித்தியுமே என்று விளங்குகின்ற யாழ்ப்பாண கல்விச் சூழலில் விளையாட்டின் ஊடாகவும் மாணவர்கள் உயர்கல்வியினை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு யாழ். பல்கலைக்கழகத்தில் 1998ம் ஆண்டு உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியினை முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆரம்பித்துவைத்திருந்தார்கள். அனைத்து மாணவர்களிற்கும் ஏதோ ஒரு வகையில் பல்கலைக்கழகக் கல்வி சென்றடைய வேண்டும் என்ற கொள்கையில் முன்னைநாள் துணைவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இக்கற்கைநெறியானது இலங்கையிலேயே விளையாட்டுத்துறை உயர்கல்விக்காக பல்கலைக்கழக மட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட முதலாவது கற்கைநெறியாகக் கருதப்படட்டது.
- முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவரஞ்சனி சிவாஸ்கரன் அவர்களுடைய ஒருங்கிணைப்பிலும் பன்முகப்படுத்தப்பட்ட சிறப்பான திட்டமிடலிலும், மருத்துவ பீட விரிவுரையாளர்கள், முகாமைத்துவபீட விரிவுரையாளர்கள், உடற்கல்வி விளையாட்டுத்துறை விரிவுரையாளர்கள், துறைசார் விளையாட்டு பயிற்றுனர்கள் ஆகியோர் இணைந்தவகையில் இக் கற்கைநெறியினை மிகச்சிறப்பாக முன்நகர்தி வந்தார்கள்.
- 1998ம் ஆண்டு ஆரம்பித்துவைக்கப்பட்ட இக்கற்கைநெறி 2013ம் ஆண்டு வரை பல நூற்றுக்கு மேற்பட்ட விளையாட்டு டிப்ளோமா பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. இவ் டிப்ளோமா பட்டதாரி மாணவர்களில் உயர்கல்வியினை பெற்றுக்கொண்ட பல மாணவர்கள் இலங்கை பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். 95 விகிதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். இந் நியமனத்திற்குப் பின்னரே வடமாகாண விளையாட்டுத்துறையின் வளர்ச்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தேசிய ரீதியாக போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. எதிர்பார்பிற்கு மிஞ்சிய பல புதிய சாதனைகள் பதிவுசெய்யப்பட்டன.
- 1998ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டிருந்த உடற்கல்வி டிப்ளோமா கற்கெநெறி துர்அதிஷ்டம் காரணமாக கடந்த நான்கு வருடத்திற்கு மேலாக எவ்வித கற்பித்தல் செயற்பாடுகளும் இல்லாமல் உறங்கு நிலையில் இருக்கின்றது. இக் கற்கைநெறியின் தொடர்ச்சியாக 2008 ஆம் ஆண்டு ஆரம்பித்துவைக்கப்பட்ட உயர் டிப்ளோமா கற்கைநெறியும் ஒரு வருட செயற்பாட்டின் பின்னர் இடை நிறுத்தப்பட்டிருக்கின்றது.
- இக் கற்கைநெறிக்காக உடற்கல்வித்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற மூன்று நிரந்தர விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலும் அவர்களுடைய கல்வி அறிவு எம் மாணவர் சமுதாயத்திற்கு கிடைக்க முடியாமல் இக் கற்கைநெறி தடைப்பட்டிருக்கின்றது.

கடந்த நான்கு வருடத்திற்கு மேலாக எவ்வித கல்விச்செயற்பாடுகளும் இல்லாமல் உடற்கல்வி கற்கைநெறிக்காக நியமனம் பெற்றிருக்கின்ற இவர்களுடைய செயல்திறனும் பாதிக்கப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் மாணவர்கள் செலுத்திய கல்விக் கட்டணங்களின் உதவியுடன் ஆரம்பித்துவைக்கப்பட்ட இக் கற்கைநெறிக்கு தற்போது உறங்கு நிலையில் இருக்கும் போது பெருமளவு அரசநிதி செலவுசெய்யப்படுகின்றது.

- கடந்த நான்கு வருடங்களாக பாடத்திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கு இக் கற்கெநெறியினை மாற்றம் செய்ய விரிவுரையாளர்கள் விரும்புகிறார்கள் இல்லை என்ற தேவையற்ற காரணங்களைத் தெரிவித்து கால இழுத்தடிப்புக்களே மேற்கொள்ளப்பட்டன.
- உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் இக் கற்கைநெறியின் பழைய மாணவர்களாகிய வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் சங்கத்தினர் எடுத்த நல்லெண்ண முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

**பெருமதிப்பிற்குரிய யாழ். பல்கலைக்கழக சமூகத்தினரே!**

- மிகக்குறுகிய காலத்தில் கல்வியின் எல்லைவரை பட்டம் பெற்ற பல இளம் வயதினர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகளாக, துறைசார் தலைவர்களாக, சிரேஷ்ட விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள்.
- கல்விக்காலங்களில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு புகழ்சேர்த்த, விளையாட்டுத்துறையில் அனுபவம் வாய்ந்த பிரபல்யமான பல விளையாட்டு வீரர்கள் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறையில் பொறுப்பு அதிகாரிகளாக, பயிற்றுவிப்பாளர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள்.

இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து செயற்குழு ஒன்றினை நியமித்து மிகவிரைவாக இப்பிரச்சனைக்கு உரிய தீர்வினை பெற்று உறங்கு நிலையில் இருக்கும் இக் கற்கெநெறியினை மீளவும் ஆரம்பித்து விளையாட்டுத்தறையில் தம் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களின் உயர்கல்விக்கு உதவுமாறு தங்கள் அனைவரிடத்திலும் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

- தற்போதைய சுழ்நிலையில் இலங்கையின் ஜனாதிபதியையோ அல்லது கல்வி அமைச்சரையோ அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரையோ சந்திப்பதில் பெரும் சிரமங்களோ அல்லது இடர்பாடுகள் எவையும் இருப்பதாகவோ தெரியவில்லை.
- பொறியியல் பீடங்களிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடரும்போதும், விவசாய பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் கல்வியைத் தொடரும்போதும் உடற்கல்வி கற்கைநெறி மட்டும் கிளிநொச்சி வளாகத்தில் இயங்குவதில் துறைசார் விரிவுரையாளர்கள் விரும்புகிறார்கள் இல்லை எனக் கருதுவது ஏற்புடையது அல்ல.
- புதிய பீடங்கள் உருவாக்கப்படுவதும் கட்டுமாணப்பணிகள் ஆரம்பிக்கப்படுவதும் வரவேற்கப்படக்கூடிய விடயமாக இருகின்ற அதேவேளை பழைய வளங்களையும் அழியவிடாமல் பாதுகாப்பதற்கு ஏற்ற முயற்சிகளையும் தாங்கள் முன்னெடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் மாணவர் சமுதாயம் இருக்கின்றது.
- எவர் மனதையும் புண்படுத்துவதோ குற்றம் காண்பதோ எனது நோக்கமல்ல. அவ்வாறு எவர் மனதையாவது இவ் எழுத்துக்கள் புண்படுத்தியிருந்தால் அதற்காக மனம் வருந்துகின்றேன்.
- கல்வி அறிவைக்கொடுத்த தங்களையும் மாணவர் சமுதாயம் என்றும் போற்றி வணங்கும். தங்கள் புரிந்துணர்விற்கு நன்றி.

நாகராஜா விஜயகுமார் - சுவிற்சர்லாந்து
உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி முதலாம் அணி மாணவர் மன்ற தலைவர்
மாணவர் பதிவு இலக்கம் - 98 PE 39

# குருப்பெயர்ச்சி பலன்கள்





## மகரம்

உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்தில் 2.9.2017 முதல் 2.10.2018 வரை குரு பகவான் அமர்வதால் வேலைகளைத் திட்டமிட்டபடி முடிக்க முடியாது. உழைப்புக்கான அங்கீகாரமோ, பாராட்டோ கிடைக்காது. பல வேலை களையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். தன்னம்பிக்கை குறையும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். சிலர் பணியின் காரணமாகக் குடும்பத்தைப் பிரிந்து செல்ல நேரிடும்.

**குரு பகவானின் பார்வை:** குரு பகவான் தனது 5ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்தைப் பார்ப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். சிலருக்குப் புது வேலை கிடைக்கும்.

குரு பகவான் தன் 7ஆம் பார்வையால் ராசிக்கு 4ஆம் வீட்டைப் பார்ப்பதால் தாயாரின் ஆதரவு கிடைக்கும். வீடு, வாகனத்தைச் சீர் செய்வீர்கள். வீடு, மனை வாங்கக் கடனுதவி கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். சிலருக்கு இடமாற்றம் உண்டாகும். குரு பகவான் தன் 9ஆம் பார்வையால் உங்களின் 6ஆம் வீட்டைப் பார்ப்பதால் செயலில் வேகம் கூடும். தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். செலவுகள் குறையும்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:** உங்கள் ராசிக்கு 4 மற்றும் 11 ஆகிய இடங்களுக்கு உரிய செவ்வாயின் சித்திரை நட்சத்திரம் 3, 4ஆம் பாதம் துலாம் ராசியில் 2.9.2017 முதல் 5.10.2017 வரை குரு பகவான் செல்வதால் அதிகாரிகளின் அறிமுகம் கிடைக்கும். சகோதரர்கள் உதவியாக இருப்பார்கள். வழக்கில் தீர்ப்பு சாதகமாகும். 6.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். திருமணம் கூடி வரும். உங்கள் ராசிக்கு 3, 12ஆம் இடங்களுக்கு உரிய குரு பகவான் தன் சுய நட்சத்திரமான விசாகம் நட்சத்திரம் 1, 2, 3ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.2017 முதல் 13.2.2018 வரை மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை பயணிப்பதால், திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். எனினும், மனதிலே ஒருவித அச்ச உணர்வு வந்து நீங்கும். பிள்ளை களிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். வீடு கட்டுவதற்கு வங்கிக் கடன் தாமதமாக கிடைக்கும். முன்கோபம் கூடாது. மற்றவர்களுக்காக சாட்சிக் கையொப்பமிட வேண்டாம். அரசால் நெருக்கடிகள் வந்து நீங்கும். இளைய சகோதர வகை யில் உதவிகள் கிடைக்கும்.

**குரு பகவானின் அதிசார வக்கிர சஞ்சாரம்:** 14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்கிரத்தில் உங்கள் ராசிக்கு 11ஆம் வீட்டில் குரு பகவான் அமர்வதால் புகழ், கௌரவம் கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். கணவன் மனைவிக்கு இடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:** 7.3.18 முதல் 3.7.2018 வரை தன் சுய சாரமான விசாகம் நட்சத்திரம் துலாம் ராசியில் குரு பகவான் வக்கிர கதியில் செல்வதால் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு வேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். உத்தியோக ஸ்தானமான 10ஆம் வீட்டில் குரு அமர்வதால் உங்கள் உழைப்புக்கு வேறு சிலர் உரிமை கொண்டாடுவர். உத்தியோகம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் இழுபறி நிலையே நீடிக்கும். மாணவர்களே! படிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கலைத்துறையினர்களே! இழந்த புகழை மீண்டும் பெற யதார்த்த படைப்புகளைக் கொடுக்கவும்.

இந்த குரு மாற்றம் உங்களின் முன்னேற்றப் பாதையில் சிறுசிறு தடைகளை ஏற்படுத்தினாலும், உங்களைக் கொஞ்சம் செம்மைப் படுத்துவதாக அமையும்.

# நுஃமானின் 'மழை நாட்கள் வரும்'

## வாசிப்பின் வாசனை

கவிதை ஓர் அற்புதமான இலக்கிய வடிவம். கவிதையை விரும்பாதவர்கள் இருக்கவே முடியாதெனச் சொல்லுமளவுக்கு அனைவரையும் அது ஆகர்சிக்கிறது. பாமரர் தொடக்கம் பண்டிதர் வரைக்கும் அத்தனை பேரையும் கட்டிப் போடக் கூடிய ஈர்ப்பும் உயிர்ப்பும் கவிதைக்கு உண்டு. அந்த வகையிலே, இந்த வாரத்தின் 'வாசிப்பின் வாசனையாக' உங்கள் முன் கமழ்கின்றது நுஃமானின் 'மழை நாட்கள் வரும்' என்ற கவிதைத் தொகுதி.

பேராசிரியர் நுஃமான் தமிழுலகப் பரப்பிலே தவிர்க்கப்படமுடியாத பெரும் ஆளுமையாளர். 1960ஆம் ஆண்டிலிருந்து கவிதை எழுதிவருபவர். 1967 1981ஆம் ஆண்டு வரையான 14 ஆண்டுகளில் அவரெழுதிய சமூக, அரசியல் சார்பான 17 கவிதைகளை உள்ளடக்கிய கவிதைத் தொகுதியே 'மழைநாட்கள் வரும்' என்ற நூலாகும். வாசிப்பினூடு, அந்த நாட்களில் நனைவோம் நாங்களும்...

அது ஒரு கோடைக்காலம். எனினும், விவசாயிகள் தம் விதியிதுவெனநொந்து, சித்தம் கலங்கிச் சோர்ந்திருக்கவில்லை. இதனை அவர்,

*அது ஒரு கொடு வெயில் நாள்*
*ஆறுகள் வற்றினவே*
*கொதிதணல் எனும் வெயிலின்*
*கொடுமைகள் முற்றினவே*
*விதி இது என அவர்கள்*
*வீழ்ந்து கிடந்திலரே!*
*எதுவரை எனினும் அவர்*
*எழுந்து நடந்தனரே!*

என வெயிலின் கொடுமையை உணர்த்துவது சிறப்பானது. விவசாயிகள் சோர்வடையவில்லை. கடும் உழைப்பினால் பயிர்களை விளைவிக்கும் உன்னதமானசெயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றனா. இதனை,

*வியர்வை நீரை அப்பயிரின்*
*வேரின் மீது பெய்ந்தார்கள்*
*அயர்வை நீக்கி உழைத்தார்கள்*
*அல்லும் பகலும் உழைத்தார்கள்*
*உப்பு நீரே ஆனாலும்*
*உழைப்பு நீரே ஆகையினால்*
*வெப்பமான பூமியிலே*
*மெல்லப் பயிர்கள் தோன்றினவே*

என உழவர்களின் உன்னதமானகடினமான உழைப்பைக் கவிநயம்கொழிக்கும் கவிதையாக்குகின்றார்.

கோடை நீங்கி மழை பெய்கின்றது. மண் குளிர்கின்றது. ஆனால், மீண்டும் வெயில் வெம்மையினைப் பொழியுமல்லவா? இந்த இயற்கையானகாலச்சுழற்சி விவசாயிகளின் வாழ்வியலில் சாதாரணமானது. இதனை எதிர்காள்ளக்கூடிய அவர்களது மனத்திடத்தை,

*நாளை மீண்டும் வெயில் வீழும்*
*நனைந்த பூமி தழலாகும்*
*நாளைமறுநாள் மழை பெய்யும்*
*நாளுக்காக உழைப்பார்கள்!* என்று பாடுகின்றார்.

இதன் மூலம் அவர்களது வாழ்வியலை, கடின உழைப்பை அவர் கவிதையாக்கியிருக்கும் பாங்கு சிறப்பானது. இவ்வுலகில் போலியான இறைபற்றாளர்கள் அனேகமாவர்கள் இருக்கிறனர். சமயம் காட்டும் நன்னெறியை மனதாரக் கடைப்பிடிக்க முற்படமாட்டார்கள். இவர்கள் மேல் சினம் கொள்ளும் கவிஞர். உண்மையான இஸ்லாமிய மார்க்கத்தைக் கடைப்பிடிக்காதவர்களின் பள்ளி வருகையினைப் பாடு பொருளாக்குகின்றார். அக்கவி வருமாறு.



*பயம் தரும் உனது நரகப்படுக்கையின்*
*நெருப்பு மெத்தை நினைத்தற்கஞ்சியே*
*உனது பள்ளியின் உள்ளே வந்தனர்*
*மக்களுட் புனித மனிதர் தாம் எனச்*
*செப்புவதற்காகவே...*

## நாளை

**07.09.2017**

வியாழக்கிழமை

**ஆவணி - 22**

திதி: பிரதமை பி.ப.12.35 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.ப 02.27 வரை
சுபநேரம்: 01.34—03.04 வரை
ராகுகாலம்: 07.34—09.04 வரை

## வரலாற்றில் இன்றைய தினம் 06.09.2017





- 1997 - வேல்ஸில் இளவரசி டயனாவின் இறுதிச் சடங்கு இடம்பெற்றது. வீதிகளில் ஒரு மில்லியன் மக்கள் வரை அணிதிரண்டிருக்க, தொலைக்காட்சியில் 2.5 பில்லியன் மக்கள் பார்வையிட்டனர்.

1944 - இரண்டாம் உலகப்போரில் பெல்ஜியத்தின் ஜெப்ரஸ் நகர் கூட்டுப் படைகளால் விடுவிக்கப்பட்டது.

1944 - இரண்டாம் உலகப்போரில் எஸ்தோனியாவின் ராா்டு நகர் சோவியத் படைகளால் கைப்பற்றப்பட்டது.

1955 - இஸ்தான்புல்லில் யூத மற்றும் ஆர்மீனிய சிறுபான்மையினர்மீது அரசின் ஆதரவுடன் இனப் படுகொலை நடத்தப்பட்டது.

1962 - லண்டன் தேம்ஸ் நதியோரத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டடைச் சேர்ந்த கப்பலின் சிதிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1966 - தென் ஆபிரிக்காவின் கேப்ரவுணில் இனவெறியாளரான தலைமைச் சேயலாளர் ஹென்றிக் வேர்வோட், நாடாளுமன்றக் கூட்டத்தின்போது குத்திக் கொல்லப்பட்டார்.

1991 - போல்டிக் நாடுகளான எஸ்தோனியா, லத்வியா மற்றும் லிந்துவேனியாவின் சுதந்திரத்தை சோவியத்யூனியன் அங்கீகரித்தது.

2009 - றோறோ சுப்பர் பெரி 9 படகு பிலிப்பைன்ஸ் சம்போங்கா குடாவில் கவிழ்ந்ததில் 97 பேர் உயிரிழந்தனர்.

2016 - தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாவுக்கு இராணுவ அதிகாரி பெரும் பாராட்டு.

2016 - இராணுவம் நடத்தும் முன்பள்ளிகளுக்கு வடக்கு மாகாண சபையின் நிதி முறையற்ற வகையில் செலவு என எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குற்றச்சாட்டு.

# பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ்-12



எஸ்.மல்லிகா

ஒருவருக்கு ஒரு பொருள் சேரவேண்டும் என்று விதி இருந்தால், அதனை எவராலும் தடுக்க முடியாது. அது இல்லையென்றால், எவராலும் அதனைக் கொடுக்க முடியாது. அதுபோலவே இன்பமோ துன்பமோ எம்மைத் தொடர வேண்டும் என்ற விதி இருந்தால், எவராலும் அதனைத் தடுக்க முடியாது. இதனைக் கம்பர் சிறப்புறக் கூறுவார் தனது காவியத்தில். காவியத்தின் ஒவ்வொரு கதாமாந்தர் வாழ்விலிருந்தும் விதித் தத்துவத்தைச் சிறப்புற அறிந்துகொள்ள முடியும்.

**கம்பராமாயணத்தில் ஊழ்வினைக் கோட்பாடு**

வள்ளுவரைப் போலவே கம்பரும் விதி, ஊழ்வினைக் கோட்பாடு பற்றி இராமாயணத்தில் குறிப்பிட்டுள்ளார். காப்பியத்தின் திருப்புமுனைக் காட்சியாகவருவது, கைகேயி வரம். அவளது வரத்தின் பயனால் இராமன் காட்டுக்குச் செல்கிறான். இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும், பரதன் அதுவரை நாடாள வேண்டும் என்பதுதான் அவளது இரு வரங்களும். இந்த இரு வரங்களையும் அவளைப் பெறத் தூண்டியது கூனி (மந்தரை) எனும் அவளது தோழியும் தேவர்கள் செய்த மாயமும்தான். நல்லவளான கைகேயி மனம், தீதானது. இதனைக் கம்பர் பின்வருமாறு கூறுகிறார்.

***“தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி***
***தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின்;***
***இமையோர் மாயையும், அவர் பெற்றுள வரம் உண்மையாலும்,***
***ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும்''***

கைகேயி மனம் மாறி, தசரதனிடம் வரம் கேட்டு இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும். இராமன் காட்டில் அரக்கர்களை அழித்து இராவண சம்ஹாரமும் நிறைவேற வேண்டுமென்று தேவர்கள் மாயம் செய்திருந்தனர். அதன் பயனாகவும் ரிஷிகளும் அந்தணர்களும் அரக்கர்களின் அழிவுக்காகச் செய்த அரும்பெரும் தவ வேள்விகளின் பலனாலும் கூனி (மந்தரை) கைகேயியின் மனதை மாற்றிவிட்டாள் அதனை அறிந்த தேவர்கள் மகிழ்ந்தார்கள். அரக்கர்கள் செய்த பாவமும் அறவோர் செய்த தவமும்கூட நல்ல சிந்தனையுள்ள கைகேயியின் மனம் மாறுதல் கொள்ளக் காரணமாக இருந்தது. ஏனெனில், இராம அவதாரத்தின் நோக்கமே இராவண சம்ஹாரம்தான்.

ஆதலால், அவள் வரத்தில் வார்த்தையில் விதி வந்து குந்தியது. 'விதியின் மறுவடிவம்' ஆனாள் கைகேயி. சிற்றன்னையின் கட்டளையை மகிழ்வுடன் ஏற்ற இராமன், காட்டுக்குப் போகமுன்னர் தன் அன்னை கோசலையிடம் விடைபெறச் செல்கிறான். இதனைக் கம்பர் பின்வருமாறு கூறுகிறார்.

***“குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்ற வெண்குடையும் இன்றி***
***இழைக்கின்ற விதி முன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக***
***மழைக்குன்றம் அனையான் மௌளி கவித்தனன் வரும் என்றென்று***
***தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன் ஒரு தமியன் சென்றான்''***

மன்னருக்கே உரித்தான சாமரம் இல்லாமல், வெண்ணிறக் குடையும் இல்லாமல் 'விதி' முன்னே செல்ல, தருமம் போன்ற இராமன் பின்னே சென்றானாம். அவனுடைய தலைவிதி கைகேயி உருவத்தில் வந்தது. தரும வடிவில் நிற்கும் இராமன், 'விதியே என்று' பின்னால் நடந்து செல்கிறான். தன் தாயிடம் விடை பெற்றுக்கொள்ள என்கிறான் கம்பன். இதிலிருந்து, விதியின் பயன் நன்கு புலப்படுகி றது.

இதேநேரம், இராமன் காட்டுக்குச் செல்வதற்கு கைகேயி தான் காரணம் என்று அவளை நொந்துகொள்கிறான் இலக்குமணன். ஆனால் இராமனோ, தாம் காடேகுவதற்குக் கைகேயி அல்ல விதிதான் காரணம் என்கிறான். இதனைக் கம்பர் பின்வருமாறு குறிப்பிடு கின்றார். ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் தெப்பம் போல எமது வாழ்க்கை விதி வழியே நடக்கிறது என்கிற தத்துவத்தை உணர்ந்துகொண்டால், எது பற்றியும் மகிழ்ச்சி ஏன், எரிச்சல் ஏன்?, பெரியோரை வியப்பானேன்? , சிறி யோரை இகழ்வானேன்?, இதனை நன்கு உணர்ந்த இராமபிரான், கானகம் செல்லும் தருணத்தில் கைகேயியைக் கடிந்து பேசிய இலக்குமணனிடம் அமைதியாக விதி என்னும் தத்துவத்தை அறிவுறுத்துகிறான்.

***“மெய்த்திருப் பதம் மேவென்ற போதினும்***
***இத்திருத் துறந்து ஏகென்ற போதினும்***
***சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை''*** போன்ற முகத்தோடு மலர்ச்சியாக இன்பம் துன்பம் எனும் இருநிலைகளையும் ஏற்றவன் இராமன். விதியின் வலிமை பற்றி அவன் இலக்குமணனுக்கு மிகத் தெளிவாகப் போதிக்கிறான்.

“இலக்குமணா...! நதியில் நீர் இல்லை என்றால், அது நதியின் பிழையா?, மலையில் மழை பெய்யவில்லை என்றல்லவா அறியவேண்டும்? அதுபோலவே எமக்கு நேர்ந்தவை அனைத்தும் கைகேயியால் வந்தவை அல்ல. பரதனாலும் வந்தவை அல்ல. விதியால் வந்ததென்பதை உணர்ந்துகொள்க" என்று அமைதியாகக் கூறுகிறான். அந்தப் பாடல் வருமாறு

***“நதியின் பிழையன்று நறும்புனல் இன்மைஅற்றே***
***பதியின் பிழையன்று பயந்து நமைப்புரந்தாள்***
***மதியின் பிழையன்று மகள் பிழையன்று***
***விதியின் பிழை இதற்கு என்னை நீவெகுண்ட தென்றான்!''***

இங்கே கம்பர் இராமபிரான் மூலம் சொன்ன விதித் தத்துவத்தை அதற்கும் முன்பாகவே சிலம்பில் இளங்கோவடிகள் சிறப்புறச் சொல்லிவிட்டார். அவர் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரத்தை எழுதியதற்கான மூன்று நோக்கங்களில் ஒன்று விதியின் வலிமையை உணர்த்துவதுதான். இதனையே வள்ளுவரும், விதியை விட வலிதானது எதுவும் இல்லை என்று அழுத்திக் கூறுகிறார்.

மனித வாழ்க்கையில் அவரவர்கள் விதைப்பதனைத்தான், அறுவடை செய்கின்றனர். இது இராமனைப் பெற்ற தந்தையான தசரதனுக்கும் பொருந்தும். நீண்டகாலமாகப் பிள்ளைப்பேறு இன்றித் துன்புற்றிருந்த தசரதன், ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அப்போது, அந்தக முனிவரின் மகன் ஆற்றில் நீர் எடுப்பதற்கு வந்து நீர் அள்ளினான். மறைந்திருந்த தசரதன், யானைதான் நீர் குடிக்கிறது என்று நினைத்து அம்பை எய்தான். தசரதனின் அம்பு பட்டுத் துடிதுடித்து இறந்தான்அந்தக முனிவரின் புதல்வன் இதனையறிந்த முனிவர் தசரதனை நோக்கி,

***“எவா மகவைப் பிரிந்து இன்று***
***எம்போல் இடர் உற்றனை நீ***
***போவாய் அகல்வான்''*** என்று சாபமிட்டார்.

தசரதனின் அந்த வினைதான் அவனது ஆசைநாயகி கைகேயியின் வடிவில் வந்தது. இராமனை அவனிடமிருந்து பிரித்தது. புத்திர சோகத்தை அளித்து அவன் உயிரைக் குடித்தது. விதியின் பிடியிலிருந்து எவரால் மீளமுடியும்?

*(தொடரும்....)*

> இலக்குமணா! நதியில் நீர் இல்லை என்றால், அது நதியின் பிழையா? மலையில் மழை பெய்யவில்லை என்றல்லவா அறியவேண்டும்? அதுபோல நமக்கு நேர்ந்தவை அனைத்தும் கைகேயியால் வந்தவை அல்ல. பரதனாலும் வந்தவை அல்ல. விதியால் வந்ததென்பதை அறிந்துகொள்க.


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு
## விலைக்கேள்விக்கான கோரல் 2017/18

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுத்-தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருள்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.**

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| LAB /2017/01 | Hormonal Analyser | 1 | 40,000.00 |
| HSDP /2017/02 | Supply and Installation of 250 Aty S Control main Distribution panel – Base Hospital , Mallavi | 1 | 10,000.00 |
| HSDP /2017/03 | 10KW Grid Solar Roof top Photovoltaic (SPV) Power plant - Base Hospital , Mallavi | 1 | 10,000.00 |

* விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருள்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

* ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

* நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் **“Application for Bid documents"** என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **08.09.2017 தொடக்கம் 25.09.2017 வரையான** காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் **15.00** மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

* விலைக்கேள்விகள் **26.09.2017**ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் விலைக்கேள்விகள் **26.09.2017**ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

* தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத் தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

*கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்குப் பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்தியகலாநிதி. த. பூங்கோதை**
**தலைவர்,**
**பிராந்தியபெறுகைகள் குழு,**
**பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர்பணிமனை,**
**முல்லைத்தீவு**

# மலையகமும் கலை வளமும்



> வெளிநாட்டவர்களின் ஆதிக்கம் இலங்கையில் நிலவியபோது, தேயிலை, இறப்பர் வாசனைத் திரவியங்களின் உற்பத்திக்காகவும், விளைவுக்காகவும் ஏற்றுமதிக்காகவும் இந்தியாவிலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் கப்பல் வழியாக மலையகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையின் மதிப்பு உலக அரங்கிலே பேசுபொருளாகவும், பேணுபொருளாகவும், வாசபொருளாகவும். வாண்மைப் பொருளாகவும் இலங்குவதற்கு மூலகாரணமாக அமைவது மலையகமே என்று கூறினால் அந்தக் கூற்றை யாருமே மறுப்பதற்கில்லை. காரணம் இலங்கையின் பொருளாதாரம் மலையகத்திலே தான் தங்கியுள்ளது. மலையக மக்களின் கடின உழைப்பும். சிந்திய வியர்வையுமே இலங்கைப் பொருளாதாரத்தை வளம்படுத்தியது. அதனோடு இணைந்து பாரம்பரிய கலைவளம் மலையக நாதமாக அன்றும் இன்றும் என்றும் ஒலிக்கிறது. மலையகத்தின் சொத்துக்களே முரளியும் எம்.ஜி.ஆரும் என்றால் கலைவளம் எப்படி இருக்கவேண்டும்?

## இந்திய வரம்

வெளிநாட்டவர்களின் ஆதிக்கம் இலங்கையில் நிலவியபோது, தேயிலை இறப்பர் வாசனைத் திரவியங்களின் உற்பத்திக்காகவும். அவற்றின் விளைவுக்காகவும் ஏற்றுமதிக்காகவும் இந்தியாவிலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் கப்பல் வழியாக மலையகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கூடவே அவர்களுடன் இந்திய மண்ணின் கலைவளமும் குருதியுடன் சேர்ந்து இலங்கை வந்து சேர்ந்ததெனலாம். பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த நாட்டுப்புறக் கலைகளும், தெய்வ வழிபாடுகளும், உடை நடை பாவனைகளும் மலையக மண்ணில் விளைந்தன. இந்தியாவின் வரம் கலைவளமாக எதிர்காலத்தில் மலையகத்தில் மிளிரும் என்பதில் சற்றேனும் ஐயமிருக்காது. நாட்டுப்புறப் பாடல்களும், நாட்டுப்புறக் காமன் கூத்தும் காவிய காப்பிய நாடகங்களும், சித்திர சிற்ப, ஓவிய, மனோதர்மக் கலைகளம், விளையாட்டுக்கலைகளும் சோடை போகாதபடி உயிரோடு இருக்கின்றன. குறிப்பாக சாஸ்திரியக் கலைகளைப் பொறுத்தவரையில், மலையகத்தில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், சித்திர சிற்ப ஓவியம், இலக்கண இலக்கியம், மரபுக் கவிதைகள் ஆகிய ஐந்து துறைகளும் அதீத அக்கறையுடன் வளர்க்கப்படவேண்டும். இலங்கைக் கல்விப் பாடத்திட்டத்தில் சங்கிதம், நடனம், சித்திரம் ஆகிய பாடங்கள் உட்புகுத்தப்பட்ட போதும், மலையகப் பாடசாலைகளில் எதிர்பார்த்த இலக்கை எட்டமுடியவில்லை என்பது நிஜந்தான். அதற்கு யாது செய்யலாம் என்பது பற்றிச் சிந்திப்பது காலந்தாமதமாயினும் நன்மை பயக்கும்.

இந்தியா இலங்கை அரசின் உதவியோடு, மலையகம் வாழ் தமிழர்களுக்கென ஒரு பல்கலைக் கழகம் ஒன்றை நாவலப்பிட்டியிலோ, பதுளையிலோ அல்லது ஹற்றனிலோ ஸ்தாபிக்க ஆவண செய்தல் அவசியமேயாகும். இது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக மட்டும் உருவாக்கப்படவேண்டும். அதற்கு அனுமதிப்பதற்காக க.பொ.த சாதாரண. க.பொ.த உயர்தரப் பாடங்களிலும், சம்பந்தப்பட்ட பாடங்களிலும் சித்திபெற வைப்பதற்கு ஏற்ற ஆசிரிய வளத்தைப் பெற்றுக்கொள்ள இலங்கை மாகாணங்களில் தட்டுப்பாடு ஏற்படுமாயின், இந்தியாவிலிருந்து பொருத்தமான ஆசிரியர்களை வரவழைத்தாவது இந்தக்குறைபாட்டை வெல்ல முடியும்.

## முன்னர்போல

1960 களில் இந்தியாவிலிருந்து சங்கீதப் பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். மருதனார்மடத்தில் சேர்.பொன் இராமநாத வள்ளலின் கல்லூரியில் பேறாக்கப்பட்டனர். அக்கடமியின் பேறாக ஆயிரம் ஆயிரம் சீடர்கள் உருவாகியிருப்பது இங்கு உன்னிப்பாக நோக்கத்தக்கது. யாழ்ப்பாணம் பேறாகியது.

இந்த சங்கீத அக்கடமியே பின்னாளில் (1974) யாழ்பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீடமாக மிளிர வழிசமைத்ததெனலாம். பேராசான்களான, சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, மகாராஜபுரம் சந்தானம், கல்யாண கிருஷ்ண பாகவதர், ஐயாக் கண்ணுதேசிகர், ஏ.எஸ். இராமநாதன் ஆகியோர் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து பல பருடங்கள் தங்கியிருந்து கர்நாடக சங்கீதத்துக்கு உயிரும் ஊக்கமும், ஆக்கமும், வாழ்வும் அளித்ததுபோல மலையகத்தில் ஏன் இதுவரை செய்யப்படவில்லை என்ற வினாவுக்கு அனைத்து அரசியல்வாதிகளும் பதில் சொல்லியேயாக வேண்டும்.

இப்போது கூடக் காலதாமதமாகவில்ல. தூரநோக்குடைய அரசியல் தலைவர்கள் இப்போதும் இருப்பதனால் இந்த விண்ணப்பம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். நான்கு வருட பயிற்சியோடு நியமனம் வழங்க முடியும் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

## 1970களில்

1972 முதல் சங்கீத நடன ஆசிரியர்கள் இலங்கையின் பலபாகங்களிலும் நியமிக்கப்பட்ட போதும் மலையகத்தில் போதுமானதாக இருக்கவில்லை. 1976 ஜனவரியில் கல்வியமைச்சின் இடமாற்ற அறிவித்தலின் படி நான் கண்டி மாவட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டேன். கண்டி தெல்தோட்டை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஆறுவருட ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றச் சம்மதித்தேன். கடமையாற்றினேன் கலவரம் கட்டுப்படுத்தியது. தலைவிதி மாறியது.

## கலையழகு

கண்டியிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்திலே, ஹேவாஹெட்ட தேர்தல் தொகுதியிலே, தெல்தோட்டை என்ற அழகிய சிறு நகரம் உண்டு. அதைச் சுற்றிலும் அழகிய மலைகள், தேயிலைக் காடுகள், அருவிகள், வீதிகள், பாடசாலைகள், பாற்பண்ணைகள், தோட்டலயன்கள், புற்றரைகள், வர்த்தக நிலையங்கள், மூவின மக்கள் என மலையழகை கலையழகாக்கிற்று. மேலும்சில்லெனக் குளிர்ந்து மெல்லென அசையும் முகில்கள் இசைபாடி மலைமுகடுகளில் தழுவும் அற்புதக் காட்சியை இந்தப் பிறப்பில் கண்டு அனுபவித்தபேறு சங்கீத சாம்ராஜ்ஜியத்துக்குக் கிடைத்த பிரசாதம். சலசல என அருவிகள் மலைச் சாரலில் ஓடிவரும் அழகும், பாடிவரும் மொழியும் மனோதர்ம சங்கீத இராக ஆலாபனைகளைத் திரட்டித்தருவது போன்ற பிரேமை வாய்களைப் பாடுமாறு அழைக்கும். வானுயர்ந்த மரங்களும், பச்சைப் பசேல் எனப் பாய் விரிக்கும் தேயிலைத் தோட்டங்களும், வண்ண வண்ண குருவிகளும், வட்டமிடும் வண்டுகளும் நிதமும் சோம்பலில்லா உழைப்பாளிகளும், சேதாரம் இல்லாத உணவுகளும், ஆதாரமான கூட்டுக் குடும்ப வாழ்க்கையும் இயல் இசை நாடக நடனத்துக்கு வரும்படி அழைக்கும் ஆர்ப்பரிக்கும்.

## பிள்ளைகள்


தாயும் தந்தையும் விடியும் வேளையிலே கொழுந்தெடுக்கவும், தோட்ட வேலைகளுக்கும் செல்வதனால் பிள்ளைகளும் அதிகாலையிலே எழும்பிவிடுவதன் காரணமாகக் கலைகள் வீடுதேடி வந்து காத்திருக்கும். எனவே மலையகப் பிள்ளைகளுக்குக் கலைகள் இறைவனால் தரப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும். 1976 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் மலையகப்பிள்ளைகளைச் சந்தித்தபோது அனைவருமே சரஸ்வதி கடாட்சமாகவே தோற்றமளித்தார்கள். ஆனால் அந்தப் பிள்ளைகளுக்கு உரிய தீனி போடுவார் யாருமில்ல. வளமில்லையாதலால் நான் வரமாகினேன். எல்லோரும் இந்துப்பிள்ளைகளாக இருந்த காரணத்தினால் ஒரு வெள்ளிக்கிழமை சிவபுராணத்தைக் காலைப்பிரார்த்தனையின் போது இராகத்துடன் பாடி சேர்ந்து பாடுமாறு பணித்தேன். என்ன ஆச்சரியம். ஆண்களுக்கான ஒரு கட்டை சுருதியிலே பெண்பிள்ளைகளும் சேர்ந்து பயபக்தியோடு கேட்டு வாங்கி நன்றாகப் பாடினார்கள். சரஸ்வதி குளிர்ந்தாள் கர்நாடக சங்கிதத்துக்கான நுழைவாயில் திறக்கப்பட்டது அன்றைய சூழலில் ஏதோ காத்திராப் பிரகாரம் நியமனம் நிகழ்ந்ததேயொழிய, ஆறுவருடம் கடமையாற்றிய பின் மாற்றம் நிகழும் பட்சத்தில் பிறிதொரு ஆசிரியரை மத்திய அரசு நியமனம் செய்வதென்ற ஒரு நிரந்தர திட்டம் வகுக்கப்படவில்லை. இதனை மலையக சமூகம் நன்றாகப் புரிந்து வைத்திருந்தது. எனவே நான், அரச பரீட்சைக்குச் சித்திரமும், இசை வளர்ச்சிக்கு சங்கீதமும், தமிழ்மொழி நீடு வாழ வேண்டும் என்பதற்காக இலக்கணத்தோடு தமிழும் கற்பித்து வந்தேன். சித்திரமும். தமிழும் எழுபத்தைந்து புள்ளிகளுக்கு மேல் எடுக்குமளவுக்கு மேலதிக வகுப்புக்களும் எடுத்து சாதாரண தரப் பரீட்சையில் எல்லோருமே டிசிஎஸ் சிறப்புடன் சித்தி பெற்றார்கள் இசை வாழ்ந்ததே ஒழிய பெறுபேறடையவில்லை.



## கலவரம்

இலங்கையையே உலுக்கிய கலவரம் வெடித்ததனால், யாழ்ப்பாணத்திலிருந்து கடமையாற்றிய அனைத்து ஆசிரியர்களும் சொந்த இடங்களிலே கடமைபுரிய வேண்டிய பாதுகாப்ப மேலோங்கியதால் மலையகத்தின் கலைவளர்ச்சியானது ஆரம்பத்திலேயே கருகியது எனலாம். கவலையளித்தது. எனவே சித்திரம் என்ற பாடமே மலையக அழகியல் கல்விக்குப் பொரும்பாலும் வரம் சேர்த்தது எனலாம். சங்கீத ஆசிரியர்களும், நடன ஆசிரியர்களும் போதிய அளவு இல்லாமையே பிரதான காரணமாகும். அல்லாமலும் மாகாண சபை வந்தபின் நியமனங்களின் எல்லை தீர்மானிக்கப்பட்டது. சங்கீத, நடன ஆசிரியர்களின் தேவையும் சேவையும் மலையகத்தை வாட்டியது.

தேசிய கல்வியியற் கல்லூரி மலையகத்தின் தேவையைப் முழுமையாக்காத போதும், பல மாணவர்களை உள்வாங்கும் ஒரு பல்கலைக் கழகம் மலையகத்தில் தமிழர்களுக்கு அமையும் பட்சத்தில் சாதாரண அல்லது உயர்தர கலைப்பாடப் பண்புகளோடு, சங்கீத நடனப் பட்டதாரிகளை உருவாக்குவதே சிறந்த பாதையாகும். வாய்ப்பாட்டு, வயலின், வீணை, பண்ணிசை, நடனம். கதகளி. ஓவியம், சித்திரம், சிற்பம், இலக்கியம், இலக்கணம், மரபுக்கவிதை ஆகிய கலைவளங்கள் மலையகத்தில் மாண்புற வழிசமைத்தால் இந்தியாவின் வரம் மலையகத்தில் வரலாறாகும் என்பதோடு, ஏனைய துறைகளுக்கம் பேறாகும் என்பது தூரநோக்காகும் இதைச் சிந்திப்பது எங்கே? செயலாற்றுவது எங்கே?




# மனிதரை வாழ்விக்கும் சிறப்பான நூல்கள்...




எஸ்.மல்லிகா

ஒவ்வொரு புத்தகத்தையும் படிக்குந்தோறும் மனிதர்கள் மாறுகின்றனர். அவர்களுக்குள் படிக்குந்தோறும் ஆயிரம் அணுகுண்டுகள் வெடிக்கும். இலட்சியக் கனவுகள் உயிர்பெற்றுத் துடிக்கும். எட்டவே முடியாத உயரத்துக்கும் அவர்களைத் தூக்கி நிறுத்துகின்ற ஆற்றல் வாய்ந்தவை புத்தகங்கள். இந்த வரிசையில் 'உலகில் மிகச்சிறந்த எட்டு சிவத்தலங்கள்' மற்றும் 'அன்புள்ள தம்பிக்கு 1000 உபதேசங்கள்' என்ற நூல்களும் அடக்கம் பெறுகின்றன.

தந்தை செல்வா நற்பணிமன்றத்தின் அனுசரணையுடன் அராலியூர் கலாபூசணம் வி.செல்வரத்தினம் (ஜே.பி) எழுதிய, 'உலகில் மிகச்சிறந்த எட்டு சிவத்தலங்கள்' மற்றும் 'அன்புள்ள தம்பிக்கு 1000 உபதேசங்கள்' என்ற இருநூல்களின் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த மாதம் 20ஆம் திகதி சிறப்புற இடம்பெற்றது. குறித்த சங்கத்தின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அமைச்சர் மனோ கணேசன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக மாகாணசபை உறுப்பினர் கே.ரி.குருசாமி, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ராஜேந்திரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் வேலணை வேணியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அராலியூர் கலாபூசணம் வி.செல்வரத்தினம் இதுவரை 15இற்கும் மேற்பட்ட ஆன்மிக நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறார். எழுதுவதைப் பெரும் பயனாகக் கருதிவரும் அவர், ஒரு சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். மக்கள் சேவை செய்வதை மகேசன் சேவையாகக் கருதிச் செயற்படும் செல்வரத்தினம், சிறந்த ஆன்மிக நூல் எழுத்தாளரும் கூட. மனிதர்கள் ஆன்மிக வழி நடந்தாலொழிய நாட்டினின்றும் குற்றச்செயல்கள் குறையாது என்று அடித்துக் கூறும் அவர், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் ஆன்மிக வாழ்வு பற்றி மனிதர்களுக்குப் போதித்து வருபவர். அவரது மனத்துக்கண் உதித்து, நூலுருப்பெறும் ஒவ்வொரு நூல்களுமே மனிதர்களை வாழ்விக்கும் மகத்தான நூல்கள்.





### அமைச்சர் உரையிலிருந்து...


"இன்று நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கு, மனிதர்கள் ஆன்மிக வழியை நாடாமையும் ஒரு காரணம். ஆன்மிக நூல்களை மனிதர்கள் படிக்குந்தோறும், அவர்களின் உள்ளத்து அழுக்குகள் கழுவப்படுகின்றன. மனிதர்கள் புனிதர்களாக மாறுகின்றனர். 'அன்புள்ள தம்பிக்கு 1000 உபதேசங்கள்' என்ற புத்தகத்திலிருந்து தினமும் பத்து பத்து உபதேசங்களைப் படித்தாலே ஒவ்வொரு மனிதனும் சிறந்திட முடியும். அதேபோன்று, 'உலகில் மிகச்சிறந்த எட்டு சிவத்தலங்கள்' என்ற நூலைப் படித்திட, வாக்கும் காயமும் புனிதமாகும். இத்தகைய நூல்களை இடையறாது எழுதிவரும் செல்வரத்தினம் ஐயாவுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்" என்றார்.



### நூலாசிரியரின் ஏற்புரையிலிருந்து...

"என் உள்ளத்தில் அன்றும் இன்றும் என்றும் அலைமோதிய வண்ணமாய் இருப்பவர் முழுமுதற் கடவுளான சிவபெருமான். இதனால், அவர் உறைகின்ற மிகச்சிறந்த எட்டு சிவத்தலங்களையும் நேரில் தரிசித்து சிவனருளைப் பெறவேண்டும் என்ற வேணவா ஏற்பட்டது. அந்த அவா கனவாகி, இலட்சியமாகி, பெருந் தாகமானது. அந்தத் தலங்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற இறைவனைத் தினமும் பிரார்த்திக்கலா னேன். இறையருள் கைகூடி வழி பிறந்தது. திருவண்ணாமலை, காசி, காளத்தி, மதுரை, சிதம்பரம், திருவாரூர், திருவிடைமருதூர் ஆகிய ஏழு தலங்களுக்கு நேரிலும், திருக்கைலாயத்துக்கு மானசீகமாகவும் சென்று இறைவனை வழிபட்டு அருள்பெற்றேன். அடியேன் பெற்ற இன்பத்தை அவனியிலுள்ள அனைவரும் பெறவேண்டும் என நினைத்து அந்த அனுபவத்தை 'உலகில் மிகச்சிறந்த எட்டு சிவத்தலங்கள்' என்ற நூலாக்கினேன். இந்தப் புத்தகத்தைத் தொட்டுப் படிப்பவர்கள், குறித்த எட்டுத் தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டு பயனை அடைவது திண்ணம்.

அதேபோன்று, 'அன்புள்ள தம்பிக்கு 1000 உபதேசங்கள்' என்ற நூல், இளைஞர்களை நல்வழிப்படுத்த நினைத்து எழுதியது. இன்றைய இளைஞர்கள், இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியதியை மறந்து எப்படியும் வாழலாம் என்று நினைத்து வாழ்கின்றனர். மனம்போன போக்கில் போகின்றனர். மது, மாது, பொய், களவு, கொலை எனும் பஞ்சமா பாதகங்களைத் துணிந்து செய்கின்றனர். புண்ணிய பூமியான இலங்கைத்திருநாட்டில் ஆன்மிகம் வறண்டு செல்கின்றது. இவற்றையெல்லாம் நினைத்துக் கவலையுற்று, இளைஞர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் இந்த நூலை எழுதியுள்ளேன். இளைஞர்கள் அனைவரும் படித்துப் பயனுற வேண்டிய நூல் இது"' என்றார்.



மானுடப் பிறவி அரிதானது. இப்பிறவி எடுத்த நாம் நன்னூல்கள் கற்று அவ்வழி நடப்பது மேலானது. இதிலும், நம்மை நமக்கு உணர்த்தும் ஆன்மிக நூல்களைக் கற்று ஒழுகுவது சிறப் பானது.

இத்தகைய ஆன்மிக நூல்களை இடையறாது எழுதி நம்மையெல்லாம் வாழநெறிப் படுத்தும் அயரா ஆளுமை தான் அராலியூர் வி. செல்வரத்தினம். அவரது எழுத்துலகம் மலர வாழ்த்துக்கள்.



தென்மராட்சி கல்வி வலய சித்திர பாட மாணவர்களால் ஆக்கப்பட்ட ஆக்கங்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் லதிகரன் என்னும் மாணவன் குமிழ்முனைப் பேனாவினால் உருவாக்கிய ஓவியங்கள் சில...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிரமச் சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள் செலவில் சிக்கனம் பேணுவது நல்லது.

**இடபம்:** மனதில் ஒருமுகத் தன்மையுடன் செயல்படுவீர்கள். நேர்மை மீதான நம்பிக்கை வளரும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**மிதுனம்:** கடின பணிகளையும் எளிதாக நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும். அனுகூலமான தீர்வுகள் உண்டாகும்.

**கடகம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்பட லாம். உங்கள் நலன் விரும்புவரிடம் தகுந்த ஆலோசனை பெறுவீர்கள். தொழில், வியா பாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும்.

**கன்னி:** முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உரு வாகும். வருமானம் அதிகரிக்கும். வீடு வாகனத் தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** பொறுமையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் குளறுபடி ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கலாம். எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும்.

**தனுசு:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கும்பம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்பட லாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனை வரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியா பாரத்தில் இருந்த தடையனைத்தும் மறையும். பணவரவு அதிகரிக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 |
| 4 | 8 | 1 | 5 | 3 | 2 | 9 | 7 | 6 |
| 5 | 2 | 6 | 1 | 7 | 9 | 8 | 4 | 3 |
| 8 | 1 | 3 | 2 | 9 | 5 | 4 | 6 | 7 |
| 7 | 5 | 4 | 3 | 6 | 8 | 1 | 9 | 2 |
| 9 | 6 | 2 | 7 | 4 | 1 | 5 | 3 | 8 |
| 6 | 4 | 5 | 8 | 1 | 3 | 7 | 2 | 9 |
| 1 | 9 | 8 | 6 | 2 | 7 | 3 | 5 | 4 |
| 2 | 3 | 7 | 9 | 5 | 4 | 6 | 8 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.




# ராஜமௌலியைக் கவர்ந்த அனிருத்தின் இசை

தனுஷின் 3 படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமான அனிருத் அந்தப் படத்தில் இடம்பெற்ற 'வை திஸ் கொலவெறி' பாடல் மூலம் பிரபலமானார்.

அதையடுத்து தொடர்ச்சியாக ஹிட் பாடல்களைக் கொடுத்து தற்போது விஜய், அஜித், சூர்யா, சிவகார்த்தியேன் என முன்னணி நடிகர்களின் படங்களுக்கு இசையமைத்து வருகிறார் அனிருத். இந்த நிலையில் தெலுங்கில், பவன் கல்யாண் நடிக்கும் 25ஆவது படம் மூலம் தடம் பதித்துள்ளார் அனிருத். இன்னும் பெயரிடப்படாத அந்தப் படத்தின் பாடல் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டது.

அது பெரிய அளவில் பிரபலமாகியிருக்கிறது. அந்தப் பாடலைக் கேட்ட பாகுபலி இயக்குநர் ராஜமௌலி அந்த மெலோடிப் பாடல் மிகச் சிறப்பாக இருப்பதாகப் புகழ்ந்து ருவிற் செய்துள்ளார்.

வாழ்க்கை கற்றுத் தரும்
பாடத்தை விட சிறந்த
பாடத்தை வேறு எவராலும்
கற்றுத் தர முடியாது...




கல்யாண வீட்டில் செருப்பை
தொலைத்தவன் எழுதிய கவிதை.....
"உள்ளே ஒரு ஜோடி சேர்ந்துவிட்டது"
"வெளியே ஒரு ஜோடி தொலைந்து
விட்டது"




வகுப்பறையில்,

**டீச்சர்:** பாலாஜி நீ பெரியவனான பின் எப்படி இருக்க ஆசைப்படுறாய்?

**பாலாஜி:** டீச்சர், நான் பெரிய பணக்காரனாக ஆசைப்படுறேன்....
ஒவ்வொரு பெரிய நகரத்திலும் என்னோட பிஸ்னஸ் நடக்கணும். எல்லா மாநில தலைநகரிலும் சொந்தமா... விலையுயர்ந்த பங்களா வாங்கணும்... எங்க போனாலும்... பிளைட்ல தான் போகணும்....
5 ஸ்டார் ஹோட்டல்ல தங்கணும்....
எனக்கு சேவகம் செய்ய எப்போதும் பத்து வேலையாட்கள் கூடவே இருக்கணும்....
உலகத்திலேயே விலைமதிப்பில்லாத வைரக்கல்லு என்கிட்டே இருக்கணும்.

**டீச்சர்:** போதும் பாலாஜி! ஸ்டூடண்ட்ஸ், இனிமே யாரும் இவ்ளோ நீளமா... சொல்லக்கூடாது. சுருக்கமா ஒரு வரியிலைதான் சொல்லணும்...
பூமிகா, நீ சொல்லு.... நீ என்னவா... ஆகணும்னு ஆசைப்படுறாய்?

**பூமிகா:** பாலாஜிக்கு பொண் டாட்டியாக ஆசைப்படுறேன்.

*பெண்கள் எப்பவும் உஷார் தான்..*



## தத்துவங்கள்

முதலில் நம்பு- பிறகு
ஆண்டவனிடம் வேண்டு

முதலில் பேசுவதைக் கேள்
பிறகு பேசு

முதலில் யோசி
பிறகு எழுது

முடியாது என்று விடுவதற்கு
முன்பு
முயற்சி செய்.

## மூத்த பெண் பத்திரிகையாளர் சுட்டுக்கொலை

மூத்த பெண் பத்திரிகையாளரான கவுரி லங்கேஷ், பெங்களூரில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று மாலை அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். கவுரி லங்கேஷ் (வயது- 55) பிரபல நாளிதழ்களில் பணியாற்றியவர். இவர் தற்போது வாரப் பத்திரிகை ஒன்றை நடத்தி வருகின்றார். துணிச்சல் மிக்க பத்திரிகையாளரான இவர் மதவாதத்துக்கு எதிராக தொடர்ந்து எழுதி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வாகனங்கள் வாடகைக்கு தேவை

நிறுவனத்திற்கு கார்கள், வான்கள் மாத வாடகைக்குத் தேவை.
தொடர்பு - 076 448 1101

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதியில் 4 பேர் கொண்ட ஒரு குடும்பம் இருப்பதற்குரிய வீடு வாடகைக்குத் தேவை. பலாலி வீதி, கே.கே.எஸ். வீதி, பருத்தித்துறை வீதியை அண்டிய பகுதிகளில் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 202 0634

### இயந்திரத்தினால் கல் அரிபவர் தேவை

யாழ். திருநெல்வேலியில் இடம் பெறுகின்ற கட்டுமான வேலையொன்றுக்கு வேலைத்தளத்தில் கல் அரிபவர் தேவை. இயந்திரமும், பலகைகளும் வழங்கப்படும்.
தொடர்பு - 077 347 8251

### கடை கட்டடம் வாடகைக்கு தேவை

பலாலி வீதி அல்லது பிரதான வீதியில் அமைந்த கடை கட்டடம் வாடகைக்கு தேவை.
077 486 9567

### காணி தேவை

அரியாலைக்கு இடைப்பட்ட A9 வீதியில் அமைந்த வெற்றுக்காணி தேவை
077 554 5843/ 077 662 3824


சீட்டிழுப்பு இலக்கம்: 597
சீட்டிழுப்பு திகதி: 05.09.2017
வெற்றி இலக்கங்கள்
48 50 51 55 B 11 29 30 42
ரூ. 10,000,000/-

ராசி
திகதி 05.09.2017
வெற்றி வாரம் 2181
வர்ணம் நீலம்
தனுசு
வெற்றி இலக்கங்கள்
02 13 26 60
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 150, 304/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
17 43 48 55
2017.09.08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk


## முதலாம் ஆண்டு திவச அழைப்பு



தோற்றம் 19.05.1986 மறைவு 17.08.2016

கடந்த துர்முகி வருடம் ஆவணி மாதம் 02 ஆம் நாள் 17.08.2016 அன்று இறை பதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர்**
**சிவகுமாரன் பிரணவன் (பிரனு)**

அவர்களின் முதலாவது ஆண்டுத் திவச நிகழ்வுகள் இன்று (06.09.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.


பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
ரகசியம் பாதுகாக்கப்படும்
ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302,
076 466 4153,
075 509 5887.


## துயர் பகிர்கின்றோம்



எமது சக ஆசிரியர்
**ந.நித்தியகரன்**
அவர்களின் அன்பு மாமியார்
**மார்க்கண்டு சிவனேசச்செல்வி**
அவர்கள் 04.09.2017 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி




**சிவராசா சிவசேகர்**
(சுதர்சன் வீடியோ சென்ரர் உரிமையாளர்)

கருணை மொழியும் கனிகளும்
கருத்து நிறைந்த வாக்கும்
மழலைக் கண்ணீர் துடைக்கும்
கரங்களும் நன்மை
மறவாத உச்சமும் கொண்டு
வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது
சிவராசா சிவசேகர்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

இராமலிங்கம் றோட், திருநெல்வேலி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### நமசிவாயம் செல்வநாயகம்

நந்தாவில் ஒழுங்கை, தாவடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் செல்வநாயகம் நேற்று (05.09.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் கந்தையா நமசிவாயம் - தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் தங்கராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் அருணகிரி, யோகேஸ்வரி காலஞ்சென்றவர்களான கணேசரட்ணம், கனகசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சுரேசினி (வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்), சந்திரகாசன் (பிரான்ஸ்), சுதர்சினி, தர்ஜினி (லண்டன்), பகீரதன் (கொலன்ட்) ஆகியோரின் தந்தையும் காங்கேயன், ஜெகன், சதீஸ் (லண்டன்), சயந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கோகுல், கரிணி, சகீன், விதுலாஜினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2017 வெள்ளிக்கிழமை மதியம் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீட்டுமுகவரி - இல.15, நந்தாவில் ஒழுங்கை,**
**தாவடி கிழக்கு, கொக்குவில்.**
**021 205 3019,**
**075 504 8028 (காங்கேயன்), 077 606 8579 (ஜெகன்)**

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருநாவுக்கரசு கணேசன்

**(திரு செந்தூரன் ரேடிங் கம்பனி Alpha)**

கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருநாவுக்கரசு கணேசன் கடந்த (04.09.2017) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் பூமணி செல்லப்பாக்கியம் ஆகியோரின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் செந்தூரன், ஆரூரன், கிருத்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்றவர்களான கன்னிகா பரமேஸ்வரி, சத்தியபாமா, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஹேமா, சுதர்சன், வித்தியா ஆகியோரின் பாசமிகு மாமனும் தரண்யா, ஹரேஷன், ஷாத்வி, ஷர்வின், ஷாகரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**305, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர். 076 446 0092







# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 31 . 03 . 1938



இறப்பு 07 . 08 . 2017

## அமரர் சாந்தநாயகி செல்லத்தம்பி

வரும் நடை உடைத்தே வழி காட்டினாள்....
வலி தாங்கி எம்மை வழி தூக்கினாள் .....
ஏதொரு பொழுதிலும் எமை தாங்கினாள்
எமன் வந்த வேளையில் ஏன் தூங்கினாள்...?
வந்தோரின் கரம் பற்றி வாழும் விதி சொன்னவள் -நாம்
வாடாது துளிர் விடத்தான் வரம் வேண்டி தொழுதவள்....

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்..

07.08.2017 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கின் மரண செய்தி அறிந்து தொலைபேசி வழியாகவும் நேரிலும் எமக்கு ஆறுதல் கூறி உதவிகள் பலசெய்து உறுதுணையாக நின்ற உற்றார்,உறவினர்,நண்பர்கள் ,அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை பணிவன்புடன் தெரிவித்து கொள்கின்றோம். அத்தோடு இன்று (06.09.2017) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரிகைகளிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தங்கள் குடும்ப சமேதராய் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

உதசன்-மிருசுவில் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வைரமுத்து பரமானந்தம்

(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசு)



மலர்வு 13.10.1926 உதிர்வு 04.09.2017

அராலியைப்பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பரமானந்தம் (04.09.2017) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கமுத்து தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராஜராஜேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தர்மபூபதியின் அன்புக் கணவரும் மணிசேகரன், மதி வதினி, மோகன சேகரன், உதய சேகரன், ஜெயசேகரன், நிர்மலசேகரன், தனசேகரன் ஆகி யோரின் அன்புத்தந்தையும் மாலாரமணி, சரவணபவன், அம்பிகாதேவி, கமலினி, சிவபவானி, கீதா, பிறேமினி ஆகி யோரின் பாசமிகு மாமனாரும் சரண்யா, கௌசல்யா, ஶ்ரீராம், ராம்பிரகாஷ், ஆரபி, கயல்விழி, யதுகுலன், கிருஸ்ணிகா, தமிழினி, கோகுலன், நீலேஷ், நிலக்ஷி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2017) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.K.S வீதி. துர்க்காபுரம்.
தெல்லிப்பழை.

தகவல்: குடும்பத்தினர்.
021 205 9829, 077 984 7694

# சிக்னஸ் எக்ஸ் கதிர்களோடு ஒளிரும் கருந்துளை



2010 ஆம் ஆண்டுகளிலேயே முதன் முறையாக ஒரு கருந்துளையின் இருப்பிடம் கண்டுபிடிக்கப்பட்டு நிச்சயிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. அதுவரை காலமும் கருந்துளைகள் கற்பனைப் பொருளாகவும் கருத்தளவில் மொழியப்படும் உருவகிப்பாக மட்டும் நிரூபிக்கப்பட்டதாவும் இருந்தது. ஆனாலும் பூமிக்கு மிக அண்மிதமாக 7 ஆயிரத்து 800 ஒளியாண்டுகளுக்கு அப்பாலாய் ‘சிக்னஸ்’ என்ற நட்சத்திரக் கூட்டத்திலேயே ஒரு கருந்துளை கண்டுபிடிக்கப்பட்டது.

பக்கத்திலிருக்கும் ஒரு அப்பாவியான நட்சத்திரத்தின் புற அடுக்கு வாயுவை அந்தக் கருந்துளையானது உறிஞ்சிக் கொண்டிருப்பது தெரியவந்தது. நேரடியாக அந்த நட்சத்திர வாயு அதனுள் நுழையாமல் சற்று சுற்றி வளைத்தபடி செல்வதால் அதிலிருந்து அபரிமிதமான எக்ஸ் கதிர்கள் வெளிப்பட்டு இந்தக் கருந்துளையைக் காட்டிக் கொடுத்தது.

கருந்துளைகள் என்பவை தமது சொந்த நிறையீர்ப்பு அழுத்தத்தால் சுருங்கி நசுக்கப்பட்டு ஒற்றைப் புள்ளியாக மாறிவிட்ட நட்சத்திரம். அளவில் சுருங்கிவிட்ட போதிலும் அதீதமான தனது நிறையீர்ப்பு விசையால் ஒளியைக் கூட தன்னிடமிருந்து வெளியேற அனுமதிப்பதில்லை. இதன் காரணமாகவே கருந்துளை எமது பார்வை வெளியில் தென்படுவதில்லை. உண்மையிலே அதன் இருப்பை மறைமுகமான அனுமானத்தின் பேரிலேயே உறுதி செய்ய வேண்டியிருக்கிறது.

தவிர விண்வெளி ஆய்வின் முடிவாக மேற்படி தகவல் தரல் சாட்சியமாக கிடைத்ததால் கருந்துளையின் இருப்பு என்பது நிச்சயமானதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பன்னாட்டு விண்வெளிக்குழு தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்கள்



### சிவசிவாபிள்ளை பன்னீர்ச் செல்வன்

( ஓய்வு பெற்ற கிராம சேவை அலுவலர்)

வண்ணார்பண்ணை, கலட்டி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசிவாபிள்ளை பன்னீர்ச் செல்வன் நேற்று (05.09.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்.

## தம்பையா இராசரத்தினம்



மாணிக்கப்பிள்ளையார் ஒழுங்கை, வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராசரத்தினம் நேற்று (05.09.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் ஆயுள்வேத வைத்தியர் தம்பையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் பாலாம்பிகையின் அன்புக்கணவரும் இராஜமோகன், இராஜ்குமார், ரஜனி (சுவிஸ்) காலஞ்சென்ற இராஜவினோதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் அன்னலட்சுமி காலஞ்சென்றவர்களான இராசம்மா, நடேசபிள்ளை, சங்கரப்பிள்ளை மற்றும் மங்கையற்கரசி, செல்லம்மா, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரரும் மனோகரன், கஜனி, சிவமாலா ஆகியோரின் மாமனும் மதுரா, மயூரிக்கா, மிதுலன், மிரானி, ஜதுஷன், கவிஸ்னா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2017) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 687 3285
077 716 8138

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1940 . 05 . 11



உதிர்வு 2017 . 09 . 03

### யேசுதாசன் சூசைரட்ணம்

(ஓய்வு நிலை விரிவுரையாளர் தலைவர் வணிக முகாமைத்துவபீடம் வவுனியா வளாகம் யாழ். பல்கலைக்கழகம் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கிளிநொச்சி மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியம் அகில இலங்கை வர்த்தக சமேளத்தின் வடக்கு கிழக்கு இணைப்பாளர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியம்.**

## ரிஜடியின்...

டுள்ளனர். எமது வழக்கை இடமாற்றம் செய்யவே பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் திட்டமிட்டு நாடகமாடுகின்றனர்"

போர்க் கைதிகளாக பிடிக்கப்பட்ட படையினரை படுகொலை செய்தார்கள் என்று குற்றச்சாட்டில் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கள் கைதி இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்களைச் சந்தித்த உறவினர்களிடமே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

செங்கன் எனப்படும் இராசதுரை திருவரன், மதியழகன் சுலக்சன், கணேசன் தர்சனன் மூவரும் அனுராதபுரம் சிறைச்சாலையில் 8 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2013ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை நடைபெற்று வருகின்றது. வழக்கை வவுனியா நீதிமன்றிலிருந்து மாற்றுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் அரசியல் கைதிகள் மூவரும், உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வழக்கு கடந்த தவணை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மேல் நீதிமன்ற நீதிபதி பா.சசிமகேந்திரன் இந்த மாதம் வவுனியா மேல் நீதிமன்றில் விசாரிப்பதற்கான திகதியை அறிவித்திருந்தார். இதனையடுத்து அவர்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், மேற்படி வழக்கில் சாட்சிகளாகப் பெயர் குறிப்பிட்டப்பட்டவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் மேற்படி புதுக் குற்றச்சாட்டை, அரசியல் கைதிகள் மூவரும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

"எமது வழக்கில் சாட்சியங்களாகப் பெயரிடப்பட்டவர்கள் இருவரே. அவர்களில் ஒருவர் தற்போது வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். மற்றையவர் மலையகத்தில் வசித்து வருகின்றார். கடந்த 4 மாதங்களுக்கு முன்னர், பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் சாட்சிகளை அணுகி, அவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக தெரிவிக்குமாறு கோரியுள்ளனர். இதனை நாம் அறிந்துள்ளோம். எமது வழக்கை திட்டமிட்ட ரீதியில் இடமாற்றுவதற்கே பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இப்படிப் போலியான குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்"என்று அரசியல் கைதிகள் மூவரும் எம்மிடம் தெரிவித்ததாக, அவர்களைச் சந்தித்த உறவினர்கள் குறிப்பிட்டனர்.

(வ-5)

## இடைக்கால...

குழுவின் இன்றைய கூட்டத்தில் இதற்கான திகதி தீர்மானிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையின் வரைவு அதனோடு இணைந்த பின்னிணைப்புச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நாடாளுமன்றத்துக்கு என்ன வடிவில் இடைக்கால அறிக்கை வரைவு சமர்பிக்கப்படவுள்ளதோ அந்த வடிவில் வழிநடத்தல் குழுவின் இன்றைய அமர்வில் ஆராயப்படவுள்ளது. அதனை சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்ட பின்னர், அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பிப்பதற்கான திகதி தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதமே, வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கட்சிகளின் இணக்கப்பாடு இன்மையால், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குழப்பத்தால் இந்த நடவடிக்கையில் பெரும் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இடைக்கால அறிக்கைக்குப் பின்னிணைப்பாக தமது கட்சிகளின் நிலைப்பாட்டை வழங்குவதற்குக் கூட சுதந்திரக் கட்சி பின்னடித்து வந்தது. இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்த அணி உள்ளிட்ட சகல தரப்புகளும் தமது பின்னிணைப்புக்களை கடந்த மாத இறுதியில் வழங்கியிருந்தன.

இந்தப் பின்னிணைப்புக்களை இடைக்கால அறிக்கையுடன் எப்படி இணைப்பது? என்பது தொடர்பில் நேற்று முன்தினம் முக்கிய கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய வடிவில், இடைக்கால அறிக்கை அதனுடன் பின்னிணைப்புக்கள் என்பனவும் சேர்க்கப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளன. இறுதி செய்யப்பட்ட வடிவமே இன்றைய வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (வ-5)

## சரத்...

இந்தத் தகவலை மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் டி சொய்ஸா, 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.

முன்னாள் இராணுவத் தளபதியும் பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவராகவும் செயற்பட்ட ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக போர்க் குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்சல் சரத் பொன்சேகா, ஜெனரல் ஜெகத் ஜயசூரிய குற்றமிழைத்துள்ளார். அதற்குரிய ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன' என்று அறிவிப்பு விடுத்திருந்தார்.

இலங்கை அரசியல் களத்தில் அவரின் அறிவிப்பு பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் கிளப்பி விட்டுள்ளது. பொன்சேகாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு மகிந்த அணி தயாராகி வருகின்றது. இன்றைய கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பம் திரட்டும் பணி ஆரம்பமாகும் என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை, தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுள்ள சரத் பொன்சேகா அரசியல் ரீதியில் வங்குரோத்து மட்டத்துக்கு வந்துள்ளார். அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தி பிரேரணை கொண்டுவரப்பட்டால் அவரை பிரபல்யப்படுத்தும் நடவடிக்கையாக அது அமைந்துவிடும். நம்பிக்கையில்லாப் பிரேரணை அவசியமில்லை, என்ற கருத்தும் மகிந்த அணியிலுள்ள சில உறுப்பினர்கள் மத்தியில் இருக்கின்றது.

அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராகவும் மகிந்த அணி சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## நான்...

எதிராக பிரேசில் நீதிமன்றில் போர்க்குற்ற விசாரணை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவருக்குச் சார்பாக பலரும் ஆதரவுக் குரல் எழுப்பி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே ஜெகத் ஜயசூரியவை அலைபேசிமூலம் தொடர்பு கொண்ட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, பன்னாட்டு மட்டத்தில் விசாரணை நடத்தவேண்டிய நிலை ஏற்படுமானால் இறுதிப்போரின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியை வகித்தவன் என்ற வகையில் உங்களுக்கு சார்பாகச் செயற்படுவேன். அத்துடன், பன்னாட்டுச் சட்ட திட்டங்கள் தொடர்பிலும் ஆலோசனைகள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஜெகத் ஜயசூரிய குற்றமிழைப்பதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் ஆதரவு இருந்திருக்க வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## மைத்திரி...

யுள்ளதாலேயே அமைச்சர்களுடன் பேச்சு நடத்தி முக்கிய சில முடிவுகளை எடுப்பதற்காக ஒத்திவைக்கப்பட்ட சந்திப்பை இந்த வாரத்திலேயே நடத்துவதற்கு அரச தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

அரச தலைவர் செயலகத்திலிருந்து நேற்று முன்தினம் அலைபேசி ஊடாக சகல அமைச்சர்களுக்கும் இன்றைய தினம் அமைச்சரவைக் கூட்டம் இருப்பதாகவும், அதில் கட்டாயம் பங்கேற்குமாறும் அரச தலைவர் பணித்துள்ளார் எனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (வ-5)

## வடக்கில்...

டங்களின் பின்னர் கும்பகர்ணன் போல் தூங்கப் போய்விட்டதா? என்ற கேள்வி எழுந்ததால்த் தான் நாங்கள் விழிக்கத் தொடங்கியுள்ளோம்" என்று அவர் தனது உரையை ஆரம்பித்தார்.

அரசமைப்பு விடயத்தில் பெரும்பான்மையினர் முகத்தைச் சுளிப்பார்கள் என்பதால் எமது தேவைகளையும், முன்னுரிமைகளையும், வேணவாக்களையும், நோக்குகளையும் மூட்டை கட்டி வைத்தால் எமது தனித்துவம் பறிபோய்விடும்" என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

"வெறுமனே அரைகுறைத் தீர்வை ஏற்றுக் கொள்வது எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று. பிரச்சினையைத் தீர்ப்போம் எனக் கூறிக் கொண்டு ஒரு பெயரில் என்ன இருக்கின்றது என்று கூறிக் கொண்டு குறைந்தளவு அதிகாரப் பரவலாக்கம் ஒன்றுடன் இணங்கிச் செல்வதைவிட தமிழ் மக்களின் வேணவாக்களையும் அவர்களது நீண்ட கால அரசியல் கோரிக்கைகளையும் முன்வைத்து உரிய தீர்வு வரும் வரை சளைக்காது முன்னெடுத்துச் செல்வது அவசியமானதொன்று என்றே நான் கருதுகின்றேன்" என்றார்.

போர்க்குற்ற விசாரணை தொடர்பில் முதலமைச்சர் குறிப்பிடுகையில், "எமது இராணுவ வீரர்களை விட்டுக் கொடுக்க மாட்டோம். அவர்களுக்கெதிராக விசாரணை செய்ய விடமாட்டோம் என்று அமைச்சர்கள் மட்டத்தில், அரச தலைவர் மட்டத்தில் அடித்துக் கூறும் போது தமது இராணுவ வீரர்கள் போர்க் குற்றங்களில் கட்டாயமாக ஈடுபட்டிருந்தார்கள் என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றார்கள் தெற்கத்தைய அரசியல்த் தலைவர்கள். அது எமக்கு சார்பாக அமைகின்றது. தற்போது தளபதி சரத் பொன்சேகா, ஜெகத் ஜயசூரிய போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்பது பற்றி சாட்சியம் அளிக்கப்போவதாக பகிரங்கமாகக் கூறியுள்ளார். குற்றவாளிகள் தாமாகவே அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றார்கள். பன்னாட்டு நீதிபதிகளுடன் போர்க்குற்றவிசாரணையானது விரைவில் நடைபெற வேண்டும் என்று கோருகின்றோம். அரச தலைவர் தமது போர் வீரர்களை எப்படியும் காப்பாற்றுவோம் என்று கூறும் போது உள்ளூர் நீதிபதிகள் உரியவாறு நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்று நாங்கள் எப்படி எதிர்பார்க்க முடியுமா? என்று கேள்வி எழுப்பினார்.

பொன்சேகா கூறியது தொடர்பில் அவதானம் தேவை என்று தெரிவித்த முதலமைச்சர், அவர் தனது சொந்த வாழ்க்கையில் நடைபெற்ற கசப்பான அனுபவங்களின் பிரதிபலிப்பாகவே ஜெகத் தொடர்பில் கூறியுள்ளார் என்பதை மறந்து விடக் கூடாது என்றார்.

இறுதியாக, 'அறிவு வேறு சாமர்த்தியம் வேறு என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எம்மிடம் அறிவு உள்ளது, ஆற்றல் உள்ளது. திறமை உள்ளது. ஆனால் எந்த அளவுக்கு சாமர்த்தியம் உள்ளது என்பதை நீங்களே பரிசீலித்துப்பார்த்து கொள்ள வேண்டும். நான் இவ்வாறு கூறுவதால் என்னிடம் சாமர்த்தியம் இருக்கின்றது என்று கூறவரவில்லை. அவ்வாறான அரசியல் சாமர்த்தியம் என்னிடம் இல்லை என்பதை வெளிப்படையாகவே நான் ஏற்றுக் கொள்வேன்.

மற்றவர்களின் சாமர்த்தியத்தை அடையாளம் காணும் அருகதை எனக்குண்டு என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். சிங்கள மக்களின் தலைவர்களிடம் சாமர்த்தியம் உள்ளது. அதே போல் காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமானிடம் சாமர்த்தியம் இருந்தது. ஆகவே அதை உணர்ந்து நாங்கள் எங்கள் காய்களை நகர்த்த வேண்டும். அதற்கு எமது அடிப்படைகளில் விடாப்பிடித்தன்மையும் எம்முள் ஒற்றுமையும் அத்தியாவசியம்.

எமக்கு ஆதரவாக அண்மையில் தரப்பட்ட கூட்டாட்சி பற்றிய உயர் நீதிமன்றத் தீர்ப்பு அமைகின்றது. அவர்கள் என்ன நினைப்பார்கள் என்றும் கூட்டாட்சிப் பற்றிப் பேசுவது தகாததென்றும்எம்மவர் இனிக்கூறத்தேவையில்லை. அந்தத் தீர்ப்பை முன்வைத்தே எமது காரியங்களை நாம் முன் நடத்திச் செல்ல வேண்டும்" என்றார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். (வ-5.101)

## மகிந்த...

பியின் முன்னாள் உறுப்பினர்களும் ஆதரவாளர்களுமாவர்.

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மகிந்த ராஜபக்சவின் சகோதரரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ச ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்டு பொதுஜன பெரமுன கட்சி ஆரம்பிக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ச இன்னமும் அந்தக் கட்சியின் உறுப்பினராக இணையவில்லை.

தமது கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக ஈ.பி.டி.பியின் ஆதரவாளர் தம்பித்துரை ரஜீவை பசில் ராஜபக்ச நேற்று நியமித்தார். ஈபிடிபியினால் நடத்தப்பட்ட மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பதிகாரியாக இருந்தவர் ரஜீவ். நேற்றைய தினமே யாழ்ப்பாணத்தில் பிரதேச சபை ரீதியாக தொகுதி அமைப்பாளர்களும் கட்சிக்கு நியமிக்கப்பட்டனர்.

கொழும்பு பத்திரமுல்லயிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. தம்பித்துரை ரஜீவ், மகிந்தவின் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். அவருடன் பிரதேச சபை ரீதியாக தொகுதி அமைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் (வேம்படி பாடசாலைக்கு அண்மையாக) அமைந்துள்ள, முன்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவகம் அமைந்திருந்த கட்டடத்தில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு கட்சியின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டதன் பின்னர் பசில் ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் க.கமலேந்திரன், முன்னாள் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் போல், வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் திரிலோகநாதன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-வ-101)

## ஒரு வருடத்துள்...

20ஆவது திருத்தச் சட்டவரைவை மாற்றியமைப்பது தொடர்பில் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளுடன் கடந்த இரு தினங்களாக அலரி மாளிகையில் முக்கிய கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இதில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அமைச்சர் பைசர் முஸ்தப்பா, அமைச்சர் ரவூப் ஹக்கீம் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சார்ந்தோர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இரண்டுநாள் தொடர் கலந்துரையாடலின் அடிப்படையில் 20ஆவது திருத்தச் சட்டவரைவில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு அரசு இணங்கியுள்ளது இறங்கிவந்துள்ளது.

இந்த முடிவின்படி இந்த மாதம் கலைக்கப்பட வேண்டிய கிழக்கு மாகாணசபை, வடமத்திய மாகாணசபை, சப்ரகமுவ மாகாணசபை ஆகியவற்றின் ஆயுள் காலம் நீடிக்கப் போகின்றது. ஊவா மற்றும் தென் மாகாணசபைகளின் ஆயுள்காலம் 2019ஆம் ஆண்டு நிறைவடைய வேண்டிய நிலையில் ஒரு ஆண்டு முன்பாக 2018 ஆம் ஆண்டே கலைக்கப்படும்.

மாகாணசபைகளின் 5 வருட ஆயுள் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஏதேனும் ஒரு மாகாணசபை கலைக்கப்பட்டால், அந்த மாகாண சபைக்கு இடைக்காலத் தேர்தல் நடத்தப்படும். இடைக்காலத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் தரப்பு, 5 வருடங்களில் எஞ்சிய காலப்பகுதியில் மாத்திரமே ஆட்சியிலிருக்கும். எஞ்சியிருக்கும் காலம் ஒன்றரை வருடங்களுக்குக் குறைவாக இருக்குமாக இருந்தால், இடைக்காலத் தேர்தலும் நடத்தப்படாது.

(உ-5)

## பொன்சேகா...

நெடியவன், அடேல் பாலசிங்கம், விநாயகம் ஆகியோரும், மறுவாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் முன்னாள் போராளிகளும் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லையா? தனிப்பட்ட ரீதியில் குப்பைகளை பொன்சேகா கிளறக் கூடாது.

இராணுவத்தினரின் போர்க்குற்றங்களை விசாரிக்க பொன்சேகா கோருவாராயின் விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் முன்னாள் போராளிகளை மீண்டும் கைது செய்ய வேண்டும். நாங்கள் அந்த இருண்ட யுகத்துக்குச் செல்ல வேண்டுமா? பொன்சேகா தனது நற்பெயரைக் கெடுத்து அடுத்தவர்கள் மீது விரல் நீட்டக்கூடாது. மீதி நான்கு விரல்களும் தன்னை நோக்கியே திரும்பி உள்ளன என்பதை அவர் மறந்துவிடக் கூடாது. இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதைப் பார்த்துக் கொண்டு நாங்கள் சும்மா இருக்கப் போவதில்லை - என்றார். (வ-5)

# இன்றைய மோதல்கள்

### வளர்மதி ச.ச.நி. கரப்பந்தாட்டம்

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அன்னை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### மைக்கல் வி.கழக கால்பந்துத் தொடர்

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் சென். மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### யாழ். மாவட்ட தாச்சித் தொடர்

யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புளியங்கூடல் மகமாரி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# இளைஞர், சிறிஅம்பாள் அணிகள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 6

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் சிறி அம்பாள் விளை யாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டுள்ளன.

சிவானந்தா - இளைஞர்

அன்ரனிஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பருத்தித்துறை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமி டங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 4:3 என்ற கோல் கணக்கில் வென்றது அண்ணா சிலையடி அணி. ஆட்டநாயகனாக அண்ணா சிலையடி அணியின் சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறிஅம்பாள் - கருணாகரன்

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகமும் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற் பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது சிறி அம்பாள் அணி. ஆட்ட நாயகனாக சரண்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (ம-108)

# சென். ஜோன்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், செப். 6

பிரிட்டன் தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய ரி-20 துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக செரோபன் 25 ஓட்டங்களையும், டினோசன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மதுசன் 3 இலக்குகளையும், இயலரசன், குகசதுஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் 19 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். ஜோன்ஸ். அதிகபட்சமாக நிதுசன் 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் கபில்ராஜ், அபினாஸ், சுபிட்சன் மூவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் செரோபன், சிறந்த பந்து வீச்சாளராக யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணியின் மதுசன், சிறந்த களத்தடுப்பாளராக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் செளமியன். ஆட்ட நாயகனாக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் கபில் ராஜ், சகலதுறை வீரராக சென். ஜோன்ஸ் அணியின் சுபிட்சன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)

# திருமகள் ச.ச.நி. கரப்பந்து முடிவு

யாழ்ப்பாணம், செப். 6

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் சில.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதியது. இதில் நாயன்மார்கட்டு பாரதி அணி 25:21, 26:24 என்ற செற் கணக்கில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இந்து இளைஞர் 'பி' அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய அணி மோதியது. இந்து இளைஞர் 'பி' அணி 25:16, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு செற்களையும் கைப்பற்றி வெற்றிபெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதியது. இதில் புத்தூர் கலைமதி அணி 25:19, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு செற்களையும் கைப்பற்றி வெற்றிபெற்றது. (ம-23)

# ஆஸி. வீரர்கள் சென்ற பேருந்து மீது கல்வீச்சு



பங்களாதேஷில், ஆஸ்திரேலிய வீரர்கள் பயணித்த பேருந்து மீது கல்வீசித் தாக்குதல் நடத்தியமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி அங்கு இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவருகிறது. இரண்டாவது ஆட்டம் சிட்டகொங்கில் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தின முதல் நாள் ஆட்டம் முடிந்த பின்னர் ஆஸ்திரேலிய வீரர்கள் தமது விடுதிக்குத் திரும்பியபோது அவர்கள் பயணித்த பேருந்து மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதையடுத்து ஆஸ்திரேலிய வீரர்களின் பாதுகாப்பு இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

"ஆஸ்திரேலிய அணியின் பேருந்து மீது நடத்தப்பட்ட தாக்குதல் தற்செயலானது. எமது அணிக்கு தற்போது உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது" என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது சமூக வலைத்தளங்களில் குறிப்பிட்டுள்ளது. (ம)



## ஓய்வு என்பது தற்போதில்லை

*அன்டர்சன் தெரிவிப்பு*

இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அன்டர்சன் "ஓய்வு குறித்து தற்போது சிந்திக்கவில்லை" என்று தெரிவித்தார்.

அன்டர்சனுக்கு தற்போது 35 வயதாகின்றது. அவரது ஓய்வு தொடர்பில் பலகருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலையில் தனது ஓய்வு தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார் அண்டர்சன்.

"40 வயதுவரை என்னால் விளையாட முடியாது என்பதற்கு, எந்தக் காரணமும் இல்லை. எனது கிரிக்கெட் வாழ்வில், நான் உச்சபட்ச திறமையுள்ள பந்துவீச்சாளராகவும் தொடர்ச்சியுடன் பந்துவீசுபவராகவும், தற்போதே உள்ளேன். 2020/21 ஆம் ஆண்டு வரை இடம்பெறவுள்ள ஆஷஸ் தொடரில் நான் விளையாட மாட்டேன் என, என்னால் தெரிவிக்க இயலாது. எனவே 40 வயதுக்குப் பின்னரேயே ஓய்வு என மேலும் தெரிவித்தார் அன்டர்சன்.

அண்டர்சன் தற்போது 497 டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார் என மேலும் குறிப்பிடத்தக்கது. (ம)

*ஒரேயொரு வெற்றியைப் பதிவுசெய்ய*

# இலங்கை அணிக்கு இறுதிச் சந்தர்ப்பம்



இந்தியாவுக்கு எதிரான இரு தரப்புத் தொடர்களில் குறைந்தது ஒரு வெற்றியையாவது வெற்றிபெறுவதற்கு இலங்கை அணிக்கு உள்ள இறுதிச் சந்தர்ப்பமாக இன்றைய ரி-20 ஆட்டம் அமைந்துள்ளது.

"இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முன்னதாக முடிவடைந்த டெஸ்ட் தொடரை 3:0 என்றும், தொடர்ந்து நடைபெற்ற ஒரு நாள் தொடரை 5:0 என்றும் இந்திய அணி கைப்பற்றியது. இந்த இரண்டு தொடர்களிலும் இந்தியாவை எதிர்த்து இலங்கை அணியால் போராடக்கூட முடியவில்லை. இரண்டு தொடரிலும் இலங்கை அணி வழித்துடைக்கப்பட்டது. இரு அணிகளுக்கும் இடையி லான ஒரேயொரு ரி-20 ஆட்டம் கொழும்பில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்திலாவது இலங்கை அணி வெற்றிபெறுமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்றைய ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெறும் என்ற நம்பிக்கையை அந்த அணியின் தலைவர் தரங்க வெளிப்படுத்தியுள்ளார். அதற்கேற்ப அவர் அணியில் பல அதிரடி மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான இலங்கை ரி-20 அணி விவரம் தரங்க (தலைவர்), மத்தியூஸ், டிக்வெல்ல, முனவீர, சானக, சிறிவர்தன, ஹசரன்க, அகில தனஞ்சய, வண்டர்சே, பிரசன்னா, இசுரு உதான, திசர பெரேரா, மலிங்க, லக்மல், விக்ரம் சஞ்சய. (ம)

## தனது பெறுபேறுகளில் மெசூட் ஏஸில் திருப்தி

ஆர்சனல் அணியின் மத்திய வீரர் மெசூட் ஏஸில், சமீப காலமாக தடுமாறுகிறார் என்று விமர்சிக்கப்படும் நிலையில், அவர் தனது பெறுபேறுகளை நியாயப்படுத்தியுள்ளார்.

"என்னைப்பற்றி சமீப காலமாக முன்வைக்கப்படும் விமர்சனங்களை நான் நன்கு அறிவேன். அதிக விலை, அதிக பேராசை, சிறப்பான உடல்மொழியின்மை, போராட்ட குணம் இன்மை இவைதான் என்னைப்பற்றி மக்கள் தெரிவித்த விமர்சனங்களாகும். இந்தக் கருத்துகளில் சில, என்னைப் பற்றித் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்டன. விமர்சனம் என்பது, எல்லா கால்பந்தாட்ட வீரர்களும் சந்திக்கும் ஒன்று என்றபோதிலும், என்மீதான விமர்சனங்கள் ஏற்கத்தக்கதாக இல்லை. அவை ஒருதலைப்பட்டசமாவை என்று எண்ணத் தோன்றுகிறது" என ஏஸில் மேலும் தெரிவித்தார். (ம)



## இறுதி டெஸ்ட் நாளையதினம்

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களில் முதலாவதில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இரண்டாவதில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றது.

இதனால் இரு அணிகளும் 1:1 என்ற நிலையில் உள்ளன. கிண்ணத்தைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் லோட்ஸில் நாளை நடைபெறவுள்ளது.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக மேற்கிந்தியத் தீவுகள் அணி முக்கியமான அணிகளை வீழ்த்தி கிண்ணமெதையும் கைப்பற்றவில்லை. இந்த நிலையில் இறுதி டெஸ்ட் ஆட்டம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஒன்றாக அமைந்துள்ளது.

கடந்த ஆட்டத்தில் கிடைத்த தோல்வியின் பின்னர் "அடுத்த ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவோம்" என்று இங்கிலாந்தின் அணித் தலைவர் ரூட் தெரிவித்திருந்தார்.

கடந்த ஆட்டத்தில் கிடைத்த வெற்றியின் பின்னர், "அடுத்த ஆட்டத்திலும் வெற்றிபெற்று எமது ரசிகர்களின் நீண்டநாள் காத்திருப்பை நிறைவேற்றுவோம்" என்று தீவுகளின் அணித்தலைவர் கோல்டர் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்தில் வைத்து மேற்கிந்தியத் தீவுகள் கிண்ணத்தைக் கைப்பற்றுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். (ம)

# இமாலயப் பலமுடன் ஆஸ்திரேலிய அணி





பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி மிகப்பலம்பெற்று விளங்குகிறது.

சிட்டகொங்கில் இந்த ஆட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணித் தலைவர் ரகிம் மற்றும் ரகுமான் இருவரும் சிறந்த ஆட்டத்தை வழங்கி ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். நேற்றுமுன்தின நாள் முடிவில் பங்களாதேஷ் அணி 6 இலக்குகளை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரகிம் 62 ஓட்டங்களுடனும், நசிர் கொசைன் 19 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர்.

68 ஓட்டங்களுடன் ரகிமை போல்ட் முறையில் வீழ்த்தினார் லையன். நசிர் கொசைன் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனை பலவீனமாகக் காணப்பட்டது. மிராஸ் 11 ஓட்டங்களுடனும், தயுல் இஸ்லாம் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 5 ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் நசிர் கொசைன். முடிவில் 305 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ். பந்துவீச்சில் லையன் 7 இலக்குகளையும், அகர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்க ரென்சொவ் மற்றும் வோர்ணர்.

4 ஓட்டங்களுடன் ரென்சொவை வீழ்த்தினார் ரகுமான். வோர்ணர், சிமித் இருவரும் இணைந்து ஆஸ்திரேலியாவைக் கரைசேர்க்கும் முயற்சியில் தீவிரம் காட்டினர். அதில் வெற்றியும் கண்டனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். அணி 98 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அணித்தலைவர் சிமித். வோர்ணர், ஹான்ட்ஸ்கொம் இணைந்து பங்களாதேஷுக்குப் பலத்த அடியைக் கொடுத்தனர். அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் கடந்தார் ஹான்ட்ஸ்கொம். நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 2 இலக்குகளை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வோர்ணர் 88 ஓட்டங்களுடனும், ஹான்ட்ஸ்கொம் 69 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# இலங்கையின் துடுப்பாட்டம் தொடர்பில் தலைவர் தரங்க பெரும் ஏமாற்றம்



இந்திய அணிக்கு எதிரான ஆட்டங்களில் இலங்கை அணியின் துடுப்பாட்டப் பெறுபேறுகள் தொடர்பில் அந்த அணியின் தலைவர் தரங்க ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார். இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி-20 ஆட்டம் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. இந்த நிலையில் துடுப்பாட்ட வரிசை தொடர்பில் தனது கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார் தரங்க.

"கடந்த ஆட்டங்களில் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்த நாம் தவறியிருந்தோம். நாங்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடவில்லை. நாங்கள் சிறப்பாகப் பந்து வீசியிருக்கவில்லை. நாங்கள் சிறப்பாகக் களத்தடுப்பில் ஈடுபட்டிருக்கவில்லை. தொடரில் நாங்கள், முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டோம். துடுப்பாட்டம் குறித்து ஏமாற்றமடைகிறேன். இந்திய அணி, தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்தியது. ஆனால் நாம் ஓட்ட எண்ணிக்கையைப் பெரியளவில் பெறத் தவறினோம். 5 ஒருநாள் ஆட்டங்களில் ஒரு தடவையேனும் நாங்கள் 250 ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை" என தரங்க மேலும் தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இலங்கை அணியின் பெறுபேறுகளை உயர்த்தும்பொருட்டு அடுத்த ஆறு மாதங்களுக்கு தான் டெஸ்ட் ஆட்டங்களில் களமிறங்கப் போவதில்லை என்று தரங்க ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## காலிறுதியில் ரபேல் நடால்



அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் நடாலை எதிர்த்து உக்ரைன் வீரர் அலெக்சாண்டர் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:2, 6:4, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ரபேல் நடால். (ம)

## கால்பந்தாட்ட உலகக்கிண்ணம் தகுதி பெற்றது பெல்ஜியம்



ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் பங்குபற்றுவதற்கு தகுதி பெற்றுள்ள முதலாவது ஐரோப்பிய அணியாக மாறியுள்ளது பெல்ஜியம். நேற்றுமுன்தினம் நடைபெற்ற தகுதிகாண் ஆட்டமொன்றில் கிரேக்கத்தை எதிர்த்து பெல்ஜியம் அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணி வெற்றிபெற்றது. தொடரை நடத்தும் நடான ரஷ்யா, பிரேசில், ஜப்பான், ஈரான், மெக்சிக்கோ ஆகிய அணிகள் ஏற்கனவே உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில் இந்த வரிசையில் பெல்ஜியமும் இணைந்தது. (ம)

Architectural CAD Centre
Personal & Group Classes
SPEED BATCH IN
Auto CAD
Lecture by: K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D & 3D Drawing)
University of Peradeniya
Cert.in Auto CAD(Advance 3D Modeling)
University of Moratuwa
Sat.Day Sun Day
Link:071 8217972, 077 5116320

பதவி வெற்றிடங்கள்
2017 A/L எழுதிய மாணவர்களே!
எமது கிளைகளுக்கு யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களிலிருந்து அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச கம்பனியில் பணிபுரிய ஆள்கள் தேவை.
*வயதெல்லை 18 - 30
*அனுபவம் அவசிமற்றது
*தங்குமிடம் இலவசம்
*தகுந்த பயிற்சியளித்து உள்வாங்கப்படுவார்கள்
தொடர்பு - 077 157 1699, 021 567 9001

வெல்லுங்கள் பரிசு- Rs.8,000 A/L 2017 மாணவர்க்கானது
?' குறியினால் காட்டப்பட்டுள்ள சதுரத்தினுள் வர வேண்டிய மிகச் சரியான கோலத்தை (a), (b), (c), (d) ஆகிய உருவங்களில் இருந்து தெரிவு செய்க.
போட்டியில் பங்குபற்ற உங்கள் விடை, முழுப்பெயர், முகவரி என்பவற்றை 759520941 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பவும்.
(a) (b) (c) (d)
வெற்றியாளர்களுக்கு 2 கற்கைநெறிகளை கற்பதற்கான Rs.4,000 பெறுமதியான 2 Vouchers
பரிசுகளை வழங்குவது MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

English Courses for the Real World
அடிப்படையிலிருந்து இலகுவான முறையில் தெளிவாக முழுமையாக கற்பதற்கு
Spoken English
Diploma in English
Trainer Training Diploma
Spoken Sinhala
மிகக்குறைந்த கட்டணம் | பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்
ஆரம்பம் 09.09.2017 (சனி) 9.00 am Weekends
11.09.2017 (திங்கள்) 9.00 am Week days
Jaffna 021 221 2410 (பல்கலை எதிரில்)
தொடர்புகளுக்கு: Mob:076 697 3040
ELAS
Chunnakam 021 224 3660 (Union Bank அருகில்)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
W.H.Q. கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல், மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 10-09-2017 ஞாயிறு காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 11-09-2017 திங்கள் காலை 10.00 மணி
☞ இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகள் அதனை உறுதிப்படுத்தும் பட்சத்தில் கட்டணத்தில் 20% கழிவு வழங்கப்படும். மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

K B K ACCOUNTING CENTRE
1. கந்தர்மடச்சந்தி (Tue & Fri → 3-6 P.m)
2. கொழும்புத்துறை (Sat & San → 2-6 P.m)
A/L - 2018 & A/L - 2019
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 08.09.2017 - 3 மணி
குறிப்பு:
எனது மாதிரி பரீட்சை வினாத்தாளில் இருந்து 90% ஆன வினாக்கள் A/L 2017 பரீட்சை வினாத்தாளில் உள்ளடங்கியிருந்தது.
உயர்தரக் கணக்கீடு
அன்றும்...... இன்றும்...... என்றென்றும்
MR.BALAKAJEN
Mobil - 076 565 5956

பணியாளர்கள் தேவை
சிட்டை எழுதுனர், விற்பனையாளர் — Hard ware இல் அனுபவமுள்ள ஆண்கள் மட்டும். வயதெல்லை 40-60
Painter, மின்னிணைப்பாளர் — அனுபவமுள்ளவர்கள் மட்டும்.
076 780 6942

வேலையாள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றுக்கு (Cook) இந்தியன் பராட்டா, சப்பாத்தி, மசாலாதோசை, பிறைட்றைஸ், கொத்து போடத் தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிடம் இலவசம்.
தொடர்பு - 077 328 7485

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.